# காவேரி

December - 1945
பார்த்திப-கார்த்திகை

600
27 DEC 1945
MADRAS

-\6

Widest Circulated Monthly

# குறித்த நேரத்தில் லாரிகள்




**தென்னிந்தியாவின் 21 பிரதான நகரங்களை**
**கால அட்டவணைப்படி இணைப்பது T.V.S. லாரி**
**சர்வீஸ்**

## T.V. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் லிட்

**மதுரை & மதராஸ்.**

T.V.S.K.18A

இந்திய மக்களிடையே
புகழ்பெற்று விளங்கும் நமது
வாசனைத் திரவியங்கள் சுமார் அரை
நூற்ருண்டுகளாக விநியோகிக்
கப்பட்டு வருகின்றன.

27 DEC 194
MADRAS

விஜயபுரம்
# கே. டி. ஆர்.

சரக்குகள்—பன்னீர், அரைக்கீரை, சந்தனாதி தைலங்கள், கிருஷ்ண அகர்பத்தி, ராஜா பற்பொடி — மணத்திற்கும் குணத்திற்கும் பெயர்போனவை — எங்கும் கிடைக்கும்

**K·T·R**
**சந்தனாதி தைலம்**

...SOLE DISTRIBUTORS...
**GIRISON & Co...MADRAS**

*Calcutta Agent* :— **A. NATARAJAN,**
118 Rash Behari Avenue, Calcutta.

*Guntur District Agent*:— **A. SRINIVASA IYER,**
Madras Club, Narasaraopet, Guntur Dist.

வட இந்தியாவிலுள்ள மற்ற பாகங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

## இளைஞனே! சற்றுப் பொறு.....

"நீ பேசுவதைப் பார்த்தால் நீயாகவே இவற்றை யெல்லாம் செய்து விட்டதாகவல்லவா நினைப்பாய்கள். உன் பயிற்சியின் பொருட்டுச் செலவான பணம் நான் சேமித்து வைத்திருந்தது என்று உனக்கு ஞாபக மூட்டுகிறேன். நீ நன்றாகத்தான் செய்திருக்கிறாய் என்று எனக்குத் தெரியும்; ஆனால்...நான் சேமித்து வைத்திருக்கா விட்டால், நீ இந்த வேலை பார்க்க முடியாது."

பனிரண்டு வருஷங்களுக்குப் பிறகு ஒரு பெருமித முள்ள தந்தைக்கும் மகிழ்ச்சியுள்ள மகனுக்கும் நடைபெற்ற கற்பனை சம்பாஷணையா யிருக்கலாம். இது பற்றி விநோதம் எதுவுமில்லை. பெருங் காரியங்களைச் சாதிக்க ஆரம்பிக்கத் தக்க நிலைமையில் நம் நாடு இருக்கிறது. நமது இளைஞர்களுக்குச் சிறந்த தருணங்கள் கிடைக்கப் போகின்றன. இந்தியா முன்னேற்றமடைய முதல் வேண்டும்.

இளைஞர்கள் கல்விக்கும் பயிற்சிக்கும் பணம் வேண்டும். சிக்கனமாகவும், செலவைக் குறைத்தும் மூலதனம் சேர உதவி செய்யுங்கள்.

***எதிர் காலத்தின் பொருட்டு இப்போதே திட்டமிடுங்கள். உங்களால் இயன்றவரை மிச்சப்படுத்துங்கள்.***

நீங்கள் மிச்சப்படுத்தும் தொகைகளை வெகு பந்தோபஸ்தாகவும், உங்களுக்கு வேண்டும்போது கிடைக்கும்படியும் போட்டு வைப்பது என்று எண்ணிப் பாருங்கள்.

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள், அரசாங்கக் கடன் பத்திரங்கள், தபால் ஆபீஸ் சேமநிதிகள், இன்ஷூரன்ஸ், கூட்டுறவு சங்கங்கள், சேம நிதிகள் ஆகியவற்றில் பந்தோபஸ்தாகவும், இலாபகரமாகவும் இருக்கும் நிலங்கள், கட்டடங்கள், பண்டங்கள், செய்பொருட்கள், நகைகள் முதலியவற்றில் உங்கள் பணத்தைப் போட்டு நஷ்டத்திற்கு உள்ளாகாதீர்கள் இந்தக் காலத்தில், தொகைக்கேற்ற அளவு அவை கிடைப்பதில்லை.

**எதிர்காலத்தை முன்னிட்டு பாதுகாப்பான முறையில் மிச்சப்படுத்துங்கள்.**

*கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா பைனான்ஸ் இலாகா வெளியீடு.* AAA 157

ஆபரணங்களுக்கும்
வைரங்களுக்கும்
P.A. ராஜசெட்டியார் & பிரதர்
கடைத்தெரு கோயமுத்தூர்
போன் 218A - தபால்பெட்டி 139 தந்தி "ராஜா"

# சந்தை கலைந்ததும்—

இந்தியாவிலுள்ள லட்சக்கணக்கான கிராம வாசிகள் வாரம் மாதக் கணக்கான உழைப்பின் பலனைச் சந்தை நாளிலேயேதான் அடைகிறார்கள். தானிய வியாபாரி வருஷத்துக் கிருமுறையே வரக்கூடும். காய்கறி பல சரக்கு விற்பவர்களோ வாரந்தோறும் கூடுகிறார்கள். தூசியைக் கிளப்பும் கால்நடை வியாபாரமோ மிகவும் கடினம்.

கிராம வாசிகளிடையே பெரும்பாலாகப் புழங்குவது தீப்பெட்டி எண்ணெய் வகைகளே. வருஷத்துக்கு ஒரு முறை பண்டிகைகளை முன்னிட்டுத் துணிமணிகள் நடமாடலாம். ஆனால் சந்தை கலைந்ததும் எல்லோரும் எப்போதும் வாங்குவது எது? ஒரு கோப்பை சூடான இனிய தேநீரே.

ஒவ்வொரு சந்தையிலும் நஷ்டமடைந்தவனுக்கு ஆறுதலையும், லாபமடைந்தவனுக்குக் கொண்டாட்டத்தையும் கொடுப்பது புதுமணங் கமழும் ப்ரூக்பாண்ட் தேயிலையே.

பரந்த விநியோகம்—
புத்தப் புதிய தேயிலை

# ப்ரூக் பாண்ட்

"இரு இலையும் ஒரு மொட்டும்"

# இலங்கை அன்பர்களுக்கோர் அறிவிப்பு

**சங்கீத உலகின் ஜோதி**

கர்னாடக சங்கீத உலகில் ஜெகஜ்ஜோதியாய் பிரகாசித்தும் தங்கமெடல்களும் சன்மானங்களும் பெற்று, நம் நாட்டு மக்களின் ஆசியும் ஆதரவும் அபரிமிதமாய் அடைந்து பல வித்வான்களின் நற்சாக்ஷிகளோடு திலகமாய் விளங்கி வரும்

**கர்னாடக சங்கீத வித்வான்**

**கும்பகோணம்**

## இசை ஒளி A.D. சுல்தான்

**அவர்கள்**

இலங்கை (CEYLON) அன்பர்களின் ஆதரவையும் பெறவருகிறார். எதிர்பாருங்கள்!

அவரது கச்சேரி கர்னாடக சங்கீத முறையுடனும் சாஸ்த்ரோக்தமான சம்பிரதாயத்துடனும் பண்டிதர்கள்முதல் பாமரர்கள்வரை ரசிக்கக்கூடிய அளவில் இருக்கிறதென்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்

*Agent:—* **T. T. KRISHNAMACHARI,**

12A Lingha Chetty Street, :: G. T. MADRAS

# லோத்ரா ★★★

**கர்பாசய ரோக நிவாரணி**

கர்பாசய கோளாறுகளால் ஏற்படக்கூடிய பல்வேறு உபாதைகளிலிருந்து காப்பாற்றி ஆரோக்யத்தை அளிக்கிறது

**கேசரி குடீரம் லிட், மதராஸ்**

நிஜாம் சமஸ்தானம், ஆந்திரா ஜில்லாக்கள், தமிழ்நாடு முதலிய இடங்களுக்கு ஏஜண்டுகள்:-

**சீதாராமா**

**ஜெனரல் ஸ்டோர்ஸ்**

சகிந்திராபாத், பெஜவாடா, மதுரை.


# பொருளடக்கம்


பார்த்திப மலர் 5 | மார்கழி இதழ் 5



இந்தியாவில் பிரிட்டிஷ்ஸ்தானு ? 17

கதம்பம் ... 20

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் 25
ராமய்யா

"ஆனை—ஐயா" ... 29
டாக்டர் வே. ராகவன்

அம்பாச்சாரி ... 33
கே. சுந்தரம்மாள்

சுதந்தராத்மா தோரோ ... 45
யோகி சுத்தானந்த பாரதியார்

ஞாபகச்சின்னம் ... 48
வேங்கடலட்சுமி

ரத்ன மாலா ... 57
எம். எஸ். கமலா

ஏழையின் உள்ளம் ... 67
குஸுமா

கடிவாளம் ... 72
க. கணபதி

புத்தக விமர்சனம் ... 79


---

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

நீங்கள் நடத்தும் சங்கீதக்கச்சேரிகள் பொதுக் கூட்டங்கள்
ஒலிபெருக்கி செவ்வனே நடைபெற

கும்பகோணம்

# ஸவுண்ட் ஸர்விஸ்

ஒலிபெருக்கி ஸெட்டுகள்தான் பொதுஜனங்களுக்குகந்த திருப்தியைக் கொடுக்கக்கூடியது என்று கொடுமுடி ஸ்ரீமதி **K. B.** சுந்தராம்பாள் அவர்கள் சொல்லியிருக்கிறார்.

ரேடியோ, ஸினிமா தியேட்டர் ஸர்விஸிங்களும் செய்துகொடுக்கப்படும்.

"ஸவுண்ட் ஸர்விஸ்"
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

ஹெட் ஆபீஸ்: மதராஸ்

## விலைகள் குறைந்துவிட்டன!

நாடோறும்—

நம் தேவைக்குள்ள

பட்டு & நூல் ஜவுளிகள்

கிடைக்குமிடம்

# M. N. நாகேந்திரம் சன்ஸ்

பட்டு ஜவுளி வியாபாரம்

மலைவாசல் உள்மண்டபம்

தெப்பக்குளம் P. O. - திருச்சினாப்பள்ளி

# காவேரி

219019.

பார்த்திப மலர் 5

"சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார்

மார்கழி இதழ் 5


## இந்தியாவில் பிரிட்டிஷ்தூது?

"இந்தியாவை விட்டு வெளியேறு" என்ற கொள்கைக்கு நூற்றுக்கு நூறு வாக்கு அளித்த இந்திய மக்களுக்குப் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் கூறப்படும் பசப்புவார்த்தைகளும், தூது கோஷ்டியும் சமாதானமளிக்க முடியுமா?

பிரிட்டிஷாருக்கு இந்தியாவைப்பற்றித் தெரிந்துகொள்ளப் புதிதாக என்ன இருக்கிறது? பார்லிமெண்டு மெம்பர்கள் தங்களில் சிலர் இந்தியா சென்று இந்திய அரசியலில் உள்ள முக்கியஸ்தர்களைக் காண வேண்டுமென்று கேட்கவுமில்லை; அல்லது இந்தியாவைப்பற்றித் தங்களுக்குத்தெரிய வேண்டிய விஷயம் இருப்பதாக அறிவிக்கவுமில்லை. இந்தியப் பிரச்னை உலகமறிந்த விஷயம். இந்திய மக்களின் கோரிக்கை பூரண சுதந்திரம். இதை அளித்தாக வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதும் பிரிட்டிஷார் உணராததல்ல. அப்படியிருக்கையில் ஏன் இந்தப் பார்லிமெண்டு சர்வகட்சி தூது கோஷ்டி?

இந்திய அரசியலில் தலைவர்களின் அபிப்பிராயங்களை நேரடியாகப் பார்லிமெண்டு மெம்பர்கள் அறியவேண்டுமெனவும், இந்தியா விரைவில் பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் சமஅந்தஸ்துடன் சுதந்திரம் பெறவேண்டி, பிரிட்டிஷ் மக்கள் தங்களால் இயன்றவரை உதவிபுரியத் தயார் எனவும் கூறவே இத்தூது கோஷ்டி செல்லும் என்று கூறுகிறார் இந்தியா மந்திரி லார்ட் பெதிக் லாரன்ஸ்.

முன்பு ஒரு வைஸிராய் இந்தியாவிலுள்ள சுமார் அறுபது அரசியல் தலைவர்களைக் கூட்டிப் பேசினார். கிரிப்ஸ் எல்லாத் தலைவர்களையும் பேட்டிகண்டு பிரிட்டிஷாரின் நல்லெண்ணத்தை விளக்கினார். சுயராஜ்யம் அளிக்கத் தயார் என்றார். ஆனால் நடந்ததென்ன? அடக்குமுறை, தலைவர்கள் சிறைவாசம். சுயராஜ்யம் இன்னும் எட்டாப் பழமாகத் தானிருந்து வருகிறது. வைஸிராய் வேவல் நேற்று சிம்லாவில் முக்கிய தலைவர்களைக் கண்டு பேசினார். அவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டார். பிரிட்டிஷாரின் முடிவையும் தெரிவித்தார். இங்கிலாந்துக்கு ஓடோடிச்சென்று பிரிட்டிஷ் மந்திரிசபையாருடன் குசுகுசுவென்று கலந்து ஆலோசித்தார். கடைசியில் நடந்தது என்ன? ஓர் அறிக்கை. அதில் பொதுத் தேர்தல் முடிந்தவுடன் அரசியல் நிர்ணய சபை கூட்டப்படும் என்று அறிவித்தார்.

இந்திய மக்கள் எவ்வளவோ தடவை ஏமாந்திருக்கிறார்கள்! ஸிம்லா மஹாநாட்டில் அவர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்திற்கு அளவே இல்லை. பிரிட்டிஷார் ஜின்னாவின் எதிர்ப்பைக் காரணமாகக் கொண்டு ஒன்றும் செய்ய இயலாது என்று சொன்னது பெரிய விழிப்பை அளித்தது, இனி இவர்களை நம்பி மோசம் போகக்கூடாது என்ற முடிவுக்கு வந்துவிட்டனர். "இந்தியாவை விட்டு வெளியேறு" என்ற கோஷம் காங்கிரஸின் திட்டமாக மாறிற்று,

தேர்தலில் அது ஒரு முக்கியக் கொள்கை யாகவும் அமைக்கப்பட்டுவிட்டது.

இங்கிலேயில்தான் பிரிட்டிஷார் தூது கோஷ்டி அனுப்புகின்றனர். எதற்காக வருகிறூர்கள்? சமரசம் பேசவா? இல்லே. கையில் ஏதாவது பண்டம் உண்டா? அதுதான் கிடையாது. இத்தூது கோஷ்டி பிரிட்டிஷ் அரசாங்கத் தாரின் ஆதரவுடன் வருகிறதே ஒழிய அதற்கு வேறு யாதொரு அதிகாரமும் இல்லேயாம். நல்லெண்ணத்தைச் செய் கையில் காட்டச் சந்தர்ப்பம் வாய்த்த பொழுதெல்லாம் மழுப்பி மழுப்பிச் சாக் குச்சொல்லிக் காலம் கடத்திஞர்கள். யுத்தம் முடிந்தும்கூட அனுதாபத்தை யும் நல்லெண்ணத்தையும் வாயளவில் நிரூபிப்பதில்தானிருக்கிறது. கிரியாம்சை யில் என்ன? பயமுறுத்தல், ஒற்றுமை ஏற்பட்டால்தான் அதிகார மாற்றம் என்ற அறிவிப்பு. வைஸிராய் அவர்கள் கல்கத்தாவில் பேசியதிலிருந்து மனமாற் றம் எதுவும் ஏற்படவில்லே என்பது தெளிவாகத் தெரிகிறது, இங்கிலேயில் தூதுகோஷ்டி என்ருல் கேலிக்கூத்தாகத் தானிருக்கிறது. எல்லாம் கொய்பல்ஸ் பிரசாரமாகத்தானிருக்கிறது.

"இந்தியாவை விட்டு வெளியேறு" என்ற கோஷத்திஞல் காரியம் கைகூடி விடாது. கொடுங்கோன்மையிஞலும் குழப்பத்திஞலும் நமது லக்ஷியம் எட்டா மற் போகுமே ஒழிய எளிதில் கைகூ டாது. இப்பிரச்னே முடிவடையப் பல சாராருக்குள் சமரசம் ஏற்படவேண்டும். 'காங்கிரஸ், சிறுபான்மை கோஷ்டியினர் - இதில் முக்கியமாக முஸ்லிம்கள், இந்திய சுதேச மன்னர்கள், பிரிட்டிஷ் கவர் மெண்டார்' இந்தச் சாரார்களுக்குள் சமரசம் ஏற்படாதவரை பிரிட்டிஷ் கவர் மெண்டார் தங்களுடைய கடமையைச் செய்தேதீருவார்கள்"

ஆகவே சமரசம் ஏற்படும் வரை பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு அகலப் போவதில்லே என்று தெளிவாக்கிவிட் டார் வைஸிராய் வேவல். முஸ்லிம்களேச் சரிக்கட்டவேண்டும்; பிறகு இதர சிறு பான்மை கோஷ்டியினர்— (இது என் னென்னவென்று குறிப்பிடப்படவில்லே); அதற்குப்பின் சுதேசமன்னர்கள்; கடை சியாகப் பிரிட்டிஷ் கவர்மெண்டார். இவ் வளவு பேர்களுக்கும் சரிவர வாய்க்கரிசி போட்டால்தான் பிரிட்டிஷ் கவர்ன் மெண்டார் நமக்குச் சுய ஆட்சி உரிமை அளிப்பார்களாம். இந்தியக் கட்சிகளுக் குள் ஒற்றுமையில்லே என்று சொன் னதுபோக இப்பொழுது சுதேசமன்னர் களேயும், அவர்களுடைய யதேச்சாதிகா ரத்துக்குத் தூணுக நிற்கும் பிரிட்டிஷ் கவர்மெண்டாரையும் நாம் சமரசப் படுத்தவேண்டுமாம். பிரிட்டிஷாரும் இந் தியக் கட்சிகளுள் ஒருவராகிவிட்டார்கள் போலும்! முஸ்லிம்களுக்குப் பாகிஸ்தான் அளித்தால், பிரிட்டனுக்கும் பிரிட்டிஷ் ஸ்தான் அளிக்கவேண்டிவரும் போலிருக் கிறது!

என்ன முடிவு? எல்லாம் சூழ்ச்சி. ஒருவரோடு ஒருவரை மோதவிட்டுப் பார்க்கப்போகிருர்கள். பார்லிமெண்டில் இந்தியாமந்திரி அரசியல் நிர்ணயசபை அமைப்பதைப்பற்றிப் பேசிஞரோ இல் லேயோ ஜனுப் ஜின்ஞ அவர்கள் அதிலே யும் பாகிஸ்தான் வேண்டுமென்று சவால் விடுக்க ஆரம்பித்துவிட்டார். இரண்டு அரசியல் நிர்ணயசபை வேண்டுமென் கிருர்— ஒன்று பாகிஸ்தானுக்கு, மற் ருென்று ஹிந்துஸ்தானுக்கு. இந்தியா வில் நாலில் ஒருபாகம், அதாவது ஸிந்து, பலுசிஸ்தானம், பஞ்சாப், எல்லேப் புற மாகாணம், வங்காளம், அஸ்ஸாம் இந்த ஆறு மாகாணங்கள் அடங்கிய பாகம்தான் பாகிஸ்தானம் என்று கூறு கிருர் ஜின்ஞ.

இதற்கு முடிவு என்ன? பாகிஸ்தானு மல்ல, பிரிட்டிஷ் தூது கோஷ்டியுமல்ல. ஜாதி மதத்தின்பேரில் ஏற்படுத்தப்பட்ட தனித் தொகுதியை ஒழித்தாகவேண்டும். இந்தியாவிலுள்ள எல்லா வயதுவந்த மக் களுக்கும் ஓட்டுரிமை அளிக்கப்படவேண் டும். இதன் பிரகாரம் தேர்ந்தெடுக்கப் படும் நபர்களேக்கொண்டுதான் அரசியல் நிர்ணயசபை அமைக்கப்படவேண்டும். சிறுபான்மையினருக்கு என்று, அவர்கள் ஜனத் தொகைக்குக் கொஞ்சம் மேலாக வே, சட்ட சபைகளில் ஸ்தானங்கள் ஒதுக்கப்படலாம். முஸ்லிம்களுக்கும் ஹிந் துக்களுக்கும் சமமான ஸ்தானங்களும் கூட ஏற்படுத்தலாம், கொஞ்சகாலம் வரை. ஆனுல் தனித்தொகுதி என்ற

பேச்சு ஒழியவேண்டும். அது இருக்கும் வரை இந்தியக் கட்சிகளுக்குள் ஒற்றுமை நிலவமுடியாது.

பிரிட்டிஷார் நல்லெண்ணத்தைத் தூது கோஷ்டியின்மூலம் நமக்கு அறிவிப்பதை விட இந்தச் சீர்திருத்தத்தைச் செய்வார்களானால் இந்தியாவின் ஒற்றுமை நிச்சயம். பிரிட்டிஷார் இந்நாட்டிலிருந்து வெளியேறுவதும் நிச்சயமாய்விடும். கட்சி வேற்றுமைக்கு அடிப்படையாக உள்ள ஜாதிமத தனித்தொகுதிகளை ஒழிக்கப் பிரிட்டிஷ் கவர்மெண்டார் முயற்சி எடுத்துக் கொள்வார்களா என்பதுதான் பிரச்னை. இதைச் செய்யாதவரை இந்தியாவுக்கு விமோசனமில்லை. பாகிஸ்தான்களும் பிரிட்டிஷ் ஸ்தான்களும் ஏற்பட்டே தீரும்.

பார்லிமெண்டரி தூதுகோஷ்டி இதைச் செய்யுமாறு பிரிட்டிஷ் கவர்மெண்டாரைத் தூண்டுவார்களா? நல்லெண்ணத்தைச்செய்கையில் காட்ட நல்லதருணமிது. மற்ற எந்தச் சிபார்சு செய்தாலும் செய்யாவிட்டாலும் இதை அவர்கள் செய்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

நமது அட்டைப் படத்தை அலங்கரிப்பது ஸர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் என்று அறிமுகப்படுத்துவது மிகையாம். இன்று டாரிப் போர்டின் அக்கிராஸனராக இருப்பதே அவருடைய நுண்ணறிவையும் சாமர்த்தியத்தையும்காட்டப் போதுமானது. காங்கிரஸிலிருந்தபொழுதுதான் அவர் திறமை வெளியாயிற்று. துரதிருஷ்டவசமாகஅவர் கவர்மெண்டாரின் வலையில் சிக்கிக்கொண்டார். இன்னும் விடுதலை அடைந்த பாடில்லை. அவருடைய கீர்த்தி ஓங்கி வளர்ந்துவருகிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சுதந்திர இயக்கத்தில் தம்முடைய முழுத்திறனையும் செலுத்திப் பாடுபடுவாரானால் இந்திய மக்களிடையே அவர் மதிப்பு ஓங்கி நிற்கும். ஏகாதிபத்திய வலையினின்று விடுபெற்றுச் சுதந்திர வீரராக விளங்குவார். அப்படிக் கூடியசீக்கிரம் செய்வார்என்று எதிர்பார்த்து அவரை முன்னமே வரவேற்கிறோம்.

## நமது அனுதாபம்

ஸ்ரீமதி கமலா பத்மநாபன் அவர்களைத் தமிழுலகம் நன்கு அறியும். சிறந்த எழுத்தாளர். அவரது கட்டுரைகள் 'காவேரி'யிலும் இதர பத்திரிகைகளிலும் வெளிவந்து ஆயிரக் கணக்கான தமிழ் மக்களது உள்ளங்களைக் கொள்ளை கொண்டுள்ளன. ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சிகொண்டவர்.

பழமை வாய்ந்த பிரபல குடும்பத்தவர். பிரபல குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டவர். அன்னார் 32ஆவது வயதில் 12-11-45ல் பூவுலகு நீத்த சேதிகேட்டு வருந்துகிறோம். அவரது பிரிவாற்றாமையால் துயர்பட்டுள்ள அன்னாரின் வாழ்க்கைத் துணைவர் மைசூர் K. பத்மநாபன், B.E., (Mysore P. W. Department) அவர்களுக்கும் சுற்றத்தாருக்கும் தமிழ் மக்களின் சார்பாக நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

# கதம்பம்

## நவீன உபாஸனைக்காரர்கள்!

தேவி உபாஸனை, சக்தி உபாஸனை, சாயி பாபா உபாஸனை இன்னும் பலவித அடியார்களை நாம் காண்கிறோமல்லவா? இங்கிலாந்திலும் பலவித உபாஸனைக்காரர்கள் உண்டு. ஏகாதிபத்திய வெறிபிடித்த உபாஸனைக் காரர்களது கோஷ்டி, முதலாளிகளின் திருக் கோஷ்டி இவைகளைப்பற்றியே நாம் இது வரை கவனித்து வந்தோம். இப்பொழுது புதிய உபாஸனைக் கோஷ்டியொன்று முளைத்து வளர்ந்துவருகிறது. அத்திருக் கோஷ்டிக்கு ஹிட்லரே தெய்வம்! ஆமாம்! மாண்டானா, இருக்கின்றானாவென்று நேச தேசத்தவர்கள் மூளையை உடைத்துக்கொள்கின்றார்களே அதே ஹிட்லர்தான்! சர்வாதிகாரக் கடவுளாய் விளங்கி ஐரோப்பாவையும் உலகத்தையும் தனது திருவிளையாடல்களால் பிரமிக்கச் செய்த அந்த ஹிட்லர் தான்!

இந்த நூதன உபாஸனைக்காரர்கள் தங்கள் திருக்கூட்டத்திற்கு "கிறிஸ்துவ சீர்திருத்தக் கூட்டம்" (Christian Reform League) என்ற திருநாமத்தைச் சூட்டிக் கொண்டு, அந்த ஹிட்லர் பெருமானின் கொள்கைகளை நாடெங்கும் பரவச்செய்ய அரிய தொண்டுபுரிந்து வருகிறார்களாம்.

உபாஸிப்பதற்கு உருவப்படத்தைவிட உருவச்சிலையே சிறந்ததெனக் கொண்டார்கள் அடியார்கள். உருவச்சிலை வேண்டுமே? அடியார்களின் துயரை அகற்ற அரிய சந்தர்ப்பம் வாய்த்தது. பிரிட்டிஷ் அரசாங்கம், ஜெர்மன் ஸ்தானீகர் காரியாலயத்திலுள்ள உபயோகமற்றதெனக் கருதப்பட்ட பொருள்களை ஏலத்தில் விற்றுவிடத் துணிந்தது. அப்பொருள்களில் ஹிட்லர் பெருமானின் சிலையும் ஒன்று. அச்சிலையை யாரும் வாங்க மாட்டார்களென எண்ணியிருந்தவர்களுக்கு ஏமாற்றமளிக்கக்கூடிய வகையில் ஹிட்லர் உபாஸனைக்காரர் ஒருவர் அச்சிலையை 500 பவுன் கொடுத்து வாங்கிவிட்டார்.

சீமையில் ஒரே பரபரப்பு, பார்லிமெண்டில் கேள்வி பிறந்தது. "சட்டவரம்பிற்கு உட்பட்டே" அத்திருக்கூட்டத்தார் தங்கள் நடவடிக்கைகளை நடத்துவதால் அரசாங்கம் தலையிடுவதற்கில்லை" என்ற பதில் கூறப் பட்டது.

சீமையிலுள்ள ஹிட்லர் உபாஸகர்களை முட்டாள்கள் என்றே நினைக்கிறோம். உயிருடன் சர்ச்சில், அமெரி, இன்னும் அவர்களது சகாக்கள் இருக்கையில் உயிரற்ற கற்சிலையைக் கட்டிக்கொண்டு ஏன் அழ வேண்டும்? சர்வாதிகாரம் செலுத்துவதில் இவர்களை விடவா அந்த ஹிட்லர் மேம்பட்டவர்? வேண்டுமானால் இந்தியாவில் பதவி வகிக்கும் வைசிராய், கவர்னர்கள் இவர்களை இழுத்துச் செல்வதுதானே? என்ன பைத்தியக்காரத்தனம்!

## மஹான் செத்தாரோ, பிழைத்தார்!

"நீர் தேசபக்தரெனச் சொல்வதற்கு அத்தாட்சி யாது? 1942-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் தந்திக்கம்பியை அறுத்து, தடியடி பெற்றதற்கு வடுக்காயங்கள் ஏதேனும் உமது உடலில் உளதா! போகட்டும், அந்த வருஷம் அந்த மாதத்தில் ஏதேனும் குற்றம் புரிந்து சிறைசென்றதுண்டா?"

"நான் உண்மையான தேசபக்தன். அல்லும் பகலும் தேசத்திற்கு உழைத்தவன்"

"ஓ! மாஜி தேசபக்தரா! இருக்கட்டும், அப்படித்தான் என்ன செய்தீர்கள்?"

"தேச நலத்தை முன்னிட்டு, நாட்டில் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை நிலவப் பாடு பட்டேன்"

"ஹா! துரோகி! துரோகி! நாட்டைத் துண்டிக்கச் சதிசெய்துவிட்டு, அச்சமில்லாமல் தேசபக்தனென்று கூறிக்கொள்ளுகிறாய்! போ வெளியே! அடே யாரடா குண்டாக்கள் அங்கே!"

இப்படியாக இக்காலத்தில் தமிழ்நாட்டில் சில நவீன தேசபக்தர்கள் படாடோப பயங்கர விளம்பரத்துடன் விளங்குகிறார்கள் அல்லவா? நல்ல வேளை! மஹான் வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள் ஒன்பது ஆண்டுகளுக்குமுன்னமேயே மறைந்தாரோ பிழைத்தார்! அவர் இன்றுமட்டும் உயிருடன் துர்ப்பாக்யவசமாக வாழ்ந்தால் "நீ, 1942-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் கலாட்டா செய்யாததினால் உன்னை நமது திருக்கோஷ்டியில் சேரவிடமாட்டோம்" என்று நமது நவீன தேசபக்தர்கள் கண்டிப்பாய்க் கூறிவிடுவார்கள்!

முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன் அன்னியர் ஆட்சியின் அலங்கோலத்தை அறிந்து சுதந்திரவீரம் காட்டி அரசாங்கத்தை எதிர்த்து நின்றார் பிள்ளையவர்கள்.

"கப்பல் வழியாக வந்த அடிமைத் தனத்தைக் கப்பலில் ஏற்றியே அனுப்புவோம்" என்ற உன்னதக் கொள்கை கொண்டு, சுதேசக் கப்பல்களைச்செய்வித்து

அன்னியக் கப்பல் வியாபாரத்துடன் போட்டியிட்ட தீரர் அவர்.

தூத்துக்குடியிலிருந்துகொண்டு வெள்ளை வியாபாரிகளைக் கதிகலங்கச் செய்தவர். அன்னிய வியாபாரிகள் பிள்ளையவர்களை அடக்க அரசாங்கத்தின் உதவியை நாடினர். சிறைவாசம், செக்கு இழுத்தல், கல்லுடைத்தல் முதலிய கொடும் அவதிகளுக்குள்ளானார். அஞ்சாநெஞ்சம் படைத்த பிள்ளையவர்கள் கலங்கவில்லை. விடுதலை பெற்றதும் சுதேசி இயக்கத்தை ஆரம்பித்து நடத்தினார்.

சிதம்பரம்பிள்ளையவர்களின் பூத உடல் மறைந்தாலும் அவருடைய புகழ் உடல் என்றும் மறையாது. அப்பெரியாரின் ஞாபகார்த்தமாக அவரது உருவச்சிலை ஒன்றைத் தக்க இடத்தில் நிலைநாட்ட அன்பர்கள் சிலர் முயற்சி செய்கின்றனர். தமிழர் யாவரும் அம் முயற்சியில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டியது கடமையாகும். இதை நாம் எடுத்துக் கூறவேண்டுமா?

### சென்னையில் விஷவாயுப் பிரயோக முஸ்தீப்பு

சென்னையில் விசேஷ பரபரப்பு காணப்படுகின்றதாம். எந்த நிமிஷத்திலும் மக்கள் விஷவாயுப் பிரயோகத்தினால் தாக்கப்படலாமென்ற வதந்தி உலாவுகின்றது. முன் எச்சரிக்கையாக மௌண்ட்ரோடு பக்கம் நடமாடும் மக்கள் தங்கள் நாசிகளையும், வாய்களையும் கைக்குட்டைகளாலும், துணிகளாலும் அடைத்துக்கொண்டு செல்லுகின்றனராம்!

மக்களிடையே இவ்வித பீதியைக் கிளப்பிய பெருமை சென்னை நகர சபையைச் சார்ந்தது. மவுண்ட் ரோடு பக்கமுள்ள ரவுண்டாணா சமீபம் ஒரு கக்கூஸ் கட்ட நகரசபை அதிகாரிகள் துடிதுடித்து நின்றார்கள். பொது மக்கள் பலர் அதை எதிர்த்துக் கிளர்ச்சிசெய்யத்தலைப்பட்டனர். நகரசபை அதிகாரிகள் உடனே போருக்கு ஆயத்தமானார்கள். நவீன ஆயுதங்களின் வசதி இல்லாமையால் கட்டப்பாறைகள் கோடாலிகள், மண்வெட்டிகள் இவைகளின் பலத்தைக்கொண்டு அதிவிரைவில் போரை வெற்றிகரமாக முடிக்கத் துணிவு கொண்டுவிட்டனர். எதிரிகளிடம் பேனாவைத் தவிர வேறு எவ்வித ஆயுத பலமுமில்லை என்பதைக் கண்டுகொண்டார்கள். இராப்பகலாக ஓய்ச்சல் ஒழிவின்றி இந்தக் கக்கூஸ் போர் மும்முரமாக நடைபெற்று எல்லோர் கவனத்தையும் கவர்ந்து வருகின்றது.

பொதுமக்கள் பலரின் எதிர்ப்புக்குக் காரணமில்லாமலில்லை. சென்னை நகரத்தை பல கக்கூஸ் கட்டிடங்களால் அழகுபடுத்துவதை அவர்கள் ஆட்சேபிக்கவில்லை. விஸ்தாரமாகவும், ஒதுப்புறமாகவும் கவர்னர் மாளிகையின் சமீபம் வேண்டிய இடவசதியிருக்க, பல்லாயிரக்கணக்கான மக்கள் நடமாடும் நடு வீதியில்தானா கக்கூஸ்கட்ட நகரசபை அதிகாரிகள் ஆவல்கொண்டு துடிதுடித்து நிற்கவேண்டுமெனக் கிளர்ச்சி செய்கிறார்கள்.

இந்தக் கக்கூஸ் போரில் புதிய மேயர் சிவராஜ் அவர்களும் சிரத்தைகாட்டி, கமிஷனர் அவர்களுக்குப் பக்கபலமாயிருப்பதைக் கவனித்தால் இப்படிப்பட்ட மேயரைச் சம்பாதித்துள்ள சென்னை நகரசபையின் அதிருஷ்டத்தை ஆயிரம் நாவுகள் படைத்த ஆதிசேஷ பகவானும் புகழுரை பாடி முடிப்பது கடினம்!

### ஐரோப்பிய நாகரிகமுறை!

அறிவிலும் ஆற்றலிலும், வீரத்திலும் தீரத்திலும் நாகரிகத்திலும் நன் மதிப்பிலும் உலகிலேயே சிறந்தவர்கள் ஜெர்மன் மக்கள். அந்தத் தேசத் தலைவர்களாகிய ஹிட்லர், கொயரிங், கொய்பல்ஸ், ஹெஸ் முதலியோர்கள் எவ்வளவோ குற்றம் குறை


**மாதவிடாய் நின்றிருந்தால்**

குமாரி (TABS) உபயோகித்தால் மீண்டும் ஏற்படுவதுடன் பிற்காலத்திலும் தொந்தரவு ஏற்படாது. தீங்கற்றது. விரைவில் பலன் தரும். விலை ரூ. 3. கடுமையானதற்கு ரூ. 5. கர்ப்பத்தடை 6 மாதங்களுக்கு ரூ. 4. (வி. பி. அணா 12 பிரத்யேகம்)

**Mrs. P. DEVEE, F. D. S., (C. M.)**
Tollygunge, Calcutta.

கிடைக்கும் மற்ற இடங்கள் :—

(1) ஹாரி & ஸன்
93, சைனாபஜார், மதராஸ்.

(2) டி. டி. பாண்டி
'ஹரிநிவாஸ்'
கிங்ஸ்வே, தாதர், பம்பாய்.

(3) நாதம் & கோ.
மட்டாஞ்சேரி, கொச்சி.

கள் உள்ளவர்களாகக் கருதப்பட்டபோதிலும் தேசபக்தியில் இணையற்ற பெரியார்கள். சர்ச்சில், அமெரி கூட்டத்தாருக்குத் தங்கள் நாட்டின் பேரில் உள்ள பற்றைவிட ஜர்மனியருக்கு அதிகம். ஜெர்மன் தலைவர்களின் தியாகம் மற்ற தேசத் தலைவர்களின் தியாகங்களுக்குக் குறைந்ததல்ல.

அப்படிப்பட்ட உன்னத தேசத்தின் வீரத் தலைவர்களை கண்ணியமான முறையில் நடத்துவதே முறை. பண்டைய நாகரிக முறையும் வழக்கமும், பழக்கமும் அதுவே. ஆனால் இன்று நடப்பதென்ன? அந்தக் தேசத் தலைவர்கள் மீது "யுத்த குற்றங்க" ளெனப் பல சாட்டி, அவர்களது உயிர்கள் அநாகரிகமுறையில் அழிக்கப்படுகின்றன. கேள்விமுறையில்லை.

யுத்தகாலத்தில் மக்களைக் கொடுமைப் படுத்தாத அரசாங்கமே இடையாதெனலாம் ஜலியன்வாலா பாக் படுகொலை பழைய சம்பவம். இன்று நம் நாட்டுச் சிறைகளில் நடப்பதைப் படித்திருக்கிறோம். விசாரணையின்றிச் சிறையில் நரகவேதனை யனுபவிக்கின்றார்கள் பல இந்தியத் தவப்புதல்வர்கள். கேள்வி முறையுண்டா?

இந்தோனேஷ்ய மக்கள் ஜாவாவில் இன்று எவ்விதம் நடத்தப்படுகின்றார்கள்? என்ன குற்றத்திற்காக? உலகம் இப்பொழுது இருக்கும் நிலையில் வல்லவன் வைத்ததுதான் சட்டம். அதுவே நீதி!

ஜெர்மன் தலைவர்களின் விசாரணை முடிவாகுமுன்பே "அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டால் எவ்வகையில் அவர்கள் உயிரைப் போக்குவது" என்ற இழிவான விவாதத்தில் சீமைப் பத்திரிகைகள் சில இறங்கியுள்ளன. 'டெய்லி மெயில்' (Daily Mail) என்ற சீமைப் பத்திரிகை அடியில்கண்ட அருவருக்கதக்க, மனிதத் தன்மையற்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது.

"குற்றவாளிகளென மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஜெர்மன் தலைவர்களின் உயிர்கள் விஷவாயு மூலம் போக்கப்படலாம் என்று தெரிகிறது. அமெரிக்காவில் இப்பொழுது இப்படிப்பட்ட முறை அனுஷ்டிக்கப்படுகிறது. இம்முறை மற்ற முறைகளைக்காட்டிலும் ஒரு நல்ல முறை. ஏனென்றால் இறப்பவனின் மூளையையும், இதர உறுப்புக்களையும் பிரித்துப் பரிசோதிக்க நன்கு பயன்படுகின்றது. சுட்டுக்கொல்லுதல், தூக்குப்போடுதல் இந்த முறைகள் ஆராய்ச்சிக்கு அவ்வளவு சிலாக்யமல்ல. கொயரிங் குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டு மரணதண்டனை அளிக்கப்பட்டுவிட்டதாக நினைத்துக்கொள்வோம்! அவருடைய யருமனுக்கும், அவர் தேகத்தில் உள்ள ஊற்றுக்களுக்கும் (Glands) அவரது முரட்டுத்தனத்துக்கும் சம்பந்தமுண்டா என்பதைப் பிரேத பரிசோதனையால் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம். ஹெஸ்ஸின் மூளையின் விசித்திரத்தையும் தெரிந்து கொள்ளலாம். ஆகவே இத்தலைவர்களது உறுப்புக்கள் ஆராய்ச்சிகளுக்கு உதவும் முறையில் அவர்களது உயிர்கள் போக்கப்படவேண்டும்".


# காவேரி

உயரிய தமிழ் மாதப் பத்திரிகை

| சந்தா விபரம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| வருஷம் ஒன்றுக்கு | ரூ. 4—8—0 | ரூ. 4-12—0 |
| ஆறு மாதங்களுக்கு | ரூ. 2—4—0 | ரூ. 2—8—0 |
| தனிப்பிரதி ஒன்றுக்கு | 0—6—0 | 40 சதம் |

ஏஜென்ஸி இல்லாத இடங்களுக்கு—

**நம்பிக்கையான ஏஜெண்ட்கள் தேவை.**

ஸர்க்குலேஷன் மானேஜர்
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

எல்லைப்புற மாகாணத்திலுள்ள முஸ்லிம் மக்களைக் காங்கிரஸ் பக்தர்களாகச் செய்யும் எல்லைப்புற காந்தி காரியக்கமிட்டிக்குச் செல்லுமுன் எடுத்த படம்.



மத்தியசபைத் தேர்தலில் டில்லியிலுள்ள முஸ்லிம், ஹிந்து பெண்மணிகள் யாதொரு வித்யாசமுமின்றி அஸப் ஆலியின் வெற்றிக்குப் பாடுபடுகின்றனர்.

# நாட்டிய கலாநிதி

# மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை நிதி திரட்டு

பரதநாட்டியக் கலைக்குச் சிகரமாக விளங்கும் பந்தணைநல்லூர் நாட்டிய கலாநிதி மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் இக்கலையின் முன்னேற்றத்திற்கும் அதன் புத்துணர்ச்சிக்கும் செய்த அரியதொண்டைப் பாராட்டி அவருக்கு ஒரு பதக்கமும் பண முடிப்பும் மாகாண வாசிகளின் சார்பில் அளிப்பதென நிச்சயித்துள்ளோம். குடந்தையில் நிகழவிருக்கும் பொதுக் கூட்டமொன்றில் இவ்வைபவம் நடைபெறும்.

பரதநாட்டியத்தில் இன்று உன்னத பதவியில் விளங்குவோருள் அநேகர் ஸ்ரீமான் பிள்ளை அவர்களிடம் அக்கலையைப் பயின்றவர்கள். பல மாகாணங்களிலிருந்தும் பல தேசங்களிலிருந்தும் மாணவ மாணவிகள் நமது புராதனக் கலையைக் கற்கவேண்டி, பிள்ளை அவர்களிடம் வந்து பயிற்சிபெற்றுச் சென்றிருக்கிறார்கள். ஸ்ரீமதி ருக்மணிதேவி போன்றவர்கள் பிள்ளை அவர்களின் சிஷ்யை என்பதே அவருடைய தகுதியைக் குறிக்கப் போதுமானது.

பந்தணைநல்லூர் தஞ்சை ஜில்லாவில் ஒரு சிறிய கிராமம் தான். எனினும் அதன் புகழ் இன்று கலை உலகம் முழுவதிலும் பரவியிருக்கிறது. இதற்குக் காரணம் அது நாட்டிய கலாநிதி மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களின் வாசஸ்தலமாக அமைந்திருப்பதே. இன்று பரதநாட்டியக் கச்சேரி எங்கு நடந்தாலும் அதில் பிள்ளை அவர்களின் பந்தாவின் நயமும் கவர்ச்சியும் காணப்படும். பரதநாட்டியத்தில் இன்று அநேக மேதாவிகள் இருக்கலாம். அவர்களின் கலை ஞானத்திற்கும் அதன் பரிமளிப்புக்கும் காரண கர்த்தா ஸ்ரீமான் பிள்ளை அவர்களே என்று கூறினால் அது மிகையாகாது.

ஸ்ரீமான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளைக்கு வயது எழுபத்தேழு. பழுத்த கிழம். நாட்டியக் கலை வளர்ச்சிக்காகவே தம் வாழ்நாளை அர்ப்பணம் செய்தவர். பிரபல நாட்டியக்காரர்களை ஆக்கிவைத்துவிட்டார். இனி அவருக்கு நமது புகழ்ச்சி வேண்டுமென்பதில்லை. ஆயினும் நமக்கு ஓர் கடமை உண்டு. இத்தகைய பெரிய மேதாவிகளைப் பாராட்டி ஆதரவளிக்காமலிருப்பது பெருத்த அநீதியாகும். கைம்மாறு கருதாது கலைக்கென வாழ்நாள் முழுதும் பாடுபட்டு, தள்ளாத வயதில் சுகஜீவன மில்லாது இருக்கும் இப்பெரியாரை வறுமையில் உழலவிடுவது தகாது.

பொதுமக்கள் அவருடைய சேவையைப் பாராட்டி, பணமுடிப்பு ஒன்றை அளிப்பது அவருக்கு ஆறுதலளிப்பதுடன், மனவமைதியைக் கொடுக்கும். நாமும் நமது கடமையைச் செய்தவர்களாவோம்.

பொதுஜனங்கள், கலாரஸிகர்கள், பிள்ளை அவர்களின் சீடர்கள், மற்றும் கொடைவள்ளல்கள் எல்லோரும் பிள்ளை அவர்கள் நிதிக்கு ஏராளமான நன்கொடை அனுப்ப வேண்டுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். பணம் அனுப்புவோர் "மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை நிதி, காவேரி ஆபீஸ், கும்பகோணம்" என்று விலாசமிட்டு அனுப்ப வேண்டுகிறோம். அவ்வப்பொழுது வசூலாகும் பண விபரம் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

இங்ஙனம்,

C. ராஜகோபாலாசாரியார்
சண்முக ராஜேஸ்வர சேதுபதி (ராமநாதபுரம் ராஜா)
Dr. P. சுப்பராயன்
அரியக்குடி ராமானுஜய்யங்கார் (சங்கீத ரத்னகர)
பிடில் ராஜமாணிக்கம் பிள்ளை
T. K. சிதம்பரநாத முதலியார்
A.Y. அருளானந்தஸ்வாமி நாடார் (ராவ் பகதூர்)

P. S. விஸ்வநாதன் I.C.S.
C. R. லெக்ஷ்மீவராக அய்யங்கார் (ராவ் சாஹிப்)
T. S. சொக்கலிங்கம் (தினசரி)
Dr. T. S. S. ராஜன்
R. கிருஷ்ணமூர்த்தி (கல்கி)
S. ரெங்கசாமி (சிக்கா)
A. நாராயணசாமி உடையார்

} காரியதரிசிகள்

# அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமய்யா

சென்னையில் பரதநாட்டியப் பயிற்சிக்கு மகத்தான புத்துணர்ச்சி கிளம்பியிருக்கிறது. பெரிய மனுஷாள் வீட்டுக் குழந்தைகளெல்லோரும் நடனம் கற்றுக்கொண்டு பொதுஜன ஸமூகத்தில் ஆடிப் பரிசுகளும் கீர்த்தியும் பெறவேண்டும் என்கிற அவாவுடன் இருப்பதாகத் தெரிகிறது. ஒவ்வொரு வாரமும் இரண்டொரு இடங்களில் சிறுமிகளுடைய அரங்கேற்றுபடிகள் நடைபெறுகின்றன. நடனகலா அபிவிருத்திக்காக எங்கே பார்த்தாலும் ஜனக் கூட்டங்கள் பெருகிவிட்டன. காலை நேரத்தில் மயிலாப்பூர் லஸ் சர்ச் வீதியில் பார்த்தீர்களானால் பெண் குழந்தைகள் (வயது வந்த பெண்கள்தான்) திருத்தத்துக்குப் பொருத்தமான உடைகளை அணிந்துகொண்டு மூன்று நான்குகளாக நடனகலா சாலைகளுக்குப் போவதைக்காணலாம்! அதுபோலவே ஆண்பிள்ளைகளும் நடு வெகுடெடுத்து, தலைமுடியை வாரித் தோள்வரையில் தொங்கவிட்டுக்கொண்டு, புருவத்திலும் நெற்றியிலும் ஜவ்வாது பூசிக்கொண்டு போவதைக் காணலாம். இதையெல்லாம் பார்த்தால் பரதநாட்டிய மறுமலர்ச்சி நல்ல வைபவத்துடன் வெளிக்கிளம்பிவிட்டதாகவே நாம் வைத்துக்கொள்ளவேண்டும்!

இந்த மறுமலர்ச்சியைக்கண்டு அம்மாஞ்சி பயப்படுகிறான். எதற்காகவென்பீர்களோ? சொல்லுகிறேன். இயற்கையாகவே இந்தியப்பெண்கள் பன்னிரண்டு பதின்மூன்று வயதுக்குள் முதிர்ந்த உணர்ச்சி வாய்ந்தவர்களாக வளர்ந்துவிடுகிறார்கள் என்பது கொள்கை. பெண்களுக்குள்ள பலவித உணர்ச்சியும் மேல்நாட்டுப் பெண்களைவிடக் கீழ்நாட்டுப் பெண்களுக்கு வெகு துரிதமாக ஏற்பட்டுவிடுகின்றன. இந்தச் சம்பவம் நமது நாட்டிலுள்ள வாழ்க்கை வழிகளுள் உண்டாகும் சகஜமான ரீதி. பன்னிரண்டு வயதுக்குமேல் பெண் குழந்தைகளை வயதுவந்த மாதர்களாய்விட்டதாகவே நாம் நாள்தோறும் ஞாபகப்படுத்தி, அவர்கள் பாவாடைகள் கட்டுவதை மாற்றி, சிற்றுடைகள் அணியவைத்து, பின்னும் ஆறு மாதங்கள் கழித்து, புடவைகளையும் உடுக்கச்செய்து, நாணம், அச்சம் இவைபோன்ற உணர்ச்சிகளை ஊட்டி, பிஞ்சுகளைப் பழுக்க வைத்துவிடுகிறோம். யேல்நாட்டுப் பெண்கள் இயற்கையாகவே வளருவதற்கு எட்டு வருஷங்களானால், கீழ்நாட்டுப் பெண்கள் எட்டு மாதங்களில் சேர்க்கையால் வளர்ந்துவிடுகின்றனர். இது இப்படி இருக்க, பத்தும் பன்னிரண்டும் வயதுள்ள பெண்களுக்குப் பரதநாட்டியமும் கற்றுக்கொடுத்து "தெருவில் வாரானோ, என்னைத் திரும்பிப் பாரானோ" என்ற பதத்தையும் "அதுவும் சொல்லுவாள் அவள் அனேகமும் சொல்லுவாள்" என்ற பதத்தையும் அபிநயம் பிடிக்கச் சொல்லிக்கொடுத்தால் வேறு வினை வேண்டுமா, என்கிறான் அம்மாஞ்சி.

பருவம் வராத பெண் குழந்தைகளுக்கு நிருத்தம் படிப்பிக்கலாம்; நிருத்தப்பயிற்சியால் அவர்களுக்குத் தேகவளர்ச்சி, லயசுத்தம், நிர்ணயம் எல்லாம் பெருகவும் அவகாசமுண்டு. ஆனால் அபிநயம் பிடிப்பித்தால் பிஞ்சில் பழுத்த பழங்களாகும் குழந்தைகள். கண் சிமிட்டலும், புருவம் நெளித்தலும், உதட்டுச் சைகையும், விரல் முத்திரைகளும், தோள் சரித்தலும், முகவெட்டுக்களும், சுய அனுபவம் இல்லாத பெண் குழந்தைகளால் பரிபூர்ணமாகச் செய்யக்கூடிய காரியங்கள் ஆகமாட்டா. பருவம் வராத குழந்தைகளைக்கொண்டு அபினயம் பிடிப்பித்தல் கேவலம் பொம்மலாட்டம் போலாகுமேயல்லாது வேறொன்றுமில்லை. சுய அனுபவம் இல்லாத குழந்தைகள் அபினயம் பிடித்தால் சப்பென்றுதானிருக்கும்; ஆனாலோ, அபூர்வமாக ஏதாவது ஒரு குழந்தை சுய அனுபவத்தோடு அபினயத்தில் ஈடுபட்டுவிட்டால், அந்தக் குழந்தையைக் கண்டு நாமெல்லாரும் பயப்பட்டு ஓடவேண்டியதுதான். பக்திரசம், சோகரசம், காருண்யரசம், சிருங்காரரசம் போன்ற ரசபாவங்களைக் கேவலம் அனுஷ்டானத்தாலும் பயிற்சியாலும் மாத்திரமே எந்தக் குழந்தையும் சரிவர அபினயம் பிடித்துக் காட்டுதல் முடியாத காரியம். பயிற்சியும் சாதகமும் மாத்திரம் அல்ல, சுய அனுபவமும் வந்துவிட்டது என்று ஒரு பன்னிரண்டு வயது குழந்தையைக் குறித்துச் சொன்னால் அந்தக் குழந்தை ஒரு குழந்தையாகுமா? கிருஷ்ண பகவான் வாயைத் திறந்து காட்டினவுடன் ஏழு உலகங்களும் காணப்பட்டனவாம், அப்பொழுது சகல ஜனங்களும் அச்சமும் ஆச்சரியமும் கொண்டார்களாம், அதுபோலவே பருவம் வராத குழந்தைக்கு நவரச பாவமும் உணர்ச்சியில்வந்துவிட்டதாக ஸ்தாபித்தால் நாமெல்லோரும் நடுக்கம் கொள்ளவேண்டியதுதான். "மாலையிட்டவன்போல் வாயில் முத்தமிட்டாண்டி" என்கிற இடத்தையெடுத்துக்கொள்ளுங்கள். அந்த இடத்தில் சோபிக்கச் செய்யவேண்டிய சிருங்கார ரச பாவங்களையும், ஆச்சரியத்தையும், விபரீதத்

தையும், நாணத்தையும் குழந்தையின் முகத்தில் காணமுடியுமா?

ஆதலால் குழந்தைகளைக்கொண்டு நவரச பாவங்களை அபினயம் பிடித்துக் காட்டல் கலையின் கௌரவத்துக்கு அனுசிதம் மாத்திரம் அல்ல, குழந்தைகளின் அபிவிருத்திக்கும் கூடத் தீங்கு வரும். எங்கேயோ ஒருவர் இருவர் இத்தகைய அசம்பாவிதமான காரியத்தைச் செய்தால் நாம் அனுதாபப்படவேண்டிய அவசியம் இராது. அநேகர் இத்தகைய விஷப் பரீக்ஷையைச் செய்வதால்தான் நானும் அம்மாஞ்சியும் வருத்தப்படுகிறோம். பரதநாட்டியக் கலைக்கு மறுமலர்ச்சி யென்பது வேண்டியதுதான். ஆனால் பருவமும் உருவமும் முதிர்ந்து, பகுத்தறிவு, ரசபாவ உணர்ச்சி இவைகள் முற்றிலும் வாய்ந்த பெண்கள் இந்தக் கலையைக் கையாண்டால் கலைக்கு விருத்தி ஏற்படும். குழந்தைகளைக் கொண்டு ஆடவைப்பது முதிர்ந்த கலையான நாட்டியக் கலைக்கு மெத்தவும் கௌரவக்குறைவு. ஆடல்கள் கேவலம் தமாஷாக முடியும். "என்ன விறுவிறுப்புப் பாருங்கள்" என்பவர்களும், "உடுப்பு என்ன ஷோக்காயிருக்கிறது கவனியுங்கள்" என்பவர்களும், "எள்ளுண்டைமாதிரி என்னமாக் குதிக்கிறது பாருங்கள் குழந்தை" என்பவர்களும், பரதநாட்டியத்தின் சூக்ஷ்மத்தை அறியாதவர்களேயாவார்கள்.

இரண்டு வருஷங்களாக, "குட்டியைக் கொண்டு கடலாழம் பார்க்கும்" இந்தச் சம்பிரதாயம் பழக்கத்தில் வந்ததற்குக் காரணமென்னவென்று யோசித்தீர்களா? எனக்குத் தோன்றுவது என்னவென்றால், கலையில் ஈடுபட்டுக் குழந்தைகளுக்குப் பயிற்சிசெய்பவர்களுக்கு ஆத்மார்த்தச் சந்துஷ்டி குன்றிப்போய், பிறர்கண்டு மெச்சி, கீர்த்திப் பிரசாரம் நிகழவேண்டும் என்கிற ஆசைஅதிகரித்து இருப்பதால்தான் என்பது. ஆங்கில பாஷையில் இதற்கு Exhibitionism என்பார்கள். தென்னிந்தியாவில் பொதுஜன வாழ்க்கையில் பிறர் மெச்சிப் புகழ்பொங்கும் சம்பிரதாயம் சகல விஷயங்களிலும் ஊடுகொண்டுவிட்டது. புகழுக்காக ஏக்கம்பிடித்துப் பெண் சிசுக்களை வதைப்பது நவீன நாகரிகத்தில் ஒரு முக்கியமான அம்சம். வரவர இந்த ஏக்கம் பணப்பெருக்கு ஏக்கத்துடன் கலந்து விட்டது. வயிற்றுப்பிழைப்புக்காகப் பாடுபடும் கலைஞர்கள் இந்தச் சம்பிரதாயத்தைக் கைப்பற்றினால் அவர்களைப் பழிக்கலாகாது. ஆனால் செல்வாக்கும் சம்பத்தும் உள்ளவர்கள் கலைச்சுவை போதாதென்று புகழ்ச்சுவையும் பணச்சுவையும் வேண்டுமென்று ஏங்குவது கலாபிவிருத்திக்குப் பெரிய தீங்கு விளைவிப்பதாகவே காணப்படுகிறது.

சங்கீதமும் நாட்டியமும் கற்கும் பெண் குழந்தைகளுக்குப் புகழ் ஏக்கமே பிரதானமாக ஊட்டும் இயக்கங்கள் பெருகினதற்குக் காரணம் ஜனநாயக சமூகத்தின் ஆதரவில் மறுமலர்ச்சி ஏற்பட்டதே எனலாம்! பிரஜாபத்தியத்திற்குரிய தத்துவங்கள் முழுதும் இந்த இயக்கங்களில் நிலைநின்றுவிட்டன. விளக்கை யேற்றிவிட்டுத் திரைபோட்டு அதை மூடலாமா, என்கிற ஆங்கிலப் பழமொழியைச் சமயோசிதமாக அனைவரும் பிரயோகிக்கிறார்கள். நிரம்பவும் சரிதான். ஆனால் விளக்கையேற்றி விஸ்தாரமான ரஸ்தாவில் வைத்தால், காற்றடிபட்டு அணைந்து விடாதா என்று ஒருவரும் கவனிக்கமாட்டார்களே! சிறிய விளக்கு பூஜையறையிலும், சிறிது பெரிய விளக்கு கூடத்திலும் நன்றாக மூடின விளக்கு தாழ்வாரத்திலும் ஏற்றிவைத்து வீட்டைப் பிரகாசிக்கச் செய்யவேண்டும்; ரஸ்தாக்களிலும், சாலைகளிலும், சாவடிகளிலும், மழையும் காற்றும் தூம்பும் தூசியும் தாங்கக்கூடிய பெரிய காந்தவிளக்குகளை ஏற்றிவைத்தால் அனைவருக்கும் பயன்படும். அதுபோலவே, நம் குழந்தைகள் கலைகளை நன்கு பயின்று நிபுணர்களானால் நம் வீடுகளில் அவர்களுடைய ஜோதி பிரகாசிக்கச் செய்து, உற்றார், உறவினர் நண்பர்கள், ரசிகர்கள் போன்றவர்களை வரவழைத்துக் கண்குளிரப்பார்த்துக் காது குளிரக்கேட்டுச் சந்தோஷிக்கச் செய்வது நியாயமா, அல்லது பரபரவென்று இழுத்துக்கொண்டுபோய் நட்டநடுத்தெருவில் நிற்க வைத்து, நீயே வா, நீயே வா, என்று அழைத்து கைகொட்டிக் களிப்பது நியாயமா? சங்கீதப் பயிற்சியில் முதல் மேடை ரேடியோ, இரண்டாவது மேடை சினிமா, மூன்றாவது மேடை இசைத்தட்டுக்கள், நான்காவது மேடை கச்சேரிகள்; அதேமாதிரி நடனத்தில் முதல்மேடை ஊளப்புகள், benefit performances, (அதாவது உதவிக்கச்சேரிகள்) டீபார்டிகள் போன்றவை. இரண்டாவது மேடை wall poster கள், பத்திரிகைப் பிரசாரங்கள் சபாவாக சபைகளில் கச்சேரிகள், இத்துடன் சினிமா படங்களில் பிரமேயமில்லாத ஆடல்கள்! தமிழ்சினிமா படங்களில் சற்றேறக்குறைய எல்லாப் படங்களிலும் ஒரு பரதநாட்டிய ஸீன் இருக்கும். எந்தக் கான்பரன்ஸ் (conference)வேணுமென்றாலும் பாருங்கள் ஒரு நாட்டியக் கச்சேரி இல்லாமல் இராது. போதாக்குறைக்கு, யுத்தம் வந்தாலும்

# *In* BUSINESS

## — the *time* factor



நியூ ஷேப் "கிப்ஸேக்"
வெஸ்ட் எண்டு பேடண்ட் எவர் பிரைட்
ஸ்டீல், விலை ரூ. 60/-

75 வருடங்களாக இந்தியாவுக்கென உயர்தர கடிகாரங்கள் தயாரிப்பவர்கள் என பிரக்யாதிபெற்று விளங்குவது நமது வெஸ்ட் எண்டு மாடல்கள்.

### காரியாலயங்களில் மணி குறிக்கும் கருவி!

ஆபீஸ், தொழிற்சாலை, மில் — ஏன், வாழ்க்கைக்கென நடத்தப்படும் எல்லாக் காரியாலயங்களிலும், மணி தான் முக்கிய அம்சமாக விளங்குகிறது. வேலைக்கு வருவதற்கோ குறிப்பிட்ட வேலையைச் செய்வதற்கோ டெலிவரி செய்வதற்கோ—எல்லாவற்றிற்கும் கால அளவைக் குறிக்கும் கருவியினால்தான் திட்டப்படி சரிவர நடத்தமுடியும். எனவே வேலையாளாயினும் சரி, முதலாளியாயினும் சரி, எல்லோருக்கும் கடிகாரம் அத்யாவசியமாகிவிட்டது. நம்பத் தகுந்ததாக இருக்கவேண்டுமாயின் "வெஸ்ட் எண்டு" கடிகாரம்தான் உகந்தது. ஒவ்வொருவருடைய விருப்பம் சக்தி இவைகளுக்குகந்த பல மாடல்கள் சீக்கிரத்தில் கிடைக்குமென் நம்புகிறோம்.

வெஸ்ட் எண்டு வாட்சு கம்பெனி
பம்பாய் — கல்கத்தா

# WEST END WATCH Co.

BOMBAY CALCUTTA

வந்தது, இந்தியாவில் வந்த ஒவ்வொரு சோல்ஜரும் பரதநாட்டியம் பாராமல் வெளியேறவில்லை. இத்தனைவித சம்பவங்களுக்கும் ஆட்டம் காட்டுவதற்குச் சிறுமிகள் வேண்டுமே! புற்றில் இருந்து ஈசல் கிளம்பியதுபோல்தான் கிளம்பியிருக்கிறது! இதுவும் மறுமலர்ச்சிதான் போலும்!!

*　　　*　　　*

"மீரா"என்ற பேசும்படத்தைப் பார்த்தீர்களா? பாராமலிருக்கலாமா? நானும் அம்மாஞ்சியும் பார்த்தோம்! அம்மாஞ்சியின் அபிப்பிராயம் என்னவென்பீர்களோ? சொல்லுகிறேன்! முதலாவது, நடிகர் நாகையாவா அந்தப் படத்தில் பங்கெடுத்துக்கொண்டார், அல்லது அவரைப்போல் வேறு யாராவதா என்கிறான்! "ரைதுபிட்ட," "வந்தேமாதரம்," "பக்த போதன்னா" என்கிற படங்களில் நடித்ததென்ன, "மீரா"வில் நடித்ததென்ன? ரஜபுத்ரராணாவின் உடுப்புக்களை அணிந்தவுடன் அவருக்குத் தேக சங்கடம் மேற்கொண்டுவிட்டதா எனலாம் போலிருக்கிறதே, என்கிறான் அம்மாஞ்சி. ம. ஷ. சுப்பலக்ஷ்மியம்மாளுடைய சங்கீதத்தைக் குறித்துத்தான் நாம் எழுதவேண்டிய அவசியமில்லை. ஆனால் கீதத்துக்குமாத்திரம் ஒரு படத்தை இரண்டு மணிநேரம் பார்க்கமுடியுமா? காற்றில் வரும் கீதத்தைக் கேட்க, கண்ணுக்குச் சிரமம் கொடுப்பதேன்? அந்தப் படத்தில் மனதைக் கவரச்செய்து ஊக்கத்தை விருத்திசெய்ய முதல் அரைமணி நேரத்துக்குமேல் எங்களுக்கு ஒன்றும் ஏற்படவில்லை. வீட்டுக்கு வந்து நாகையாவுக்கு ஒரு கடிதம் எழுதி, தபாலில் இட்டோம்! என்னவென்றால் "தியாகய்யா" என்கிற படம் எப்பொழுது வெளிக்கிளம்பப் போகிறது? அதை நாங்கள் எதிர்பார்க்கிறோம்! பக்த போதன்னாவாயிருந்தவராகிய நீர் மீவார் ராணாவாக மாறாமல், நேராகத் தியாகய்யாவாகமாறியிருந்தால் நன்றாயிருந்திருக்குமே! ஆயினும் பார்ப்போம்! என்பதே!

*　　　*　　　*　　　*

சங்கீதம், நாட்டியம், நாடகம், பேசும்படம் முதலிய கலைகளில் சில வருஷங்களாக ஏற்பட்டுள்ள மாறுதல்களுக்குக் காரணம் என்னவென்று அம்மாஞ்சியைக் கேட்டால் அவன் சொல்லுகிறான்: முன்காலத்தில், அதாவது சுமார் 50 வருஷங்களுக்கு முன் வரையில் கலைகள் பிரபுக்களின் ஆதரவில் மட்டுமே இருந்துவந்தன. இப்பொழுதோ அவைகள் ஜனநாயக சமூகத்தின் ஆதரவில் வந்திருக்கின்றன. ஆதலால்தான் மேலே கூறியபடி, பிரஜாபத்தியத்திற்குரிய தத்துவங்களெல்லாம் கலைகளில் புகுந்துள்ளன. பொது ஜனங்கள் தம்முடைய மனோபாவத்துக்குத் தகுந்தபடி சங்கீதம் மாறவேண்டும் என்னும் புதிய இயக்கங்களைக் கைப்பற்றி இருக்கிறார்கள். சங்கீதத்தில் எப்பொழுது மாறுதல் உண்டாயிற்றோ, அப்பொழுதே அதை யனுசரித்த கலைகளிலும் மாறுதல்கள் உண்டாயின. தமிழ்நாட்டுப் பொது ஜனங்கள் தமிழ் சங்கீதமே வேண்டுமென்றும், தெலுங்கர்கள் தெலுங்கு சங்கீதமே வேண்டுமென்றும், பாஷைக் கிளர்ச்சியில் ஈடுபடாத தேசபக்தர்கள் தேசபக்தி புகட்டும் கீதங்களே வேண்டுமென்றும் கேட்பது மேலே சொன்ன மாறுதலால்தான். பிரபுக்களின் ஆதரவில் இருந்தபோது கலைகள் கடினமான சாஸ்திர லக்ஷணங்களைப் பொருந்தி இருந்தன. பொது ஜனங்களின் ஆதரவில் வந்தவுடன் அவர்களுடைய வாழ்க்கை நடைகளும் முக்கிய இச்சைகளும் கலைகளின் ரீதியை மாற்றத் தொடங்கின. சங்கீதத்தில் கலப்புக்கள்புகுந்தன. சம்பிரதாயமும், சாஸ்திர லக்ஷணமும் அப்புறப்படுத்தப்படலாயின. செவிக்கு இனிமை என்பதே பிரதானமாய்க்கருதப்பட்டது. அதுபோலவே நாட்டியத்திலும் நூதனமான நடனங்களும் அபினயங்களும் அனுஷ்டானங்களும் புகுந்துவிட்டன. மலையாளதேசத்து 'கதகளி'யில் சிறிது பாகம், "மணிபூர்" நடனத்தில் சிறிதுபாகம், "கதக்" நடனத்தில் சிறிதுபாகம் எல்லாம் பிரசாரத்தில் வந்திருக்கின்றன. ஆடுபவர்களுக்கு மனோபாவம் ஏராளமாய்ப் பெருகிவிட்டது. பாம்பு நடனமென்றும், மயில் நடனமென்றும், மன்மத நடனமென்றும், சிவனார் தாண்டவமென்றும் பலவித நூதன ஆடல்களை நாம் காண்கிறோம். தவளை நடனம், வெட்டுக்கிளி நடனம், எருமைக்கன்றுக்குட்டி நடனம் என்பவைகளும் கூடியசீக்கிரம்வரலாம். சங்கீதத்திலும், நடனத்திலும் குடியேறின மாறுதல்களைக் கைப்பற்றி, வெளியிடுதற்கு வெகு தீவிரத்துடன் சினிமா டைரெக்டர்கள் ஆஜராயிருக்கிறார்கள்; மாறுதல்களில் ஒன்றாவது வீண்போகாது, புதிதாக எது கிடைத்தாலும் உடனுக்குடனே அதைப் பதிப்பித்துப் பிரசாரப்படுத்திப் பயன்படுவதற்குத் தயாராயிருக்கின்றனர். ஆகவே இன்றைக்கு ஒரு புதிய சம்பிரதாயம் ஒரு சிறிய மூலையில் ஏற்பட்டால் இன்னும் ஆறுமாதத்தில் நாடெங்கும் அதைப் பரவச்செய்வது சினிமாவின் கைங்கர்யம். ரேடியோ அதிகாரிகளின் கைங்கர்யமும் இதில் சிறிது இருக்கும். ஆகவே சகல விஷயங்களிலும் நாள்தோறும் மாறுதல்களுக்கு நாம் தயாராயிருக்கவேண்டும். இது கலியுகத்தின் அந்தியல்லவா? பிரளயத்துக்குப் பயந்தால் முடியுமா?

<u>முன் தொடர்ச்சி</u>

# "ஆனை - ஐயா" கீர்த்தனைகள்

டாக்டர் வே. ராகவன்

* XIII. நாடகுரிஞ்சி — ரூபகம்

பல்லவி

காணக்கண் - ணாயிரம் வேணும் - அதை
கண்ட கருத்துக்கல்லோ சுகங்காணும்

அனுபல்லவி

வாணர்துதிக்குந் தர்மஸம்வர்த்தனிக்குகந்த
வடிவோனே உள்ள படிதானே † (காண)

சரணம்

1. திங்களணிந்த $ செஞ் சடையானை‡ த்
திரிபுரமெரி நகை யுடையானை
இங்கிதமான வெண் விடையானை
இடைதனில் தோ லுடையானைக் (காண)

2. ஆடரவம்பணி அரனை
அரியயன்காணாப் பரனை
ஆடகமணியணி கரனை
அன்பருள்ளத்தில் அகலாத்திகம்பரனைக் § (காண)

3. கனகச்செஞ்சிலம்பணி பாதனைக்
காணக்கவலையகற்றும் ‖ விநோதனை
மனதுக்கின்பந்தரும் நாதனை
வாழுமுமாதாஸன்பணி போதனைக் (காண)

---

* இரண்டாவது சுவடியிலும் இவ்வுருப்படி எழுதப்பட்டிருக்கிறது; அங்கு பிலஹரி, நீலாம்பரி என்று ராகங்கள் எழுதி அடிக்கப்பட்டிருக்கின்றன. இது 1903-ஆம் வருஷத்து 72 மேளராக மாலிகைப் பதிப்பில் நீலாம்பரி — ஆதி என்று அச்சாயிருக்கிறது; அப்பதிப்பிற்கும் இச்சுவடிக்கும் பாட பேதங்களும் இருக்கின்றன.

† உள்ளபடிதானே உன்னைக் (காண) $ திங்களிலங்கும். ‡ சடையானே, உடையானே, அரனே, பரனே என்று அடிகள் முடிகின்றன. § திகம்பரனே உன்னை. ‖ கண்டகணத்தில் கவலையகற்றும்.

## XIV. ஆனந்த பைரவி — ரூபகம்

### பல்லவி

* ஐயாரு யென்னை யாதரி ஒய்யாரா

### அனுபல்லவி

ஐயமென்றோர்தம தையம் விலக்கிய
வையகத்தோர்புகழ் தர்மஸம்வர்த்தனிக்குகந்த (ஐயாரு)

### சரணம்

1. வஞ்சமத்த நெஞ்சகத்தில் உரைஞ்சிடும்
அஞ்சு நதிக்கரசே பிபஞ்சநாதா †
கஞ்சமலர்க்கண்ணன் சோதரி
கொஞ்சும்முக் கண்ணுடைஞ்சுமுகனே
தஞ்சமென்றோர்துயர் துஞ்சஅகற்றியே
செஞ்சொல்மதுரமாக்குஞ் சிரிப்புடன் ||
நெஞ்சுதனிற் கொடு நஞ்சுதரித்திடும் ‡
ரஞ்சிதனே என்சொல்லுவேன் உன்சரிதையை (ஐயாரு)

2. சந்திரனும் சிறந்த கங்கை தானுஞ்சி
ரந்தனில் பந்தியாய்ச் சிந்திடா தணிந்து
சந்தனம் நீறும் பீதாம்பரம் தோல்பணி §
விந்தையோ டென்பு மான் சேர்ந்து
கந்தன் கணபதித் தந்தையே யுந்தன்க
ரந்தனிற் கனலோடு டுக்குஞ்சூலமும் ஏந்துஞ்
சொந்தமான தெய்வமென் தனுக்கு நீயென்
றந்தரங்கமாக உந்தனைப் பணிந்தேன் (ஐயாரு)

3. சித்தசனை நெத்திவிழியால் எரித்த
சித்தனே பக்தற் கருள்தரும் கர்த்தனே
சித்தம் மகிழ்ந்து துதித்தவர்க்கு நித்திய
சித்திதரும் நித்தியனே
சுத்தமத்த வெத்தி பெத்த தத்துவம
கத்துவத்தில் சுத்தமாய் வளர்த்த
உத்தமியாள் உமாதாசனைக் காத்திடும்
உத்தமனைப்பத்தி பத்தியாய் வந்தித்தேன் (ஐயாரு)

---

* இவ்வுருப்படி இரண்டுதடவை எழுதப்பட்டிருப்பதுடன் பல வரிகளில் பாடபேதங்களுடன் காணப்படுகிறது.

பாடபேதம் — † பஞ்சநதீசா பரஞ்சோதியப்பனே. || அஞ்சிடா தென்றருளிக்குஞ் சிரிப்புடன். ‡ பஞ்சரித்து (?) கொடு நஞ்சமுதாயுண்ட. § சந்தனந்தாள் மணி ஜரிகையும் தோல்பணி

சித்தசன்-மன்மதன்; சித்தனே-ஸித்தனே; தவஸியே; உத்தமனைப்பத்தி-உத்தமனைப் பற்றி; உத்தமன் விஷயமாய்; பத்தியாய்-பக்தியாய்; பஞ்சரித்து-கொஞ்சிப்பேசி.

XV. சாவேரி — ரூபகம்

பல்லவி

$ வர்மமா என்மீதில் தர்மசம் வர்த்தனீச்வரி (வர்)

அனுபல்லவி

கர்மம்விலக்கும் நிர்மல சிவ
காரணி என்னைக்காக்க இன்னமும் (வர்)

சரணங்கள்

1. அஞ்சுவயதுமுதலாயுனது - கஞ்சமலர்ப்பதந்தனையான்
* தஞ்சமென்றேயஞ்சித்துதிக்கும் - நெஞ்சகமறிந்தும்
† கொஞ்சிடுஞ்சுகமொழியாயிந்த - வஞ்சகம்செய்வதென்ன நியாயம்
பஞ்சநதீசர்க்குகந்த பஞ்சாக்ஷரிகண்பார்க்க இன்னமும் (வர்)

2. செஞ்சடையினிற்பிஞ்சுமதியும் - நெஞ்சிற்கொடுநஞ்சணிந்திடும்
செஞ்சொல்மதுரத்தமிழ்வாக்கருள் - ஐப்யேசர்க்குராணிமானே
செஞ்சிலம்பொலிமிஞ்சியதாற் - கெஞ்சுமென்மொழிகேட்டிலையோ
என்சொல்லுவேன்உன்சரித்திரம் - என்சொல்லைக்கேட்டருளஇன்னமும் (வர்)

3. மஞ்சடர்தென்னஞ்சோலையும் - கஞ்சமலர்த்தடவாவியும்
மஞ்சள்கதளியிஞ்சிமாத் - துருஞ்சிபிலாக்கனியும்
ரஞ்சிதமாயோங்குமெங்க - ளஞ்சுநதிக்கரசாகிய
வஞ்சியுமாதர்ஸன்துதிக்கும் - ஸஞ்சீவிஅபரஞ்சியின்னமும் (வர்)

---

$ இது சில பாடபேதங்களுடனும், மூன்றுவது சரணம் அகப்படாமலும் ம. ம. உ. வே. சுவாமிநாதய்யரவர்களால் சில்பஸ்ரீ 4-வது வால்யூம், 385-வது பக்கத்தில் பிரசுரிக்கப் பட்டது.

* தஞ்சமென்று பஞ்சரித்திடும் † அஞ்சுக மொழிமயிலே

## XVI. *கல்யாணி — ரூபகம்

### பல்லவி

மானம் வைத்தருள் தா சுந்தரி
வரதாயகி நிரந்தரி அபி (மானம்)

### அனுபல்லவி

கானலோலன் ஐயாறப்பன்
கண்மணிஎன் னம்மணிமனோன்மணி (மானம்)

### சரணம்

1. நேராக நின்பதற் சீராகப்பணிந்து
தேருதவேன்சிந்தை ‖ தேறியே கசிந்துகண்
ணீரவேதுதிசெய்யும் நாரணியே யுனது
பேருரைத்திடும்பிள்ளை யேன்பிழை பொறுத்தருள்அபி (மானம்)

2. ஆலகாலமுண்ட ‡ நீலகண்டனது
மேலோர்பாகமிருக்கும் வாலத்திருபுரையுனை
நாலாமறைகளேற்று நாளுமடியார்போற்று
பாலாம்பிகையேபரி பூரணிபரிபாலனி யனுகூலினியபி (மானம்)

3, மாதாவிலுமன் புமாதாரசனுக்கருள்
தாதாவுயிரேழுத் தாதாரப்பொருளே
நாதாந்தி ஆதிசிவானந்தி எந்நாளும்
§ தீதிலாத நீதியே செல்வதர்மஸம்வர்த்தனியேயபி (மானம்)

---

* இது 72 மேளராகமாலிகைப் பதிப்பில் சங்கராபரணம்—ஆதி என்றும், சில பாடாந்தரங்களுடனும், முதல் இரண்டாவது சரணங்கள் இல்லாமலும் வெளியாகியிருக்கிறது. இங்கு நான் கொடுத்திருக்கும் பாடமே மேலானதாய்த் தோன்றுகிறது.

என்னிடமுள்ள இரண்டாவது சுவடியிலும் இவ்வுருப்படி காணப்படுகிறது; அங்கு இருக்கும் பாடபேதங்கள்:- ‖ தேறவே யுகந்து - பேரால் பெருஞ்செல்வமே பேரின்பமே யுனது - பிள்ளை என்னை உள்ளம் வைத்துள்ளபடி. ‡ கோலாகலனுள்ள மாலாகிப்புணரும் வாலத்திரிபுரையே நாலாகலைப்பெற்ற நாவலர் துதிபெற்ற நாரணி பரிபூரணி யித்தாரணிக்குள். § நாதவிந்துவான இன்ப - மேயம்பிகை யென்னை.

(தொடரும்)

தொடர் கதை

# அம்பாச்சாரி

கே. சுந்தரம்மாள்

— 10 —

"நாதர் முடிமேலிருக்கும் வெண்ணிலாவே, நானுமங்கே வரவேண்டும் வெண்ணிலாவே" என்ற பாட்டைச் சாந்தினியை மடிமீது உட்கார வைத்துக்கொண்டு சொல்லிக்கொடுத்து, மழலையால் வரும் கீதத்தைக் கேட்டு ஆனந்தத்தில் உற்சாகத்துடன் சேர்ந்து பாடினான் சந்தர், தனது வீட்டு மேன்மாடத்தில் நிலவொளியில்.

"ரோகிணியின் காதல் ஜோடியைக் கண்டு களிக்க, சந்தரின் காதல் ஜோடி சீக்கிரத்தில் அமைந்துவிடுமென்று எதிர்பார்க்கிறேன்" என்று சொல்லியவாறு சந்தரின் பக்கத்தில் வந்து நின்றாள் சுசீல் குமாரி.

"என்ன சித்தி! பரிஹாசத்தில் இறங்கிவிட்டாயே" என்றான் சிரித்தவாறே சந்தர்.

சற்றுநேரம் சாந்தினியுடன் இருவரும் விளையாடினார்கள்.

"சுசீல்! இவ்விடமா இருக்கிறாய்? உன்னைத் தேடிக்கொண்டே ஒவ்வோரிடமாகச் சுற்றினேன். சந்தரும் இருக்கிறானா? மிகவும் சந்தோஷம்" என்று அவர்கள் அருகில் உட்கார்ந்தார் முகர்ஜீ.

"என்ன விஷயம்? இவ்வளவு அவசரமாக என்னைத் தேடியது" என்றாள் சுசீல்.

"விஷயம் இருக்கிறது. மதுசூதனகோஷ் தமது பெண் விமலாவைச் சந்தருக்குக் கொடுப்பதாக, நமது அபிப்பிராயத்தை அறிந்து வரும்படி ஆள் அனுப்பினார். பெண்ணை நாம் பார்த்திருக்கிறோம். குலம், பணம் முதலிய எல்லா விஷயங்களிலும் தகுந்த சம்பந்தமே. சரியென்று சொல்லிவிடலாமென்று நினைத்தேன். பிறகு ஒரு வார்த்தை உங்களிடம் கேட்டுவிட்டுச்சொல்லலாம் என்று, 'நாளை பத்து மணிக்குப் பதில் சொல்லுகிறேன்' என்று அனுப்பிவிட்டேன். உங்கள் இருவருக்கும சம்மதம் தானா?"

"தாயும் மகனும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். யார் பதில் சொல்லுவது" என்ற பிரச்னையில் கொஞ்ச நேரம் மௌனம் நிலவியது.

"என்ன? பதில் ஒருவர் வாயிலிருந்தும் வரவில்லை. முன்னாலேயே ஏதாகிலும் திட்டம் வகுத்தாய்விட்டதோ. அந்தச் சந்தேகத்தினாலேயே நான் உடனே பதில் சொல்லவில்லை"

"உங்கள் யூகம் சரியே. நாங்கள் இருவரும் ஒரு பெண்ணைத் தீர்மானம் செய்து வைத்திருக்கிறோம்"

"யாரது? சொல் பார்க்கலாம்"

"அக்கௌண்ட் ஜனரல் கிருஷ்ணசுவாமி சர்மாவின் பெண் குந்தளம். அன்று பார்ட்டியில் பார்த்தோமே. தாங்கள் கூடச் சிலாகித்துப் பேசவில்லையா?" என்றாள் சுசீல் குமாரி.

"என்ன? சர்மாவின் பெண்ணா? மதராசிக்காராளிடம் சம்பந்தம் செய்யமுடியுமா? உலகம் அறிந்து பேசுகிறீர்களா? அல்லது விளையாடுகிறீர்களா?" என்றார் முகர்ஜீ.

"நாகரிக உலகத்தின் போக்கை அறிந்தே சொல்லுகிறேன், விளையாடவில்லை. மதராசிப் பிராமணாள் நமக்குத் தாழ்ந்தவர்களல்லவே. ஊரின் பெயரால் தடைசொல்லுவது சரியாகாது."

"என்ன சுசீல், விபரமில்லாமல் பேசுகிறாய்? நாம் ஒத்துக்கொண்டாலும் அவர்கள் சம்மதிப்பார்களா? சந்தர்! இது விளையாடும் விஷயமல்ல. உன் அபிப்பிராயத்தைச் சொல்லு" என்றார்.

"அப்பா! என்றாவது சித்தி என் விஷயத்தில் அபிப்பிராய பேதமாகப் பேசியதுண்டா? நான் எவ்வளவு முயன்றும் அப்பெண்ணை மறுக்கமுடியவில்லை. எங்களிடை ஏற்பட்ட அன்பு தெய்வீகம் என்ற முடிவிற்கே வரவேண்டியிருக்கிறது. இல்லாவிடில் இவ்விதம் மாறுபாடான பிரேமையை விதியானது ஏன் ஏற்படச்செய்கிறது. அவளும் என்னை மனப்பூர்வமாகக் காதலிக்கிறாள். எவ்வளவோ விதமாக இவ்விஷயத்தில் பிரயத்தனப்பட்டும் தடுக்க முடியவில்லை. அதனால் கல்யாணத்தினால் சுகத்தையும் சந்தோஷத்தையும் நான் அடைவதைத் தாங்கள் விரும்புவதாக இருந்தால், குந்தளத்தைத் துணைவியாக்குங்கள். அல்லது குலமும் பணமும்தான்

பிரதானம், என் சுகம் பெரிதல்ல என்பது உங்கள் பிரியமானல் நீங்கள் பார்த்துத் தேர்ந்தெடுக்கும் பெண்ணை மணந்துகொள்கிறேன். என் இஷ்டத்தைக் கேட்கவே வேண்டாம். உங்களை எதிர்த்து மட்டும் ஒரு காரியமும் செய்யமாட்டேன் என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம்'' என்று சொல்லிவிட்டு எழுந்து உள்ளே சென்று விட்டான்.

திகைப்பூண்டை மிதித்தவர்போல் நிலை கலங்கி நின்றார் முகர்ஜி. அவருக்கு என்ன பேசுவது என்பது தோன்றவில்லை. ''சுசில்! இது என்ன விசித்ரம். ஆனந்தகரமாக நடந்துவந்த குடும்ப வாழ்க்கையில் சோகப் புயல் கிளம்பும்போலிருக்கிறதே. நீ ஏன் இது விஷயத்தில் முயற்சி எடுத்து அவன் மனதை மாற்றக்கூடாது?''

''நான் மாற்றும் நிலைமையில் இல்லை அவன் மனம். காதல் மணத்தையே அவன் மனம் விரும்புகிறது. இதனால் யாதொரு குற்றமுமில்லை'' என்றாள்.

''காதல் மணம் என்றால் அதற்கும் ஓர் எல்லை கிடையாதா? ஏதோ ஏழை வீட்டுப் பெண். கௌரவத்திற்குப் பங்கம் என்று நினைத்தால் நீ சொல்லுவது சரி. குலம், தேசம் யாவும் மாறுபாடான விஷயம். என் மனம் குழம்புகின்றது. சந்தரின் வாக்யம் என் மனதில் சோகத்தையே கொடுக்கின்றது. அவனது பணிவான வார்த்தை என்னை மதிமயங்கச் செய்கின்றது. அவன் என்னை எதிர்த்து அப்படித்தான் செய்வேன் என்று சொல்லியிருந்தால், முடியாது என்னிஷ்டம்போல்தான் நடப்பேன் என்று சண்டைபோட மனம் துடிக்கும். இப்பொழுது அவனுக்கு விரோதமாகப் பேசவே நா எழவில்லை. இது என்ன கொடுமை. எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே'' என்றார்.

''வீணாகக் கலங்கவேண்டாம். அவன் சந்தோஷ வாழ்க்கை நடத்தினால்தானே நமக்கு இன்பம்'' என்றாள் சுசில்குமாரி.

சற்றுநேரம், ஆகாயத்தைப் பார்த்த படியே சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் சிந்தனையிலாழ்ந்தார். சற்றுப் பொறுத்து ''எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. அவன் பணிவான சொற்கள் என்னை மிக வாட்டுகின்றன; உம்'' என நீண்ட மூச்சு விட்டார். ''பிறகு சரி, இதுவிஷயம் இரவில் சிந்தனைசெய்து முடிவிற்கு வரலாம், படுக்கைக்குச் செல்லலாம்'' என எழுந்தார்.

இரவு நித்ராதேவி அவரை அணைக்க மறுத்துவிட்டாள். ''இந்த மாறுபாடான கல்யாணம் எப்படி நடக்கும். பிள்ளையின் மனம் சந்தோஷமாக இருக்கவேண்டும். தாயற்ற சேயின் மனம் வருந்தக்கூடாது. சமூகத்தை எவ்விதம் எதிர்ப்பது'' என்ற சிந்தனைக்கு முடிவே காணாத நிலைமையில் பொழுதும் விடிந்தது.

கண்ணை விழித்ததும், கவலைவந்து மூடிக்கொண்டது. அந்தச் சமயம் ஸ்னானம் செய்த ஈரத் தலை முடிச்சுடனும் நெற்றியில் குங்குமம் பிரகாசிக்க, உள்நுழைந்த சுசில் குமாரியைக் கண்டதும், சூரியனைக் கண்ட பனியென அவர் கவலையின் பாரம் மறையத் தொடங்கியது.

''சுசில்! இந்த விஷயத்தில் எந்தவித முடிவிற்கு வருவதென்பதைப் பற்றி என்னால் தீர்மானம் செய்ய முடியவில்லை. நீயாவது ஒரு யோசனை கூறு''

''என் யோசனையை முன்னாலேயே சொல்லிவிட்டேன். காதல் மணத்தையே நான் பாராட்டுகிறேன்''

''ஐயோ காதலே! கல்யாணமே வேண்டாம் என்றிருந்த என்னை, உன்னுடைய காதல் முயற்சியினால், விடாமல், என் விருப்பமில்லாமல், என்னையே அடைந்தாய்; அதென்ன காதல்''

''தங்களை என் மனம் தெய்வமாகப் போற்றுகின்றது. ஏன் தாங்கள் மட்டும் என்னிடம் காதலில்லாமல் வெறுப்புடன் நடந்துகொள்ளுவதால்தான், பிறந்தவீட்டிற்குச் சென்றால்கூட மூன்றுநாட்களுக்குள் அழைக்க வருவதும், வெளியில் சென்றுவந்தால்கூட வரும்பொழுதே உடைகூட மாற்றாமல் என் அறைக்கு ஓடிவந்து......'' என்று சிரித்தாள்.

''உனது பூர்ண சந்திரன் போன்ற முக விலாஸமும் அமிருதம் போன்ற குணத்தின் தன்மையுமே அவற்றிற்குக் காரணம்''.

''அவைகள் மாத்திரம் என்ன? காதலின் சுவையில் அடங்கியவையல்லவோ?''

''சரி. நமது காதல் இருக்கட்டும். இன்று பத்து மணிக்கு அவர்களுக்குத் தகவல் சொல்லவேண்டுமே. காதல் காதல் என்றாலும், பெண்ணைப் பெற்றவர்கள் நோக்கம் அறியவேண்டாமா? அவன் இஷ்டப்படி பிறகு என்னவேண்டுமானாலும் செய்யட்டும். இப்பொழுது அவர்களுக்குச் சம்மதம் என்று சொல்லியனுப்பிவிடுகிறேன்.

"ஆஹா, இது நல்ல முறை. அநியாயமாக ஒரு பெண்ணின் வாழ்க்கையைத் துன்பத்தில் உழலச்செய்வது எவ்வளவு கொடுமை? அதிலும் அவர்களுக்கு ஒரே பெண்"

"தானே அந்தப்பெண் வந்தால் சரியாகப் போய்விடும். அவளும் நல்ல அழகியே"

"அழகுதான் காதலுக்குக் காரணமென்பது உங்கள் சித்தாந்தம்போலும். ஹ்ருதயத்தின் பண்பே காதலின் தத்வம். மனப்பிரேமையில்லாமல் நமக்காக நடத்தும் வாழ்க்கையில் அப்பெண் காண்பது ஹ்ருதயமற்ற காதலே. சந்தர் கொடூரமாக நடக்கமாட்டான், ஆனால் உள்ளெழுந்த காதலைப் பங்கிடமுடியுமா? உலகில் பெண்களுக்கு வேண்டுவது ஹ்ருதயபூர்வமான காதல். அதிருந்துவிட்டால் உலகின்கண் வேறொன்றும் தேவையாயிருக்காது. தயவுசெய்து உங்களை வேண்டிக்கொள்ளும் வரத்தை நிராகரிக்காதீர்கள். சம்மதமில்லையென்றால் சந்தர் நித்யபிரும்மசாரியாக வாழட்டும். ஒரு பெண்ணின் வாழ்வைப் பாழ்படுத்தவேண்டாம்" என்றாள் கெஞ்சும் பாவனையாக.

"ஐயோ இதென்ன கஷ்டம்? நாலுபுறமும், அன்பின் கணைகளினாலேயே என்னைத் துளைக்கிறீர்களே. சரி, உன்னிஷ்டம்போல் செய்வதாக இருந்தாலும் சர்மாவின் அபிப்பிராயத்தை எப்படிக் கேட்பது? பணத்தினால் சமூகத்தை எதிர்க்கமுடியும்; ஆனால் சர்மா..........." என்று நிறுத்தினார்.

"முதலாவதாகப் பல்விளக்கி, காலை ஆகாரத்தைச் செய்யுங்கள். பிறகு சர்மாவிற்கு ஆள் அனுப்பி அழையுங்கள். நானும்கூட இருக்கும்பொழுது, இதைப்பற்றிப் பேசலாம்."

"என்ன சுசீல்! அவர் ஏதாவது விபரீதமாக நடந்துகொண்டு திட்டினால்?"

"அப்படிச் செய்யமாட்டார். அதிலும் விஷயமிருக்கிறது. அவர் சம்மதித்து விட்டால் தாங்கள் ஆக்ஷேபனை சொல்லமாட்டீர்களே?"

"மெஜார்ட்டி பார்ட்டிதானே ஜயிக்கும்," என்று எழுந்து நடந்தார்.

— 12 —

மாடியிலுள்ள தனி ஹாலில், முகர்ஜி, சுசீல்குமாரி, சந்தர் மூவரும் மூன்று நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். நான்காவது நாற்காலி காலியாக இருந்தது.

"இன்னும் காணவில்லையே" என்றார் முகர்ஜீ.

"மனோவேகமும், மோட்டார் வேகமும் ஒன்றாக முடியுமா?" என்று சிரித்தாள் சுசீல்குமாரி அந்தச்சமயம்.

"நமஸ்தே" என்று கைகூப்பியவண்ணம் உடனே நுழைந்தார் சர்மா.

"நமஸ்தே, வாருங்கள். இப்படி உட்காருங்கள்" என்று நாற்காலியைச் சுட்டிக் காட்டினார் முகர்ஜி.

உட்கார்ந்துகொண்டதும், "என்னை அழைத்த விசேஷம் என்னவோ?" என்றார் சர்மா,

யார் பேச்சைத் துவக்குவது என்பது போல் தம்பதிகள் பார்த்துக்கொண்டனர். இவர்கள் மௌனம், சர்மாவைத் திகைக்கச் செய்தது. நன்மைக்கா தீமைக்கா என்று புரியாமல் தத்தளித்தார்.

"மிஸ்டர் சர்மா, விஷயத்தை எப்படிச் சொல்லுவது என்று மனம் தயங்குகின்றது; ஆனால் சொல்லவேண்டியது அவசியமாகிறது. தங்கள் மனதிற்கு ஒவ்வாமற் போனால் அதற்காகக் கோபப்படாமல் விஷயத்தைத் தீர்க்கமாகச் சிந்திக்கவேண்டும். என்னையும் மன்னிக்கவேண்டும்" என்றார் முகர்ஜி.

"அடடா! என்ன பெருந்தன்மையான குணம். எவ்வளவு பணிவு. எதற்காக இவ்வளவு பீடிகை" என்று சிந்தித்தவண்ணம் "அடடா, தாங்கள் இப்படிக் கேட்கலாமா? எது விஷயமானாலும் தயங்காமல் கேளுங்கள்; மனிதருக்கு மனிதர் அன்பினாலல்லவோ கட்டுப்படவேண்டும்" என்றார் சர்மா?

தொண்டையைக் கனைத்துக்கொண்டு, "ஒன்றுமில்லை, சந்தரும் உமது பெண் குந்தளமும் பரஸ்பரம் விரும்புகிறார்கள். எனக்கு ஒரே மகன். அவன் மனதிற்கு விரோதமாக நடக்க என் மனம் விரும்பவில்லை. அதனால் காதல் மணமாக இதை நடத்தலாம் என்பது எனது விருப்பம். உங்கள் சம்மதம் கேட்கவே அழைத்தேன்" என்றார்.

படார் என்று சம்மட்டியால் ஓங்கித் தலையில் அடித்தால் எவ்வித அதிர்ச்சி உண்டாகுமோ அவ்விதமிருந்தது சர்மாவின் நிலைமை. தலையைப் பிடித்துக்கொண்டார். பிறகு சற்றுத் தைரியப்படுத்திக்கொண்டு, "முகர்ஜீ! தாங்கள் என்னைக் கேலி செய்கிறீர்களா? நாங்கள் மதராசிப் பிராம்மண குலம். தாங்களும் மாராட்டிய பிரும்ம குலம். அதனால் நாம் சாப்பிட்டுக்கொள்ளுவது சகஜம். ஆனால் சம்பந்தம் எப்படி?

மேலும் தங்கள் அந்தஸ்தெங்கே? என்னுடைய நிலைமை எங்கே? உலகமும் சமூகமும் இதை ஒப்பாது. ஏதோ பாலியப் பருவத்தின் பழக்கத்தினல் இக்காதல் ஏற்பட்டிருக்கலாம். அவரவர் வழியில் சென்ருல்தானே சரியாகிவிடும். இது சரியாகும் என்று தோன்றவில்லை''

''சர்மாஜீ; எல்லா விஷயங்களேயும் சிந்தித்துத் தர்க்கம்செய்து முடிவில்தான் திர்மானத்திற்கு வந்தோம். மலரும் இரு உள்ளங்களேக் கருகச்செய்வது சமூகச் சேவையாகாது. பணமும் பதவியும் எல்லாவற்றையும் ஏற்கும். நமது முயற்சியினல் ஏழை மக்களின் கட்டுப்பாடு தகர்த்தெறியப் படும். அதனல் நம்போன்றவர்கள் காதலே உதாசினமாக எண்ணக்கூடாது. தயங்காமல் ஒப்புக்கொள்ளுங்கள்'' என்ருள் சுசீல் குமாரி.

''சஹோதரி! தாங்கள் சொல்வது ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயமே. ஆனல் குந்தளம் இப்பாக்யத்திற்கு அருகதையற்றவள் என்பதைப் பின்னல் ஏமாற்றிவிட்டேன் என்று சொல்லிற்கு இடமில்லாமல் தெரிவிக்கிறேன்'' என்ருர் சர்மா.

''சர்மாஜி! விஷயம் எனக்குத் தெரிந்தே சொல்லுகிறேன். பொம்மைக் கல்யாணத்தை நாங்கள் வகை வைக்க மாட்டோம். தாங்கள் சொல்லும் காரணத்தைக் கொண்டே, அச்சமில்லாமல் குந்தளத்தை எங்களிடம் கொடுக்கலாம்'' என்ருள்.

''நீங்கள் ஏற்கலாம். எங்களவர் என்னே ஏற்கமாட்டார்கள். தாங்களும் மாற்ருந் தாய் என்ருலும், பூஜைக்குரிய தெய்வம் போல் பிரகாசிக்கிறீர்கள். எனது சம்சார வாழ்க்கை நேர்விரோதம். கிழுள்ள குழந்தைகளின் பிற்கால வாழ்க்கை நேர்வழியில் செல்லச் சமூகம் அனுமதிக்காது. பிறகு என் குடும்பம் அதோகதியாகிவிடுமோ என்ற பிரச்னேயைத் தவிர, குந்தளத்தின் இருண்ட வாழ்வில் ஜோதியின் வரவைத் தடுக்க என் மனம் இடமளிக்குமா?

''உண்மை; இதுவிஷயம் சிந்திக்கவேண்டியதே'' என்ருர் முகர்ஜி.

''சர்மாஜீ, நான் கூறும் யோசனேயை அங்கிகரிப்பதாலுல் யாவும் ஒழுங்காக, ஒருவருக்கும் திங்கணுகாவண்ணம் நடக்கும்''


# இந்தியன் பாங்கு லிமிடெட்

"இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்"

நார்த் பீச் ரோடு :: மதராஸ்

மதராஸ் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், மவுண்ட் ரோடு, எழும்பூர், தியாகராயநகர், புரசைவாக்கம்.

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

| | | | | |
|---|---|---|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ... | ... | ரூ. | 68,71,800 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | .... | ... | ரூ. | 41,09,478 |
| ரிஸர்வ் நிதி ... | ... | ... | ரூ. | 56,15,009 |
| டிபாஸிட்டுகள் ... | ... | | ரூ. | $12\frac{1}{2}$-கோடிக்குமேல் |

எல்லாவித பாங்க் அலுவல்களும் கவனிக்கப்படும்

N. கோபால அய்யர்,
செக்ரடரி.

"சொல்லுங்கள் கேட்கலாம்; தித்குத்தெரியாமல் திண்டாடும்பொழுது பெண்களின் மனதில் அபூர்வமுறை உதிப்பது இயற்கையாக அமையும் என்பதை நான் அனுபவத்தில் கண்டிருக்கிறேன்."

"எந்தச் சமூகத்திற்குத் தாங்கள் பயப்படுகிறீர்களோ, அந்தச் சமூகத்தினின்றும் குந்தளம் வேறுபட்டவள்தானே? அதனுடைய சுகஸௌக்யத்தில் அவள் பங்கெடுத்துக்கொள்ள முடியாது. ஆனால் அதனுடைய கொடூரம் முழுவதும் அவள் மீது ஆட்சிசெலுத்தும். அந்தச் சமூகத்தினால் அவளுக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. உங்கள் இனத்தவரால் ஏற்படுவதும் அதுவே. அதனால் அவளை எங்களிடம் ஒப்படைப்பதால் என்ன கஷ்டம்? உங்களவர்க்கும் அவளுக்கும் யாதொரு சம்பந்தமும் வேண்டாம். இறந்தவளாகக் கருதட்டும். மனமுருகும் அன்னையோ இல்லை, தாங்கள் ஆண் பிள்ளை. நினைத்த சமயம் நிபந்தனையின்றிப் பார்க்கலாம், பெற்றமனம் மக்களின் சந்தோஷத்தையே விரும்பும். நாலுபேர் வசைச்சொல்லிற்குத் தலைகுனியநேரிடுமோ என்று அஞ்சவேண்டாம். இவருடைய முயற்சியினால், உத்தியோகம் பிரமோஷனாக, உங்கள் ஜில்லாவிற்கே மாற்றல் செய்ய முடியும். இந்த ஏற்பாடு ஒரு மாதத்திற்குள் முடிந்துவிடும். முடியுமானால் தைரியமிருந்தால் கல்யாணத்தைக் கண்குளிரத் தாங்கள் கண்டுகளியுங்கள். இல்லையேல் இஷ்டப்பட்ட சமயம் வந்துபாருங்கள். குந்தளம் என் சாந்தினியைவிட மேலாகத் தோன்றுகிறாள் எனக்கு. அவளுக்கு யாதொருகுறையும் நேராது. காப்பது என்கடமை. சந்தரின் ஹிருதயமலர் அவள். பிற்காலத்தில் அவளது தேஜோமயமான வாழ்வைத் தாங்கள் நிச்சயம் காண்பீர்கள். அவளை உங்கள் குலத்திலிருந்து விலக்கிவிட்டால் உங்கள் வாழ்க்கையில் யாதொரு மாறுதலுமிருக்காது. மதராசிப் பழக்கவழக்கங்களை நான் நன்றாய் அறிந்தே சொல்லுகிறேன். சர்மாஜீ! இதில் ஏதாகிலும் ஆக்ஷேபனையுண்டா?" என்றாள் சுசீல் குமாரி.

"அச்சா பலே. சபாஷ்! சுசீல். உன் அன்பிற்கும், உயர்ந்த நோக்கத்திற்கும், சமயோசித புத்திக்கும் உன்னை எவ்விதம் புகழ்வது என்பதற்குப் பதமே கிடைக்கவில்லை. செய்வது புரியாமல், திகைத்த ஐம்பதும், நாற்பதுமான வயதைக்கடந்த எங்கள் மனதிற்கு ஓர் உறுதியை ஏற்படுத்திவிட்டாய்? சர்மாஜி! உங்கள் அபிப்பிராயமென்ன" என்றார் முகர்ஜீ.

"நான் அப்போதே பெண்கள் மனதில் சமயோசித யுக்தி உதயமாகும் என்று சொல்லவில்லையா? இனி நான் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? என் குந்தளத்தின், கருகிப்போன வாழ்க்கை மலரை எதிர்பாராதவிதமாக, கண்கவரும் வனப்புடனும், மனங்குளிரும் மணமுமுள்ளதாகப் புஷ்பிக்கச் செய்துவிட்டீர்கள். மலரும் மலரைக் கருகவைக்கச் செடியை வைத்தவன் விரும்புவானா? உங்கள் சித்தம் என் பாக்யம். ஆனால் இதுவரை கண்மணிபோல் காத்துவந்த என் குழந்தையை, அடியுடன் பிரிவது என்பது............" என்று சொல்லும் போதே துக்கம் நெஞ்சையடைக்க, கண்களில் நீர் நிறைந்து வாயை அடைத்துவிட்டது.

"சர்மாஜீ! இதென்ன பேதைமை! பெண்கள் எல்லாம் ஒரு நாள் துணைவனுடன் செல்வது இயற்கைதானே? பூந்தோட்டம் வைக்கிறான். பாடுபடுகிறான். செடியில் புஷ்பித்திருக்கும் காட்சி கண்ணைக் கவருகிறது. ஆனால் செடியில் வாடுவதைவிட, நிர்க்குணனான பிரபுவின்மீது அலங்காரம் செய்து வாடியோ, நாரிமணிகளின் கூந்தலில் பரிமளித்து வாழுவதோ தானே இயற்கையும் மனத்திருப்தியுமாகிறது. கவலைப்படாதீர்கள்" என்றாள் சுசீல் குமாரி.

"சந்தர்! இதுவரை நீ பதுமைபோலிருந்ததானது பெரியவர்களிடம் நீ வைத்திருக்கும் பக்தியைத் தெளிவுபடுத்துகின்றது. உன்னைப்பெற்ற அவர்களும் பாக்யசாலிகளே. அவர்களைப் பெற்றோராக அடையப்பெற்ற நீயும் பாக்கியசாலியே. உங்கள் யாவராலும் விரும்பப்பெற்று, இழந்த வாழ்வை மீட்டும் பெற்ற என் குந்தளமும் பாக்யசாலியே. அப்பா, நான் அதிகம் சொல்ல ஒன்றுமில்லை. அவள் உன் அடைக்கலமென்று விட்டுப் பல ஆயிரமைல்களுக்கப்பால் செல்லப்போகிறேன். யாரும் அவளை இழிவாகப் பேசாதவாறு செய்வது உனது பொறுப்பு" என்று சொல்லிவிட்டு அதிக சிந்தனைக்கு இடமின்றி, ஒருவாறாக அவர் மனதில் குந்தளம் சந்தர் மனதைத் தெரிந்துகொண்டதைவைத்து, அவர்களின் நிபந்தனைக்கும் ஒப்புக்கொண்டு சந்தோஷத்துடனேயே விடைபெற்றுச் சென்றார்.

"சித்தி, உனது தீர்க்கமான சமயோசித வார்த்தைகளை எவ்விதம் போற்றுவது? இவ்வளவு சுலபமாகச் சர்மா ஒத்துக்கொள்ளும்படி செய்துவிட்டாய். எல்லாம் உன் அன்பில் தோன்றும் சுகந்தமலரே" என்றான் சந்தர்.

"சரி, அவர்கள் வீட்டிற்கு எப்படிச் சொல்லியனுப்புவது" என்று சொல்லி முடிக்குமுன், முதல் நாள் வந்த மனிதர் வந்திருப்பதாக வேலைக்காரன் தெரிவித்தான்.

அவர் வந்ததும், "நமஸ்தே; முகர்ஜி! சற்று அவசரப்பட்டுத் தங்களிடம் நடந்து கொண்டபதுபற்றி மன்னிப்பு வேண்டினார் மதுசூதனகோஷ். பெண்ணும் பிள்ளையும் நடந்துவரும் பாணியை நோக்கி, தங்களிடம் கேட்டுவிட்டார். நேற்று இரவு அவர் பெண், அவர் மைத்துனன் பிள்ளை சுரேஷை மணப்பதாகக் கூறிவிட்டாளாம். ஒரே பெண்ணாதலால் அதை மறுக்கவும் முடியவில்லை. அதனால் மிக்க வருந்துகிறார். மன்னிப்பையும் வேண்டுகிறார்" என்றார்.

"ரொம்ப சந்தோஷம்! காதல் மணத்தையே நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம். மன்னிப்புக் கேட்கவேண்டிய அவசியமே இல்லை. கல்யாண தம்பதிகளை மனப்பூர்வமாக ஆசிர்வதிக்க நான் வருவதாகச் சொல்லுங்கள்" என்றார் முகர்ஜி.

வந்தவர் விடைபெற்றுச் சென்றார்.

"அப்பா! பரமாத்மா காப்பாற்றினார். பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று விஷயம்" என்றார் முகர்ஜி.

"பார்த்தீர்களா, கள்ளமற்ற, தூய்மையான ஹிருதயத்திற்குப் பரமாத்மா நிச்சயம் அருள்புரிவார்" என்றாள் சுசீல்குமாரி.

— 13 —

எதற்காக விடியுமுன் தன் தந்தையை முகர்ஜி வீட்டில் அழைத்திருப்பார்கள்? ஒரு சமயம், தானும் சந்தரும் சந்திப்பதை அறிந்து அதைப்பற்றித் தன் தகப்பனாரிடம் எச்சரிக்கை செய்வதற்காக இருக்குமோ? என்று நினைக்கும்பொழுது அவள் மனம் லஜ்ஜையாலும், பயத்தினாலும் துணுக்குற்றது. புஸ்தகத்தை எடுத்தாள், மனம் செல்லவில்லை. வீணையை எடுத்து வைத்துக்கொண்டு மீட்டினாள். கைபோனபடி ராகத்தை வாசித்தாள். அண்ணாந்தபடி கண்கள் சுவரில் உள்ள படங்களை ஆராய்ந்த வண்ணமிருந்தன. அந்தச்சமயம் (சகுந்தலையும் துஷ்யந்தனும் சந்திக்கும் இடத்தைக் கைதேர்ந்த சைத்ரிகனால் தீட்டப்பட்ட) சித்திரத்தின் மீது பார்வை விழுந்ததும். "பிரேமையில் யாவையும் மறந்தேனே" என்ற பாட்டைக் கைவிரல்கள் தந்தியில் எழுப்பின. மெல்லிய குரலில் வாயும் பாடியது.

"குந்தளம்! சரியான பாட்டு சரியான சமயத்தில் வந்தது" என்று சொல்லியவண்ணம் ஸோபாவில் அவள் அருகில் உட்கார்ந்தார் சர்மா.

வீணையைக் கீழே வைத்துவிட்டு, "என்ன விஷயம் அப்பா? மிகவும் குதூகலமாகக் காணப்படுகிறீர்களே"

"பரம தரித்திரனுக்கு நிதிக்குவியல் கிடைத்தால் அழுவானா? அநேக இரவுபகல் பாலைவனத்தில் வழிநடந்தவனுக்குச் சோலையும் நீரும் திடீரெனத் தென்பட்டால் விசனமுறுவானா? குந்தளம், உன் வாழ்வை, வேண்டுமென்று செய்ததைப் போல் பாழாக்கினேன். அதற்குப் பிராயச்சித்தம் தேடிவிட்டேன். என் செல்வியின் வாழ்வு செவ்வையாக்கப்பட்டுவிட்டது. எனக்கு வேறு ஆனந்தம் என்னவேண்டும். ஈ தினமு சுதினம் குந்தளம்" என்று அன்புடன் அவள் தலையைத் தடவிக் கொடுத்தவண்ணம் உணர்ச்சி ததும்பக் கூறினார்.

"என்னப்பா! எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே சொல்லுங்களப்பா! உங்கள் சந்தோஷம் எனக்கும் ஆனந்தத்தைத் தந்தாலும் காரணம் அறிய மனம் துடிக்கின்றது. அப்பா சொல்லமாட்டீர்களா?" என்று கெஞ்சினாள்.

முகர்ஜி வீட்டில் நடந்த விஷயத்தைச் சொல்லிவிட்டு, "குந்தளம்! அவர்கள் என் குலதெய்வம்" என்றார்.

என்றோ ஒரு காலத்தில், எதிர்பாராத வகையில் ஒரு சமயம் நடக்கலாமோ என்று சிந்தித்த விஷயம் இவ்வளவு சீக்கிரமாக, தந்தையின் ஆசியில் நடைபெறும் என்பதைக் கேட்க, அந்த இடமே சுற்றுவது போன்ற உணர்வே தோன்றினது. "அப்பா! இது என்ன? எனக்காகத் தாங்கள் சமூகத்தையும், குலத்தவரையும் எதிர்ப்பது சாமான்ய விஷயமா? முகர்ஜி வீட்டாருக்கும் வீண் வசைச்சொல்; வேண்டாம் அப்பா! முடியாது என்று சொல்லிவிடுங்கள். நான் படிக்கிறேன், தேசநலத்தில் சுதந்தர வாழ்க்கை நடத்துவேன். அப்பா! சிந்தியுங்கள், இதில் எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படும். வேண்டாம் அப்பா! வேண்டாம்"

"குந்தளம்! ஏன் வீணாகக் கலங்குகிறாய்? ஒருவித கஷ்டமும் ஏற்படாது. பரமாத்மாவின் பூர்ண சம்மதத்துடனேயே யாவும் நடைபெறுகின்றன. நான் கொடுத்த வாக்கை மாற்றமுடியாது. அவர்கள் சாமான்ய மனிதர்களா? குந்தளம்! இவை

நம்முடனிருக்கட்டும். சித்திக்குத் தெரிய வேண்டாம். மாற்றலாகிவிட்டது. குந்தளம் படிப்பிற்காக இவ்விடமிருப்பாள். விமலா, முகர்ஜி வீட்டுக்காரர் மேல்பார்வையில் அவள் பாதுகாப்பு இருக்கும். இனிமேல் அவளின் நிலைமைக்காகப் பிரியவேண்டியது தானே என்று சொல்லிவிடுகிறேன். அதற்குமேல் உன் சித்தி உன்னைப்பற்றி அக்கரை கொள்ளமாட்டாள் என்பது நிச்சயம். இந்தப் பங்களாவையும், பாங்கியிலிருக்கும் பதினாயிரம் ரூபாயையும் உனக்கு ஸ்திரீ தனமாகக் கொடுக்கிறேன். நீ கல்யாணம் முடியுமட்டும் இவ்விடமிருக்கலாம். பிறகு அவர்கள் இஷ்டம்போல் செய்யட்டும்'' என்று சொல்லும்பொழுதே விசாலம் அவ்விடம் வரவே பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைக்கும்படியாகிவிட்டது.

சர்மாவின் மனம் ஆனந்தத்தில் திளைத்தது. குந்தளத்தின் மனம் இன்னதென விவரிக்க முடியாத சஞ்சலத்தை அடைந்தது. சாயங்காலம்வரை இதைப்பற்றி மனதைச் சமாதானம் செய்துகொள்ளப் பார்த்தாள். ஒன்றும் முடியவில்லை. 'இக் கல்யாணத்தினால் உலகம் தன்னை நோக்கி நகைக்கும்' என்ற எண்ணமே முன் நின்றது. இதைப்பற்றிய சிந்தனையில் ஏழுமணி வரை தன் அறையில் மேஜையின் முன் நாற்காலியில் உட்கார்ந்து இருமுழுங்கைகளையும் மேஜையின்மீது ஊன்றி, கையால் கன்னங்களைத் தாங்கிய வண்ணம் சிந்தனையிலாழ்ந்தாள். முதல் முதலாக லைபரரியில் சந்தரைச் சந்தித்ததில் அந்தக்காலத்தில் தன் மனம் நிம்மதியாகவே இருந்தது; பிறகு அம்பாச்சாரியில் சந்தரைச் சந்தித்துப் பழகியது முதல் அன்றுவரை சம்பவங்கள் 'படக் காட்சிபோல்' ஒன்றின்பின் ஒன்றாய்த் தோன்ற, பத்து தினங்களுக்குமுன் சந்தரிடம் தனது நிலைமையைச் சொல்லித் தன்னை மறந்துவிடும்படி கேட்டபொழுது, முன்னதாகவே விஷயமறிந்தவன்போல், தன்னைப் பரிஹாசம்செய்து அவன் இஷ்டப்படி நடக்கும்படி செய்ததையும் நினைக்கத் தனக்குத்தானே லஜ்ஜைதோன்றிற்று. எது செய்தால் இதனின்றும் தப்பலாம்'' என்று சிந்திக்கும்பொழுது திடீரென ஒரு முடிவு தென்படவே, சட்டென, மூன்றுகடிதங்கள் எழுதினாள்.

"அன்புள்ள அப்பாவுக்கு, அநேக கோடி நமஸ்காரம். உங்களின் ஏற்பாட்டை என்ன முயன்றும் என் மனம் ஏற்கவில்லை. என்னைத் தேடவேண்டாம். தாங்கள் இதைப்பார்க்குமுன் அம்பாச்சாரியில் அடைக்கலம் புகுந்துவிடுவேன். இரு குடும்பத்திற்கும் என்னால் இழிவான சொல் ஏற்படும்வரை என் மனம் விரும்பவில்லை. உங்கள் அன்பு உலகம் போற்றத்தக்கதே.

இப்படிக்கு அன்புள்ள
அபாக்கியவதி
குந்தளம்.

"என் பிரிய விமலா! முகர்ஜீயும், அப்பாவுமாக, எனக்கும் சந்தருக்கும் விவாகத்தை நிச்சயித்தார்கள். இருவர் தியாகமும் என்னை வாட்டுகின்றது. இருகுலத்தின் உண்மையை உத்தேசித்து என் முடிவைத் தேடுகிறேன். என் பிரிவால் சந்தர் துயரம் அளவிற்கும் மீறிவிடும். அதை உனது காதலின் முயற்சியால் தணிக்கவேண்டும். இது எனது கடைசிவார்த்தை. இதை நீ நிறைவேற்றியாகவேண்டும். என் ஞாபகார்த்தமாக, மோதிரமும் படமும் உன்னிடமிருக்கின்றன. விடைபெற்றுக்கொள்ளுகிறேன்''

இப்படிக்கு உன் அன்புள்ள
குந்தளம்.

''அன்பார்ந்த சந்தருக்கு, அநேககோடி வந்தனம். தங்களின் பெற்றோரின் தியாகத்தையும், எனது தந்தையின் செய்கையையும் உலகம் ஒரு சமயம் போற்றலாம். ஆனால் என்மனம் நிம்மதியடையவில்லை. நமது காதல் தெய்வீகமானது. என்றால் உங்களின் நன்மையை நாடுவதே என்கடமை. நீங்கள் செய்த ஏற்பாட்டை என்மனம் ஏற்கவில்லை. சுயநலத்திற்காக இருகுலத்திற்கும், கடுகளவும் வசைச்சொல் ஏற்பட என்மனம் இடமளிக்கவில்லை. விதியானது என் விஷயத்தில் விசித்ரமாக விளையாடிவிட்டது. ஆனாலும் விதியை மதியினால் வெல்லுவது என்ற முடிவிற்கு வந்துவிட்டேன். எந்த அம்பாச்சாரி நமது காதலை ஊர்ஜிதப் படுத்திற்றோ அந்த அம்பாச்சாரியையே அடைக்கலம் புகுவேன். என் பிரிவு தங்களை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதை நினைக்க என் நெஞ்சம் கலங்குகின்றது. ஆனாலும் கடமை என்பதைத்தான் மனதில் பதிய வைக்கவேண்டும். என்மீதுற்ற மாசற்ற காதலின் சின்னமாக விமலாவை ஏற்று வாழ்க்கை நடத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். நான் வாராவிடில் நிச்சயம் உங்கள் மனம் விமலாவை நாடியிருக்கும். ஸதா உங்கள் ஹ்ருதயபீடத்தில் நான் வீற்றிருப்பது நிச்சயமாதலால், என் ஞாபகார்த்தப்பொருள் அனாவசியம். எனது மரண வாக்கை நிறைவேற்றுவீர்களென்று உறுதியாக நம்புகிறேன். மறுஜன்மத்தில் கன்னிப் பெண்ணாக வளர்ந்து உங்களையே

கணவனாகப் பெறப் பரமாத்மா அருள்புரி வாராக. விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.

தங்கள் அடிமை
அபாக்கியவதி
குந்தளம்.

என்று எழுதி முடித்து, கவரில் போட்டு விலாஸமெழுதினாள். தகப்பனார் வருவதற்குப் பத்துமணி ஆகுமென்பது நிச்சயம். விமலா சாயங்காலம் சினிமாவிற்கு வரும்படி ஆள் அனுப்பினாள். தலைவலி என்று சொல்லியனுப்பிவிட்டாள். அதனால் அவள் வீட்டில் ஒருவருமிருக்கமாட்டார்கள். பத்து மணிக்கே திரும்புவார்கள். அதுவும் தனது நல்லகாலம் என்று சந்தோஷப்பட்டுக் கொண்டாள். கவரை எடுத்துக்கொண்டு ஸைக்கிளில் கிளம்பினாள். நேரே விமலாவின் வீட்டிற்குச் சென்றாள். வேலைக்காரி மட்டுமிருந்தாள். விமலாவின் மேஜைமீது கவரை வைத்துவிட்டு, முகர்ஜீ வீட்டுத் தோட்டப் பக்கம் வந்து, "வீட்டில் யார் இருக்கிறார்கள்" என்று கேட்டாள். எல்லோரும் கல்யாணத்திற்குச் சென்றிருப்பதாயும், இரவு பத்து மணிக்குத் திரும்புவார்களென்றும் வேலையாள் சொன்னான். கவரைக் கொடுத்துச் சந்தரின் மேஜைமீது வைக்கும்படி சொன்னாள். சந்தரின் காலேஜ் தோழி என்ற நினைப்பில் இவன் சொல்லியபடி செய்துவிட்டு, திரும்பி வந்து சொன்னபிறகு தன் வீட்டிற்கு வந்தாள். மணி ஒன்பது. குழந்தைகளுடன் உட்கார்ந்து சாப்பிட்டாள். தன்மேஜையின்மீது கவரை வைத்துவிட்டு, தனது தாய் தகப்பன் படத்தின் முன் வணங்கிவிட்டு, ஸைக்கிள் எடுத்துக்கொண்டு அம்பாச்சாரிக்கு வந்தாள். வழக்கப்படி பியூன் ஸைக்கிளை வாங்கிவைத்தான். இவர்கள் இரவு நேரத்தில் உலாவ வருவதும், அவன் பணம் பெறுவதும் சர்வ சாதாரணமாக நடந்துவந்தபடியினால்,

"எஜமான் வல்லீங்க" என்றான்.

"அவர் நடந்து வருவதாகச் சொன்னார். ஸைக்கிளைக்கொண்டுபோ. இவ்விடம் ஒருவரையும் விடாதே பத்திரம்" என்றாள்.

"உத்தரவு" என்று சொல்லிவிட்டுச் சென்றான். பௌர்ணமி நிலா அம்பாச்சாரி முழுவதும் வெள்ளிமயமாக ஜ்வலிக்கச்செய்தது. நிசப்தமான வேளையில் பிசாசினிபோல், பாலத்தின்மீது ஜலத்தை நோக்கியவண்ணம் நின்றாள் குந்தளம். கோட்டை மணி பத்தரை அடித்தது. சரி இனிமேல் தாமதிக்கக்கூடாது என்றாள் தனக்குள். கம்பியின் மீது ஏறி நின்று இருகைகளையும் கூப்பி,


பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

## டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை:—
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி.

திருச்சி கிளை:—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு.

''ஜகன்மாதா! கடமையினிமித்தம் ஆத்ம ஹத்தி செய்கிறேன். மன்னிப்பாய். என்னைப் பெற்றவளே! உனக்கு நமஸ்காரம். இந்தக்கதி உன்னால் வந்ததே. அதன் பொறுப்பும் உனக்கே. சந்தர்! என்னை மன்னிப்பீர். உங்கள் பாதத்தை நினைத்தே உயிர் விடுகிறேன். எத்தனை ஜன்மம் எடுத்தாலும் தாங்களே பதியாக வரவேண்டும். பரமாத்மா! கடைசியில் இந்த வரமே கேட்கிறேன்'' என்று சொல்லிவிட்டு, ''அம்பாச்சரி, நீயே காதலுக்குக் காரணமானாய். நீயே தியாகத்திற்கும் காரணமாகு'' என்று சொல்லிக்கொண்டே குதிப்பதற்கு ஆயத்தமானாள். அந்தச்சமயத்திலும் பூர்ண சந்த்ரனின் சோபையில் மெய்மறந்தாள். சந்தரின் முகபிம்பத்தை வானில் சந்த்ரனில் கண்டாள். திகைப்புற்று நிற்கும் சமயம்;

''அந்தி வண்ணனே சம்போ! ஆறுமுக் கண்ணனே ஸ்வயம்போ'' என்ற பாட்டு, கணீரென ஒலித்தது. திடுக்கிட்டுத்திரும்பி நாலுபுறமும் சுற்றிப்பார்த்தாள். தமிழ் மொழியே காதில் கேட்காத இடத்தில், சுத்தமான தமிழில் பாட்டைக் கேட்டதும், அந்த நிலைமையிலும் குந்தளத்தின் மனதில் ஒருவித சந்தோஷ உணர்ச்சியும் ஆச்சர்ய மனப்பான்மையும் தோன்றின. தேவாமிருதம்போலிருந்தது அப்பாட்டு. ஜன்ம பூமியின் நினைவும் தாய்ப்பாஷையின் சப்தமும் அவளுக்குப் பாலைவனத்தில் சுனை நீரைக் காண்பதுபோலிருந்தது. யாராவது வந்தால் தனது லக்ஷ்யம் சிதைந்துபோகும், அதனால் குதிப்பதே! உத்தமம் என்று நினைக்கும்பொழுது, பாடலின் அடி காதில் ஒலிக்கவே, யார் என்பதைப் பார்த்துவிட்டே குதிக்கவேண்டும் என்ற முடிவிற்கு வந்தாள். தாய்ப்பாஷையின் பற்று அவளை அடியுடன் சிந்தனையை மாற்றும்படி செய்துவிட்டது. நாலாபுறமும் சுற்றிப்பார்க்கும் பொழுது, பாலத்தின் கோடியில் ஓர் உருவம் தெரிந்தது. அது தன்னை நோக்கிவருவதாகவும் தோன்றியது. உடனே குதித்துவிடவேண்டும் என்று நினைத்தாள். ஆனால் அப்பாட்டு, அப்படிச்செய்யமுடியாதபடி தடுத்தது. கம்பியைவிட்டுக் கீழே இறங்கி நின்றாள். சரி எதுவந்தாலுமென்ன? வருபவர் காவி உடையிலிருக்கிறார். விசாரித்துவிட்டு, அவரையும் ஏமாற்றித் தண்ணீரில் குதிப்பது என்ன பிரமாதம்? தான் குதிக்குமிடம் ஆழங்காணமுடியாத அகழ் என்ற தைரியம் தோன்றவே அசைவற்று நின்றாள். அருகில் வருவதும் பாட்டு முடிவதும் ஒன்றாக இருந்தது. ''குழந்தாய் யாரம்மா நீ? தமிழ்நாட்டவள்போல் தோன்றுகிறாய்? இந்தப் பாபகரமான செய்கையைச் செய்யும்படியான கஷ்டம் இப்பால்யத்தில் ஏற்படக் காரணம் என்ன?'' என்றார் சுத்தமான தமிழில் அன்பாக.

ஜடாமகுடதாரியான, சன்யாசியின் பேச்சாலும் முகத்திலுள்ள தேஜசாலும் அந்நிலவொளியில் சந்திரசேகரனே உருவெடுத்து வந்ததுபோன்ற உணர்ச்சிதோன்றி, தன்னுடைய கஷ்டத்தை அவரிடம் சொல்லுவது தான் உத்தமம், மறைப்பது தவறு, என்று தோன்றவே, அவர் பாதங்களில் நமஸ்கரித்துவிட்டு, தனது சரித்திரமுழுவதும் சொல்லிமுடித்துவிட்டு. ''சுவாமி, ஒரு குடும்பத்திற்காக ஒருவரை இழப்பதுமேல் என்று தர்மசாஸ்திரமே கூறவில்லையா? நான் செய்யப்புகுந்ததில் தவறென்ன?'' என்றாள்.

''அம்மா குழந்தாய்! எந்தவித துன்பத்திலும் ஆத்மஹத்தி மிகவும் பாபம். துன்பத்தினின்று விடுபட நினைத்துச் செய்யும் இக்காரியம் மீளாத துன்பத்தையே தேடுவதாகும். விதி! அதை மீற அதை உண்டாக்கியவனுக்கே அதிகாரமில்லை'' என்றார்.

''சுவாமி! விதி. அது செய்த சதிதான் இத்தொல்லை. அதை வெல்லவே துணிந்தேன். இவ்விடம் படும் துன்பத்திலிருந்தும் விடுபட்டால். அவ்விடம் ஏற்படும் துன்பத்தைப்பற்றி அக்கரையில்லை. மனித சமுகத்தின் கொடுமையைவிட, தெய்வ சமூகத்தின் கொடுமை பெரிதல்ல'' என்றாள்.

'உம்' என்ற நீண்ட மூச்சுவிட்டு, ''குந்தளம், உன் தகப்பனாரின் பெயர் என்னவோ?'' என்றார்.

''கிருஷ்ணசுவாமி சர்மா''

''ஆஹா! நினைத்தேன். அம்மா சற்றுமுன் சொன்னவிதியின் விசித்திரப் போக்கைப் பார்த்தாயா? நான் இவ்விடம் வந்து ஒரு மாதமாகிறது. காவற்காரர்களின் உதவியினால் இரவில் இவ்விடம் சஞ்சரிப்பேன். சிலசமயம் நீயும் சந்தரும் இவ்விடம் உலாவுவதைக் கவனித்துமிருக்கிறேன். அதனால் முதலில் உன்னைப் பார்த்தபொழுது நான் ஒன்றும் எண்ணவில்லை. கம்பியின்மேல் நின்ற தோற்றம் விபரீதமாகத் தோன்றவே 'தமிழனுக்கு, தாய்மொழி இன்பந்தரும்' என்ற நினைப்பில்தான் பாடினேன், எண்ணம் கைகூடிற்று. குழந்தாய்! உன்னுடைய இந்தக் கதிக்கு மூல காரணகர்த்தா நானே'' என்றார்.

''என்ன? சுவாமி! தாங்கள் சொல்வது விளங்கவில்லையே''

''சற்றுப்பொறு, அவசரப்படாதே, முழுவதும் கேள்! ரங்கூனில் உன் வாழ்வைப்

பாம்பண்ணின அந்தப் பையனின் தந்தையே நான். ஊர் ஊராகச் சுற்றி இந்தச் சமயம் இவ்விடம் வந்து சேர்ந்தது விதியின் செயலே. எனது பாபகரமான செய்கைக்குப் பிராயச்சித்தமாக உன்னைச் சரத்சந்தரிடம் ஒப்புவித்து உங்களை நீடுழி தம்பதிகளாக வாழ ஆசீர்வதித்துவிட்டுச் செல்லப் போகிறேன். வா, போகலாம்'' என்றார்.

'என்ன?' என்று ஆச்சர்யத்துடன் பார்த்தாள். இதென்ன கொடுமை, விசித்திரமான விஷயங்களாகவே வருகின்றன''எனச் சிந்தித்தாள். பிறகு, "ஸ்வாமி! அதெல்லாம் வேண்டாம்; உங்கள்மீது என்ன குற்றம்? எனது பாபம், விதி அப்படி அமைந்தது. விலக்கின வாழ்வைக் கூட்டுவானேன்? தங்களுடைய சிஷ்யையாக ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களுடன் நானும் சுற்றுகிறேன். சம்சாரத்தொல்லையும், சமூகத்தின் கட்டுப்பாடும், என்னை அணுகா'' என்றாள்.

கல கலவென நகைத்துவிட்டு, "பேஷ் குந்தளம்! நல்ல யோசனை, சந்நியாசியைச் சம்சாரியாக்குகிறாயா? கவலையற்றுத் திரியும் என்னைக் கவலையை விலைக்கு வாங்கச் சொல்லுகிறாயா? யௌவன மங்கையாகிய உன்னைக் காமக் கண்களில் விழாமல் காப்பது எவ்வளவு சிரமம்? உன் மனம் சந்நியாசமானாலும், அழகும், யௌவனமும் சந்நியாசமாகாவே'' என்றார்.

"சுவாமி, உங்களுக்குப் பாரமாக இல்லாமல் நடப்பேன். என் உருவைக் குலைத்துவிடுகிறேன்'' என்று காலில் விழுந்தாள்.

"எழுந்திரு, உன்னை ஏற்பதற்கு உடையவன் வந்துவிட்டான்'' என்றார்.

'என்ன?' என்று திடுக்கிட்டு எழுந்து நின்றாள்.

பாலத்தில் சந்தர் முன்னதாகவும், விமலா பின்னும், அதற்குப்பின் சர்மாவும் வருவதைக் கண்டாள். அவ்வளவே அந்த இடமெல்லாம் தலைகீழாகத் தோன்றுவதுபோலிருந்தது. உணர்வற்றுச் சாய்ந்தாள். ஒரே தாவலில் வந்து, கீழே விழாமல் தன் கையில் தாங்கி அணைத்துக்கொண்டான் சந்தர். விமலா ஜலத்தினால் முகத்தைத் துடைக்கவே கண்ணை விழித்தாள்.

"குந்தளம்! என்ன காரியம் செய்யத் துணிந்தாய். நீ செய்த சபதப்படி இருவருமன்றோ வரவேண்டும். தனியே சென்றால் நான் பின்பற்றமாட்டேனா? வாழ்வின் இருளில் வழிநடக்க முடியுமா? குந்தளம்! என்னைப் பிரிய எவ்விதம் துணிந்தாய்'' என்றான். தன் தோளில் சாய்ந்திருந்த குந்தளத்தின் முகத்தருகில் குனிந்து,

எதிர்பாராத அதிர்ச்சியினால் ஒன்றும் பேசத் தோன்றவில்லை. ஆனால் இவர்களுக்கு மத்தியில் சந்தரின் அணைப்பிலிருப்பது தேள் கொட்டுவது போன்ற உணர்ச்சி தோன்றவே, சட்டென விலகி நின்றாள்.

"குந்தளம்! ஏனம்மா இப்படிச் செய்தாய். தந்தைக்குச் செய்யவேண்டிய கடமை அவரை மீளாத் துக்கத்திற்கும், நரகத்திற்கும் ஆளாக்குவதுதானா?''

'சுவாமி! தாங்கள் யாரோ, சமயத்தில் என் குழந்தையைத் தாங்கள்தான் காப்பாற்றியிருக்கவேண்டும். தங்களுக்கு என்ன கைம்மாறு செய்வேன். விஷயங்களைக் குந்தளம் சொல்லியிருக்கலாம். விமலா அவள் உயிர்த்தோழி. அவளே இன்று இவளைக் காணும்படி செய்தாள். சினிமாவிலிருந்து வந்ததும், வேலைக்காரி குந்தளம் வந்து கவர் வைத்ததைச் சொன்னாளாம். அவள் மனம் துணுக்குற்றதாம், ஓடிச்சென்று கடிதத்தைப் பார்த்தாளாம். உடனேயே சந்தர் வீட்டிற்குச் சென்றிருக்கிறாள், அவனும் அப்பொழுதுதான் கடிதத்தைப் படித்துக்கொண்டிருந்திருக்கிறான். இருவரும் என் வீட்டிற்கு ஓடி வந்தார்கள். நான் குந்தளம் தூங்கிவிட்டதாகநினைத்து "எழுப்புகிறேன்'' என்றேன். 'ஐயோ மோசம்' என்று கத்தியவாறு, அவள் அறைக்குட் சென்றார்கள். நானும் பின்தொடர்ந்தேன். மூவரும் ஓடி வந்தோம். பரமாத்மா என் வயிற்றில் பாலை வார்த்தார். சுவாமி தாங்கள் யார்? எப்படி இவ்விடம் வந்தீர்கள்? என் செல்வத்தைக் கண்ட சந்தோஷத்தில் மெய் மறந்து தங்களை விசாரியாமலிருந்துவிட்டேன், மன்னிக்கவும். குந்தளத்தைக் காணமாட்டோம் என்ற பீதியுடன்தான் வந்தோம். விமலா 'பெண்மையின் அமைதியினால் சாகத்துணிவது அவ்வளவு சுலபமல்ல ஒரு ஆசை பார்க்கலாம்' என்று தைரியம் சொன்னாள். குந்தளம்! விமலா என்றும் உன் நன்மைக்கே காரணமாக இருக்கிறாள்'' என்றார் சர்மா.

"இவ்விடம் காணவில்லையானால் நானும் அம்பாச்சாரியில் அடைக்கலம் புகுந்திருப்பேன்'' என்றான் சந்தர்.

"சந்தர்! உன் காதல் தெய்வீகமானது. அதனாலேயே, அவளை இழக்காமல் பெற்றாய்'' என்றார் துறவி.

"அப்பா! இவர்........" என்று முடிக்கு முன்

"சர்மா! நான் சிவன். ஆராயாமல் அவசரப்பட்டுச் செய்து தேடிக்கொண்ட தீராத் துயரத்திற்கும், வளரும் செடியை முறித்த பாவத்திற்கும் பிராயச்சித்தம் செய்துவிட்டேன். தாங்கள் செய்த தீர்மானம் போற்றத்தகுந்தது. நான் பற்று விட்டேன் என்று எங்கெங்குச் சுற்றினாலும், அறியாச்சிறுமியின் கதி என்னவாயிற்றோ? என்ற ஏக்கம் மட்டும் ஒருபுறம் இருந்துகொண்டே இருந்தது. அந்தப் பற்றையும் ஒழித்து நிர்மலமான மனதுடன் ஐயனை அடைய, அப்பரமன் இச்சம்பவத்தை ஏற்படுத்தினார். தூய ஹிருதயத்துடன் செய்யும் எந்த விஷயத்திற்கும், பகவான் நிச்சயம் உதவியளிப்பார். நான் கொடுத்துச் சென்றவைகளை என்ன செய்தீர்கள்?" என்றார் பற்றற்ற நிலைமையிலும்.

"பின்னால் யாராகிலும் ஏதாவது வம்புக்கு வருவார்களோ, என்ற அச்சத்தினால் தர்மஸ்தாபனத்திற்கென்று ஒதுக்கி வைத்திருக்கிறேன். இன்ன விஷயத்திற்கென்று இன்னும் நிர்ணயம் செய்யவில்லை. என்னுடையவைகளிலிருந்து சீதனமாகக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறேன்" என்றார் சர்மா.

"அவை என்னுடைய சுயார்ஜிதம். அதனால் குந்தளத்திற்குச் சீதனமாகவே இருக்கட்டும்"

"தங்கள் சித்தம், என் பாக்யம்"

"சரி, மிகவும் அகாலமாகிவிட்டது சென்று வாருங்கள்" என்றார் துறவி.

"தாங்கள் கொஞ்சகாலம் என் வீட்டில் தங்கிச் செல்ல வேண்டுகிறேன்" என்றார் சர்மா.

"தாங்கள் இருந்து எங்கள் மணத்தை நடத்தி, ஆசிர்வதிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றான் சந்தர்.

"என் ஆசி, என்றும் உள்ளது. இதோ அம்பாச்சாரி, ஆகாசவாணி, பூமிதேவி இவர்கள் முன்னதாக, உங்களை ஒன்றுசேர்த்துவிடுகிறேன்" என்று சொல்லி, குந்தளத்தின் கையைச் சந்தரின் கையில் வைத்துப் பிடித்துக்கொண்டு, "சந்தர்! எப்படிப்பட்ட எதிர்ப்பு நேர்ந்தாலும், எந்த நிலைமையிலும் இவளைக் கைவிடாதே. வயதில் இளைஞன் என்றாலும், அறிவிலும் உறுதியிலும் எங்களைவிடப் பெரியவன் நீ. உன் முயற்சியின் பலனே, எங்கள் பாப கிருத்தியத்திற்குப் பிராயச்சித்தமாக அமைந்தது. எனக்கும் நிம்மதியைக் கொடுத்தாய். உன் அன்பு புவனத்தையும்விடப் பெரிது, ஒரு க்ஷணம் தவறியிருந்தாலும் நம் எல்லோருடைய வாழ்க்கைப் பாதையும் சின்னாபின்னமாக வழி தவறும்படியாகி இருக்கும். நீங்கள் மனமொத்த தம்பதிகளாக அநேககாலம் வாழப் பகவான் அருள்செய்வார். குந்தளம்! விதி நன்மையான விஷயத்திற்கு உதவியே செய்யும் என்பதை மனதில் வைத்தாயானால் ஆறுதல் கொள்வாய். விமலா! உன் நட்பின் தூய்மையை உலகம் போற்றும், சகல மங்களமும் உண்டாகட்டும்" என்று மூவர் தலையிலும் கைவைத்து ஆசீர்வதித்துவிட்டு, 'சந்திரசேகரா ஈசா' என்று பாடிக்கொண்டே சென்றுவிட்டார் துறவி.

நால்வரும் கண்களில் நீர்ததும்ப அவர் சென்ற திக்கையே பார்த்தவண்ணம் நின்றார்கள்.

அடுத்த இதழில் முடியும்

மனித சமூகத்திற்கென நூதன ஆராய்ச்சி

## மேதாவின்

# ஈரல் கட்டி நிவாரணி

நீண்ட ஆராய்ச்சியின் பயனாக இப்புதிய சிகிச்சை முறையைக் கண்டுபிடித்துள்ளோம். ஈரல் கட்டியைப் போக்கடிக்க கைகண்ட மருந்து.

குழந்தைகள் வியாதியைக் குறித்து கவலைப்படாதீர்கள்.

மேதாவின் ஔஷதம் வைத்திய உலகில் ஓர் புரட்சி உண்டுபண்ணிவிட்டது.

**கே. எஸ். மேதா & கோ.,**
மதராஸ்

வாழ்க்கையில் ஆரோக்கியத்தை விரும்
பும் பெற்ருேர்கள் ஆகாரத்தில் சிறந்த
தென நம்புவது பெரீஸ் பிஸ்கட்ஸ்

குழந்தைகள் விரும்பும் அமிர்தம்
போன்ற உணவு மேலான சத்துக்கள்
அடங்கிய தங்களின் சிற்றுண்டி என்
பதை ஒவ்வொரு தாய், தந்தையரும்
அறிந்திருப்பதால் அவர்கள் எப்
பொழுதும் வாங்குவது

# பெரீஸ்

## பிஸ்கட்ஸ்

PERRY & CO., USILAMPATTI. (Estd. 1917)

# சுதந்தராத்மா தோரோ
# (THOREAU)

யோகி சுத்தாநந்தபாரதி

பகவத்கீதை உலகிற்கே வழிகாட்டும் பொதுமறை. கீதையைப் படித்தாலே போதும்; வேறு சாத்திரங்களைப் படிக்கத் தேவையில்லை; பகவான் அருளிய கீதை பரிபூர்ண யோகதீபிகை; மனிதன் உலக வாழ்விலும், ஆத்யாத்ம வாழ்விலும் வெற்றிபெறக் கீதை வழிகாட்டும்.

சங்கரரின் அத்வைத பாஷ்யமும், இராமாநுஜரின் ஸ்ரீ பாஷ்யமும் சில வேதாந்திகள் நாவிலே தாம் தவழ்ந்துகொண்டிருந்தன. "பகவத் கீதையைக் கொஞ்சம் படித்தாலும் போதும்; பரமானந்தம் பெறலாம்" என்று சங்கரர் சொன்னார். அதைத் தொடக்கூட நேரமில்லாமல் நமது நாட்டினர் அன்னியப் படைகளை எதிர்த்து, உயிருக்கும் மானத்திற்கும் மன்றாடிக்கொண்டிருந்தனர்.

அது வாரன் ஹேஸ்டிங்ஸ் காலம்; அக்காலம் வங்காளத்தில் கொடிய பஞ்சம் ஏற்பட்டு, உயிர்களைச் சூறையாடியது. அச்சமயம் அங்கே ஒரு பைராகிக் கூட்டம் எழுந்து நாடுகளில் அரண் அமைத்து யுத்தப்பயிற்சி செய்து, கும்பினி வெள்ளையருடனும் நவாபுகளுடனும் போர்புரிந்து வெற்றிக் கொடி நாட்டியது. இந்தச் சம்பவத்தையே பங்கிம்சந்திரர் ஆனந்தமடம் நாவலாகச் செய்து, தேசத்திற்குப் பெரிய விழிப்பீந்தார். இந்த வந்தேமாதரம் பைராகிகளுக்குக் கீதையே வேதம். கீதையைப் பாராயணம் செய்துதான் இவர்கள் போர்க்களத்திற்குக் கிளம்புவது வழக்கம். இக்கீதையொலி அடிக்கடி வாரன் ஹேஸ்டிங்ஸ் செவிக்கெட்டியது. வீரரை ஆவேசப்படுத்தும் இந்த நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவேண்டுமென்று முனைந்தான் ஹேஸ்டிங்ஸ். உடனே சில நண்பர்களைக் காசிக்கனுப்பி ஸம்ஸ்கிருதம் கற்றுக் கொள்ளச் செய்தான். அவருள் வில்கின்ஸ் (Charles Wilkins) விரைவில் ஸம்ஸ்கிருதம் கற்றார். அவர் ஆங்கிலப் புலவருமாவார். அவரைக்கொண்டு வாரன் ஹேஸ்டிங்ஸ் பகவத் கீதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தான். இம்மொழிபெயர்ப்பு ஆங்கில உலகைக் கவர்ந்தது; பர்னோஃப் (Burnoff) என்னும் அறிஞர் அதையே பிரெஞ்சில் மொழிபெயர்த்தார். இந்த மொழிபெயர்ப்புக்களைப் படித்து வியந்தவருள் கார்லைல் ஒருவர். அவரை ஒரு தரம் எமர்சன் பார்த்தார்; அப்போது உலக நூல்களைப் பற்றிப் பேச்செழுந்தது. "எனக்கு வழிகாட்டிய நூல் கீதை" என்று குறித்தார் கார்லைல். எமர்ஸன் வில்கின்ஸ் மொழிபெயர்த்த கீதையை ஆவலாக வாங்கிப் பார்த்தார். அதன் முன்னுரையில் "ஆங்கில ஆதிக்கம் முடிந்தாலும் இந்திய ஞானியர்களின் வாக்கு அழியாது; அவ்வாக்குகளின் சிகரம் கீதை" என்று வாரன் ஹேஸ்டிங்ஸ் எழுதியதைப் படித்தார். எமர்ஸன் அன்றுமுதல் கீதையைப் பாராயணம் செய்துவந்தார். அவர் பேச்சிலும் எழுத்திலும் கீதையின் கருத்துக்கள் மலிந்தன.

எமர்ஸனுக்கு நெருங்கிய நண்பர் இருவர்—தோரோ—விட்மன். இருவருக்கும் அவர் கீதையைத் தந்தார். இருவருள் தோரோ கீதையின் உபதேசப்படியே வாழ்ந்தான்.

"எத்ருச்சா லாப ஸந்துஷ்டோ
த்வந்த்வா தீதோ விமத்ஸர:"

என்ற திருவாக்கின் வடிவமே தோரோ. அவன், வந்ததில் மகிழ்ந்து, விருப்பு வெறுப்பு பொறாமையற்று, ஆசையை அடக்கியாண்டான். விவேகானந்தரின் வேதாந்த முழக்கம் கேட்குமுன்பு அமெரிக்காவில் விளங்கிய வேதாந்திகள் மேற்சொன்ன மூவர்; அவர்களுக்குள் தோரோ அனுபவ வேதாந்தி. 'கீதையும் பைபிளும் எனக்குப் போதும்" என்று அவன் வாழ்ந்தான். அவன் ஏகாந்தமே விரும்பினான்,

அவனுக்கு நண்பர் ஐந்தாறு பேர்களே; தன் பெயர் பரவ வேண்டுமென்றுகூட அவன் விரும்பவில்லை. "நான் யாருக்கும் இடரில்லாமல் சத்தியத்தில் வாழ்ந்தாலே போதும்" என்றான் தோரோ. தோரோ எவரையும் சார்ந்திருக்கவில்லை; எவருக்கும் அடிமைவேலை செய்யவில்லை. எமர்ஸனுடன் அடிக்கடி கீதையைப் படிப்பதும் அதைப்பற்றியே பேசுவதுந் தவிர வேறு வீண் பேச்சில்லாமல் அவன் தியானத்தில் காலங்கழித்தான். அவன் தக்க அறிவாளி; ஏராளமாகச் சம்பாதிக்கக் கூடியவன்; எனினும் தேவைக்குமேல் ஒரு டாலர்கூட அவன் மிச்சம் வைப்பதில்லை; முற்றிலும் கடவுளை நம்பியே அவன் வாழ்ந்தான். "பறவைக்கு ஊட்டும் இறைவன் நமக்கும் ஊட்டுவான்; கவலையேன்?" என்பான் தோரோ, அவன் மரம் வெட்டித் தச்சுவேலை செய்வான்; நிலமளப்பான்; இரண்டினாலும் தனக்கு வேண்டியதை அவன் சம்பாதித்துக்கொண்டான். அவன் தேவைகள் மிகச்சுருக்கம். சிறு வயதிலேயே அவன் ஊனுணவை விட்டுவிட்டான். "புலால் உண்ணல் பாபம், அசங்கியம்; அனாவசியம்; கொடுமை; அது மனிதனைக் கொலைகாரனாக்குகிறது; கல்நெஞ்சனாக்குகிறது; மனிதனுக்கு ஊனுணவு தேவையே இல்லை; தாவரமே போதும்" என்றான் தோரோ. அவன் துப்பாக்கி சுட்டதில்லை; உயிர் வதை செய்ததில்லை. ரொட்டி, உருளைக்கிழங்கு, தண்ணீர், கிடைத்தால் பால், டொமேடோ-இவையே தோரோவின் உணவுகள். சாராயங்குடிப்பதையும் அவன் அருவருத்தான். சுருட்டு, கிட்டவரக்கூடாது. அவன் தன் சட்டைகளைத் தானே தைத்துக்கொண்டான். கையினால் அவன் நேர்த்தியாகத் தைத்தான். யந்திரத்திலும் தைத்தான்

"இதெல்லாம் சரி தோரோ. உனக்கு வீடு வேண்டாமா?" என்று ஒரு நண்பர் வினவினர். "இதோ வீடு, கொடு கோடாரி" என்று வாங்கிக்கொண்டு தோரோ காட்டுக்குப்போய் சில பைன் மரங்களை வெட்டி வந்தான்; ஒரு வாரத்தில் மரங்களைச் செதுக்கிச் சுவர் எழுப்பி—நேர்த்தியான சிறு வீடு கட்டிவிட்டான்—செலவு 28 டாலரே. அமைதியான வால்டன் சுவனத்தில் அழகான ஏரிகரையில் தோரோ மர—வீடு கட்டித் தனியே வசித்தான். வீட்டுக்குப் பக்கத்திலேயே அவன் தனக்கு வேண்டிய உருளைக் கிழங்கையும் காய்கறிகளையும் விளைவித்தான். தோரோ பிரமசாரியாகவே வாழ்ந்தான். எந்தப் பெண்ணையும் அவன் காதலித்ததில்லை; தனிமையையே காதலித்தான். சிக்கனம் (Economy)என்ற நூலில் தோரோ "ஆறு வாரம் பாடுபட்டு நான் ஒரு வருஷ ஜீவனத்திற்குச் சம்பாதித்துக்கொள்வேன்; மீதி நாளெல்லாம் என் ஆன்ம சுதந்தரத்திற்கு மிச்சம்" என்கிறான். "இடும்பக் கூத்து வேண்டாம்; எளிய வாழ்வே இனிது; எளிமையால் உலகம் பஞ்சமில்லாது வாழலாம்." என்கிறான் தோரோ. மஹாத்மாவுக்கும் தோரோவுக்கும் இவ் விஷயத்தில் ஒற்றுமை அதிகம். பத்து மைலுக்குட்பட்ட இடங்களுக்குப் போக வேண்டுமானால் அவன் நடந்தே செல்வான்.

டாலர்—மன்னர் நிறைந்து தொழில் செழித்த அமெரிக்காவில் இத்தகைய ஏகாந்த ஞானியை யார் மதிப்பர்! "இவன் காட்டுமிராண்டி, இந்த நாகரிக யுகத்திற்குத் தகுதியற்றவன்; தனிமை—விலங்கு" என்றெல்லாம் பலர் கேலி செய்தனர். அவனது மரவீட்டையும், ஊன் மதுவற்ற எளிய உணவையும் கண்டு சிரித்தனர். "சிரியுங்கள் சிரியுங்கள் பணக்கார அடிமைகாள், இடம்பாசாரிகளா! தர்மம் உங்களைப் பார்த்துச் சிரிக்கிறது" என்றான் தோரோ.

தோரோ எளிய வாழ்வு வாழ்ந்தாலும் பெரிய நோக்குடைய மேதாவி; புரட்சி வீரன்; சமரஸ ஞானி; பெரிய சிந்தனையாளன். அவனெதிரே நின்று யாரும் வாதாட முடியாது. "பட்பட்" என்று பதில்சொல்லி வம்பர் வாயை அவன் அடக்குவான். அமெரிக்கச் செல்வரின் இடம்ப நாடகத்தையும் ஊன் மதுவால் விளையும் தீங்கையும், பணப்பேய் பிடித்தவர் செய்யும் பாபங்களையும் அவன் சூடு தைக்கும்படி வர்ணிப்பான். அமெரிக்கர் நீக்ரோக்களைத் தொத்தடிமைகளாக நடத்துவதைத் தோரோ கண்டித்தான். அடிமை என்ற பேச்சையே வெறுத்தான். "மனிதனுக்கு மனிதன் அடிமையில்லை. ஒவ்வொருவனும் ஆத்மா; தெய்வாம்சம்" என்றான்.

தன் சுதந்தரக் கொள்கைகளை அவன் அஞ்சாத்துணிவுடன் உரக்கப் பேசினான். "நான் எவருக்கும் குடியல்லேன்; நான் ஆத்ம சுதந்தரன்" என்றான். அவன் பெரிய சத்தியாக்கிரகி. சர்க்கார் போட்ட வரியைக்கூட மறுத்தான். அதற்காகச் சர்க்கார் அபராதம் போட்டது; பிறகு அவனை ஒருநாள் சிறையிட்டது. "அடிமைத்தனத்தைப் போற்றும் அரசாங்கத்தை நான் ஒப்பேன்; என்ன வந்தாலும் வரி கொடேன்" என்று தைரியமாயிருந்தான் தோரோ. அவனுடைய அத்தை அபராதத்தைக் கட்டி அவனை விடுவித்தாள்; தோரோவுக்கு இது பிடிக்கவில்லை. "அத்தை! என்னைப்போன்ற பல கோடி ஆன்மாக்கள் அடிமைச் சிறையில் ஆடு மாடுகள்போல் வாழ்கிறார்களே, அவர்கள் சுதந்தரம் பெற்றாலே எனக்குச் சுதந்தரம்" என்றான் தோரோ. ஒத்துழையாமை, சாத்வீக எதிர்ப்பு இவற்றை அவன் இயல்பாகவே அனுஷ்டித்தான். மஹாத்மா காந்தியை உலகம் அறியு முன்பே தோரோ அஹிம்ஸா தர்ம சத்யாக்கிரகியாக விளங்கினான். தோரோ யாருக்கும் வரி கொடுக்கவில்லை. சர்ச்சுக்குப் போனதில்லை. "வான் சூழ்ந்த உலகெல்லாம் ஆண்டவன் கோயில்; அக்கோயில் என் உள்ளத்திலும் உள்ளது. அதில் விளங்கும் பரமாத்மாவே எனது தியான மூர்த்தி" என்றான் இந்த ஞானி. தோரோ பறவைகளிடம் அன்புள்ளவன்; காட்டுப் பறவைகள் அவன் தோளிலும் முழங்கையிலும் வந்து அமர்ந்து அவன் தரும் உணவை அருந்திப் பாடும்; அணில்களும் அப்படியே; எந்த உயிரையும் அவன் வருத்தியதில்லை. வால்டன் காட்டிலுள்ள விலங்குகளுக்கும் அவன் நண்பன்.

தோரோ மதவாதியன்று; இயற்கையின் உள்ளத்தில் இறைவனைக் காணும் ஞானி அவன். அவனுக்கு ஞான தீபமாக விளங்கியது பகவத் கீதையே அதன் மூலம் அவன் பாரத நாட்டிடம் அன்பு கொண்டான். இந்துக்களின் உன்னத ஞானத்தைப் போற்றிக் கட்டுரை எழுதினான். கீதை, பைபிள், தபே தேகிஸ், ஜெந்தவஸ்தா முதலிய புனித நூல்களெல்லாம் ஒன்றாகப் பயிலவேண்டும்; உண்மையைக் காண்பதே சமயம்" என்றான் தோரோ.

எத்தனையோ நாகரிகச் செருக்கர் கேலி செய்தனர். தோரோவின் ஏகாந்தத்தில் இக்கேலி நையாண்டிகளெல்லாம் அணுகுவதில்லை. உலகின் போலி விமர்சனங்களைக் குப்பைபோல் ஒதுக்கி அவன் தனக்குத் தானாக வாழ்ந்தான். எமர்ஸன், விட்மான்போன்ற சில ஞானிகளே அவனை அறிந்தனர். எமர்ஸன் கன்கார்டில் தனது வீட்டில் தோரோவை வரவேற்றுச் சில ஆண்டுகள் பரிவுடன் போற்றினான். தோரோவின் பேச்சும் எழுத்தும் படிப்பினால் வந்தனவல்ல; இயற்கை யனுபவத்தாலேயே அவன் பேசினான் எழுதினான். ஆத்மதிருப்தி—இயற்கை வாழ்வு ஆகிய இரண்டே, அவன் மூச்சு. "என் ஆயுளின் ஒவ்வொரு நொடியும் எனக்கே உரிமை; என்னை நான் பெற்றேன்; வேறெதிலும் ஆசை வைக்கவில்லை; நான் சுதந்தரன், பூரண சுதந்தரன்; அதுவே என் இன்பம்!" இவ்வாறு சொல்லித் தோரோ மண்வாழ்வினின்று விடைபெற்றுச் சென்றான். தோரோ இறந்த பிறகு புகழ்ப் பெற்றான். இன்றுலகம் அவனைப் புனித முனிவனாக மதிக்கிறது—சுதந்தராத்மா தோரோ வாழ்க!


## சேலத்தில்

## கல்யாணப் பட்டு ஜவுளி ரகங்கள் வாங்க சிறந்த இடம்

# கோபால பத்ம விலாஸ்

## 385, கடைவீதி, சேலம்.

*Proprietors :*

S. N. PATHMANABA CHETTIAR

P. R. JAYAGOPALA CHETTIAR

# ஞாபகச்சின்னம்

வேங்கடலட்சுமி

சற்று தூரத்தில் விளையாடிக்கொண்டிருந்த இரு குழந்தைகளையும் நோக்கியபடியே கையிலிருந்த மகமல் துணியில் ஜரிகை இழைகளினால் பூவேலை செய்துகொண்டு உட்கார்ந்திருந்தாள் குல்ருக்.

மேலே பச்சைப்பசேலென்ற கிளைகளுடன் தழைந்திருந்த அசோகவிருட்சத்தின் புஷ்பங்கள் சிவப்பாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தன. சற்றுமுன்னேதான் கீழ்வானில் தோன்றிய உதய சூரியன் பொன்னிறமான தன் வர்ணரேகைகளுடன் நந்தவனத்தின் செடிகொடிகளுக்கிடையில் விசித்ரமான உருவங்களையமைத்துக்கொண்டிருந்தான். பலவகை வர்ணஜாலங்களமைந்த புஷ்பங்கள் நாற்புறமும் அலங்காரமாய் அரும்பி மலர்ந்து தென்றலசைவில் தாமும் தலையசைத்தாடின.

குல்ருக்குக்குச் சுமார் நாற்பது வயதிருக்கும். அவளுடைய தலையில் அங்கங்கே காணப்பட்ட நரைத்த ரோமங்களும் முகத்தில் விழுந்திருந்த ஒன்றிரண்டு சுருக்கங்களும் அவள் வாலிபத்தைத் தாண்டிவிட்டாளென்று காண்பித்தன. ஆனால் இன்னமும் கட்டுக்குலையாத நேர்த்தியான உருவமும் அவளுடைய பெரிய கருவிழிகளும், களை பொருந்திய முகமும் சிறுவயதில் அவள் கண்கவர் கட்டழகியாயிருந்திருக்கவேண்டுமென்பதை அறிவித்தன.

அசோகவிருட்சத்தின் அடிமரத்தில் சாய்ந்தபடியே கால்களை மடித்து உட்கார்ந்துகொண்டு பரபரவென்றுதைத்துக்கொண்டிருந்தாள் அவள். ஆனால் அவள் கைகள் தாம் வேலை செய்துகொண்டிருந்தனவே தவிர அவள் மனம் எங்கோ சென்றிருந்தது. கவலையின் ஏக்கம் தேங்கிய விழிகள் சற்று தூரத்திலிருந்த புஷ்பப் பாத்திகளின் மத்தியில் மண்வீடு கட்டி விளையாடிக்கொண்டிருந்த அக்குழந்தைகளின்மீது பதிந்துகொண்டிருந்தன.

* * *

கலீரென்று சிரித்தான் ரூப்சிங். அவன் முகத்தில் வெற்றியின் பெருமிதம். அவனெதிரில் மண்டியிட்டு உட்கார்ந்திருந்த மும்தாஜ் சரிந்துவிழுந்துவிட்ட தன்னுடைய மண் வீட்டைச் சரிப்படுத்த முயன்றுகொண்டிருந்தாள். அவளுடைய நீலமணிக் கண்களில் கண்ணீர் படரலாயிற்று.

திரும்பி நோக்கினாள். ரூப்சிங்கின் வீடு அவனைப்போலவே கம்பீரமாய் நின்றுகொண்டிருந்தது.

ஆகா! என்ன அழகான வீடு!......... எத்தனை ஸ்தூபிகள்? வரிசையாய் என்ன அழகாய் நின்றுகொண்டிருக்கின்றன? தன்னுடைய வீடு மட்டும்?''

மும்தாஜின் குழந்தை மனதில் இவ்வெண்ணம் தோன்றிமறையவும் அவளுக்கு அழுகை பொங்கிவந்துவிட்டது.

முகத்தைக் கவிழ்த்துக்கொண்டு விக்கி விக்கி அழலானாள்.

''மும்தாஜ்!......மும்தாஜ்!......ஏன் அழுகிறாய்?......... உன்னுடைய வீடு விழுந்து போச்சே, என்றா? சீ!......இதோபார்!...... நான் உனக்கு என்னுடையதைப்போலவே நேர்த்தியான வீடு கட்டித்தருகிறேன்......''

இவ்வாறு கூறிக்கொண்டே அவளுடைய தோளைப்பற்றி அணைத்துக்கொண்டு அவளைச் சமாதானப்படுத்தலானான் ரூப்சிங்.

சற்றுநேரம் சென்றது.

ரூப்சிங் தன்னுடைய வீட்டுக்குப் பக்கத்தில் இன்னொரு வீடு கட்டலானான்.

அவன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு ஆவல் பெருகும் விழிகளுடன் அதையே உற்று நோக்கிக்கொண்டிருந்தாள் மும்தாஜ். வீடு உருவாகிக்கொண்டேவந்தது. மும்தாஜின் கண்ணீரும் மறைந்து அவளுடைய அழகிய முகத்தில் புன்னகையொன்றும் முகிழ்விரிக்கலாயிற்று.

தன்னுடைய அழகிய சிறு கைகளால் ஈர மண்ணை அள்ளியள்ளிக் கொடுத்தாள் சிறுமி மும்தாஜ்:— அவள் தோழன் துரிதமாய் வேலை செய்துகொண்டேயிருந்தான்.

சற்றுநேரம் சென்றது. ரூப்சிங்கு கைகளை உதறிவிட்டு எழுந்துநின்று தன்னெதிரே நின்ற பாவிகையை வெற்றிக்குறியுடன் நோக்கினான்.

"பார்த்தாயா?— எவ்வளவு நேர்த்தியாகக் கட்டிவிட்டேன்!— உன்னால் முடிந்ததா இதைச்செய்ய?"—என்று கேட்பதுபோலிருந்தது அப்பார்வை.

ஆனால் அவ்வீட்டின்மேல் தன் விழிகளைப் பதித்திருந்த பாவையின் முகத்தில் திருப்தி யேற்படவில்லை. அவள் பேசாமல் உட்கார்ந்திருந்தாள்.

கடைசியில்,—"ஊஹூம்;—எனக்கு அது வேண்டாம். நீ முதலில் கட்டினாயே,... அது தான் வேண்டும்,"—என்று தூரத்தில் தலை நிமிர்ந்துநின்ற அவனுடைய களிமண் வீட்டைக் காட்டினாள்.

ரூப்சிங் சற்றுநேரம் யோசித்தான். என்ன வானாலும் அவன் ஆண் பிள்ளையல்லவா? இதைப்போல் இன்னொரு நேர்த்தியான வீடு அவனால் கட்டமுடியாதா? இவ்வாறு எண்ணினான் பத்துவயதான அப்பாலகன். "சரிதான், அதையே நீ எடுத்துக் கொள்ளு" என்று பெருந்தன்மையுடன் விட்டுக்கொடுத்தான்.

சிறுமி அடக்கொணாச் சந்தோஷத்துடன் எழுந்தாள். கலீரென்ற சிரிப்பு அவள் கண்டத்திலிருந்து வெளிவந்தது. ரூப்சிங்கின் கைகளைப் பிடித்துக்கொண்டு அவனைச் சுற்றிச்சுற்றிக் கூத்தாடினாள்...... சட்டென்று ஓடினாள். அருகே யிருந்த ரோஜாப் புதரிலிருந்து செக்கச்சிவந்த மலரொன்றைப்பறித்து வந்தாள். ரூப்!......... ரூப்!...... இதைப்பார்!......எவ்வளவு நேர்த்தியான புஷ்பம்!......இதோ இது உனக்கே உனக்குத்தான்"...... இவ்வாறு கூறி அதை அவன் கையில் கொடுத்துவிட்டுத் தன்னுடைய வீட்டிலிருந்த ஸ்தூபிகளையெல்லாம் எண்ணலானாள்.

பெரிய வெற்றி வீரனைப்போல் அவளை நோக்கியபடியே நின்றுகொண்டிருந்தான் ரூப்சிங். அவனுடைய அழகிய முகத்தில் பெருமையும் சந்தோஷமும் ஜ்வலித்தன.

— 2 —

"மும்தாஜ்! ரூப்!......எங்கே போய்விட்டீர்கள்?"

குல்ருக்கின் குரல் காற்றில் கலந்துசென்றது. கையிலிருந்த துணியை மடித்துக் கொண்டு எழுந்து நின்றவண்ணம் நாற்புறமும் கவலையுடன் நோக்கினாள் அவள்.

சற்றுத் தூரத்திலிருந்த ரோஜாப்புதர்களுக்கிடையிலிருந்து தன்னை நோக்கி ஓடிவரும் குழந்தைகளைக் கண்டதும் அவள் முகம் மலர்ந்தது.

"குல்ருக்!...இங்கே வந்து பார்!...ரூப்சிங் எனக்காக எவ்வளவு நேர்த்தியான வீடு கட்டிக் கொடுத்திருக்கிறான்!......இரண்டு வீடுகள்;......ஒன்று எனக்கு, ஒன்று அவனுக்கு; ......ஆனால் என்னுடைய வீடுதான் ரொம்ப அழகு!.........எவ்வளவு ஸ்தூபிகள் தெரியுமா?......ஒன்று, இரண்டு, மூன்று,...பதினாறு ஸ்தூபி...நீ வந்துபாரேன், குல்ருக்!"

கலகலவென்று பேசிக்கொண்டே அவளுடைய கைகளைப் பற்றியிழுத்தாள் மும்தாஜ். வெட்கத்தால் சிவந்த முகத்துடன் அவள் பக்கத்தில் நின்றான் ரூப்.

மும்தாஜின் அளவற்ற குதூகலம் குல்ருக்கின் வறண்ட உதடுகளில் ஒரு புன்னகையை உண்டாக்கியது. லேசாகச் சிரித்தபடியே அவளைத் தொடர்ந்து சென்றாள் அவள்.

ரூப்சிங் அங்கேயேநின்றுகொண்டிருந்தான்.

ரோஜாச் செடிகளண்டை வந்ததும் நின்றுவிட்ட மும்தாஜ்,..."அதோ பார்!" என்று தன்னுடைய சிறு கையைத்தூக்கிச் சுட்டிக் காண்பித்தாள்.

அவள் காண்பித்தவிடத்தை நோக்கிய குல்ருக்கின் முகத்திலிருந்த புன்னகை மறைந்தது. அதற்குப் பதில் அவள் விழிகளில் அளவற்ற ஆச்சரியமும், வியப்பும் தோன்றி மிதந்தன. தன் கையிலிருந்த மகமல் துணியைக் கீழே நழுவ விட்டுவிட்டு ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றாள்.

"என்ன ஆச்சரியம்?... பத்து வயதும் நிரம்பாத ஒரு பாலகன், விளையாடுவதற்காகக் கட்டிய களிமண்ணாலான பொம்மை வீடா அது?... ... கைதேர்ந்த சிற்பிகளால் கூட இவ்வளவு நேர்த்தியான கட்டிடத்தை நிர்மாணிக்க முடியாதே!... ... குழந்தை ரூப்சிங்கா இதைச் செய்தான்? ... என்னால் நம்பமுடியவில்லையே!" ... ... ...

இவ்வாறு எண்ணினாள் குல்ருக்.

திரும்பிப்பார்த்தாள். ரூப்சிங்கு அங்கேயே நின்றுகொண்டிருந்தான்.

"ரூப்!......இதை நீயா செய்தாய்?"

"ஆமாம் ஒன்று எனக்கு......ஒன்று மும்தாஜுக்கு"

"என்னுடையதுதான் ரொம்ப நன்றாயிருக்கிறதில்லையா, குல்ருக்"

புள்ளிவிபரங்களைக் கொண்டு புரிந்துகொள்க

பட்டுவாடாசெய்யப்பட்டது
மொத்த தொகை
ரூ. 3. 8 கோடிக்கு மேல்.

மொத்தவியாபாரம்
அமுலில் உள்ளது
ரூ. 19. 32 கோடிக்குமேல்

புதியவியாபாரம்
1944-ல் பூர்த்தியானது
ரூ. 4. 73 கோடிக்குமேல்

N.F.a/ta-1

நாஷனல்
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
7. கவுன்ஸில் ஹவுஸ் ஸ்டிரீட், கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு:
நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்
362, சைனாபஜார் ரோடு எஸ்பிளனேட்.

கிளை ஆபீஸ்கள்:
பங்களூர். மதுரை.

இது மும்தாஜின் கேள்வி......... எங்கோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த குல்ருக்கின் செவிகளில் இக்கேள்வி எங்கோ கிணற்றிலிருந்து பேசுவதுபோலிருந்தது.

"இரண்டுமே நன்றாயிருக்கின்றன" என்று அவள் கூறிய பதில் சிறுமி மும்தாஜுக்குத் திருப்தியளிக்கவில்லை.

"அரண்மனைக்குப் போகலாம் வாருங்கள்,...ரொம்ப நேரமாய்விட்டது,"...என்று கூறிக்கொண்டே திரும்பினாள் குல்ருக்.

கோடானுகோடி எண்ணங்கள் அவள் உள்ளத்தில் அலைமோதின. ஒருவினாடி தன்னுடன் வந்துகொண்டிருந்த குழந்தைகளிருவரையும் மாறிமாறி நோக்கினாள். சொல்ல முடியாத ஓர் ஏக்கம் அவள் விழிகளில் மிதந்தது.

நிமிர்ந்து வானத்தை நோக்கினாள். வெய்யில் சுரீரென்று உறைத்துக்கொண்டிருந்தது. விதம்விதமான பட்சி ஜாதிகள் கிளைக்குக்கிளை தாவிச் சிறகடித்துக்கொண்டிருந்தன. பலவர்ணமான பட்டாம்பூச்சிகள் பறப்பதைக் கண்ட குழந்தைகளிருவரும் அவைகளைப் பிடிப்பதற்காகக் குதூகலத்துடன் குறுக்கும் நெடுக்கும் உற்சாகமாகக் கைகளை விரித்தபடி ஓடினார்கள்.... குல்ருக் உணர்ச்சியற்ற யந்திரப்பொம்மைபோல் அவர்கள் பின்னால் வந்துகொண்டிருந்தாள்.... அந்தப்புரத்தின் வாயிலண்டை சற்றுநின்று திரும்பிப்பார்த்தாள். ரூப்சிங் கட்டிவைத்திருந்த பொம்மை வீடுகளிரண்டும் ரோஜாச் செடிகளுக்கிடையிலிருந்து அவள் பார்வைக்கு அரைகுறையாய்த் தென்பட்டன.

ஆழ்ந்த ஒரு பெருமூச்சு அவள் ஹிருதயத்தைக் கீறிக்கொண்டு வெளியேவந்தது. கண்ணில் மல்கிய நீரை ஒருவருமறியாமல் துடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தாள். குழந்தைகளும் அவளைத் தொடர்ந்தார்கள்.

* * * *

ஜிஹாங்கீர் பாதுஷாவின் முதன் மந்திரியான ஆஸப்கானின் அருமைக் குழந்தை மும்தாஜ். பிறந்தவுடனேயே தன் தாயைப் பறிகொடுத்தாள் அவள். அவள் தாயின் அந்தரங்கத் தோழியாயிருந்த அடிமைப் பெண் குல்ருக் அக்குழந்தையை அன்புடன் போற்றி வளர்த்துவந்தாள்.........

இறந்துவிட்ட தன் தங்கையின் மகனை பாலன் ரூப்சிங்கையும் கட்டழகியான சிறுமி மும்தாஜையும் கண்ணை இமைகள் காப்பது

போல் ஆஸப்கானின் அரண்மனையில் அன்பைச் சொரிந்து வளர்த்து வந்தாள் குல்ருக்.

குழந்தைகளிருவரும் வளர வளர, பேதை குல்ருக் அவர்களைச் சுற்றிலும் தனக்குத் தோன்றியவிதமெல்லாம் பற்பலவிதமான கற்பனைக் கோட்டைகளை எல்லாம் எழுப்பிவந்தாள். அக் கற்பனைகளிலேயே ஊறித் தன்னுடைய ஒரே தங்கையான ரோஷ்நார் இறந்துவிட்டதையும் மறந்து நாட்களைக் கழித்துவந்தாள் குல்ருக்.

ரோஷ்நார், குல்ருக், இருவரும் உயர்ந்த குடும்பத்தில் இரட்டையாய்ப் பிறந்தவர்கள். குல்ருக், ஆஸப்கானின் அந்தப்புரத்தில் மும்தாஜின் தாயான ஜஹானரா பேகத்துக்கு அடிமையாக வேலைக்கு அமர்ந்தாள், அவள் தங்கையான கட்டழகி ரோஷ்நாரின் வாழ்க்கையை ஏதோ ஒரு பெரிய மர்மம் சூழ்ந்திருந்தது. இரண்டு வயது பாலனான குழந்தை ரூப்சிங்கைத் தன் சகோதரியிடம் விட்டுவிட்டு அவள் இளமையிலேயே மரித்துவிட்டாள்.

பேகம் ஜஹான்ரா மரணமடைந்தபொழுது அவளுடைய குழந்தையான மும்தாஜையும் வளர்த்துவரும் பொறுப்பு குல்ருக்கைச் சேர்ந்தது. தாயற்ற இருகுழந்தைகளும் அவளையே தம் தாயெனக்கருதி வளர்ந்து வந்தனர்.

— 3 —

நிற்காமல் உருண்டு சென்ற் காலசக்கரம் தன்னுடன் நாட்கள் மாதங்கள் வருடங்களையும் உருட்டிச் சென்றது. ருதுக்கள் ஒன்றையொன்று பின் தொடர்ந்து வருவதும் போவதுமாயிருந்தன.

மும்தாஜ் இப்பொழுது சிற்பவடிவமைந்த கண்கவர் கட்டழகியாகத் திகழலானாள். மொகலாய சாம்ராஜ்ய முழுதும் அவளுடைய வனப்பைக் குறித்துப் புகழ்பரவியது.

ரூப்சிங்கும் வளர்ந்து பெரியவனாய்விட்டான். ஆஸப்கானின் படையில் பிரதம தளகர்த்தனாக அமர்ந்து, தக்ஷிணத்தில் ஏதோ ஒருயுத்த நிமித்தம் சென்றிருந்தான். ஆனால் எவ்விதமான வேலைகளுக்கிடையிலும் கள்ளமறியாச் சின்னஞ்சிறு வயதில் தன்னுடன் விளையாடி வளர்ந்த கட்டழகியான மும்தாஜின் வடிவை மட்டிலும் அவன் மறக்கவில்லை.

அவன் சிறுவயதில் அரண்மனை நந்தவனத்தில் மும்தாஜுக்காகக் கட்டிக் கொடுத்த பொம்மை வீடுகளிரண்டும், அந்தப்புரத்தில் குல்ருக்கின் அறையில் ஒரு பெட்டியில் பத்திரமாக வைக்கப்பட்டிருந்தன. தன்னுடைய ஓய்வு நேரங்களில் அவற்றை எடுத்துப் பார்ப்பாள் குல்ருக். அப்பொழுது அவள் விழிகளில் ஆழம் காணமுடியாத ஒரு வேதனையின் சாயல் தோன்றி மறையும். பெருமூச்செறிந்து அவற்றை மீண்டும் பத்திரமாக வைத்துவிட்டுத் தன்னுடைய வேலைகளைக் கவனிப்பாள்.

* * * *

வஸந்தத்தின் ஆரம்பம். யமுனைக் கரை முழுவதும் இளவேனிலின் சௌந்தர்ய சோபை பரவிநின்றது. கண்ணுக்கெட்டிய தூரம் விரிந்துகிடந்த பசும்புல்லின் மரகதச் சாயை, அதன் நடுவே நாணிநிற்கும் நாரீமணிகள் போல், விதம்விதமான வர்ண ஜாலங்களுடன் வெளியே தலைநீட்டிய புது மலர்கள். யமுனையின் சலசலவென்ற பிரவாகம் அலையலையாய்ப் பரவிவரும் அமுதகீதம்போல் அவை யாவற்றையும் தழுவி நின்றது.

அன்று ஆக்ரா முழுவதும் மன்னன் ஜிஹாங்கிரின் பிறந்ததினக்கொண்டாட்டம். நகர் முழுதும் நேர்த்தியான அலங்காரங்கள், ஜகஜ்ஜோதியான விளக்குக்கள், மகர தோரணங்கள் இவைகளுடன் திகழ்ந்தது.

அரண்மனையைச் சேர்ந்த சிங்காரவனத்தில் விசித்திரமான கண்காட்சியொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வனம் முழுதும் புஷ்பப் பாத்திகளுக்கிடையிலும் விருட்சங்களுக்கடியிலும் பச்சைப் பசேலென்ற கொடிகளாலும் தழைகளாலும் அமைக்கப்பட்டிருந்த சின்னஞ்சிறு லதாக்ருகங்கள் போன்ற அழகிய கடைகள் காணப்பட்டன. அக்கடைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த சாமான்கள் யாவும் மிகவும் விலையுயர்ந்தவை. பொன்னாலும், மணியாலும் செய்யப்பட்ட அணி பணிகளும், பொற்சரிகை வேலை செய்யப்பட்டுப் பளபளவென மின்னிக் கண்பறித்த பட்டுடைகளும், விசித்திரமான வேலைப்பாடமைந்த தந்த சாமான்களும் அவ்வழகிய கடைகளில் பரப்பப்பட்டிருந்தன. அக்கடைகளில் உட்கார்ந்து வியாபாரம் செய்துகொண்டிருந்தவர்கள் யாவரும் உயர்குலப் பெண்மணிகளே. அவர்களில் கட்டழகி மும்தாஜும் ஒருத்தி.

முழு நிலவெறித்த அவ்விரவில் கண்காட்சியைச் சேர்ந்த கடைகளைத் தன் தோழன்

நஸீமுடன் சேர்ந்து பார்த்துக்கொண்டே சிங்காரவனத்தைச்சுற்றி வந்துகொண்டிருந்தான் இளவரசன் குர்ராம்.

நேர்த்தியான நெடிய உருவம், மெருகிட்ட தங்கத்தின் பளபளப்புக்கொண்ட நிறம், கூரிய அகன்ற விழிகள், இத்துடன் மொகலாய சாம்ராஜ்யத்தின் இளவரசனுக்குரித்தான உடையலங்காரம், இவையாவும் சேர்ந்து இளமையின் முறுக்கேறிய அவனுடைய உருவை மிக வனப்புடையவையாகச் செய்தன. சிங்காரவனத்தை அவன் சுற்றி வரும்போழுது அவனுடைய உருவைத் தொடர்ந்துசென்ற விழிகள் பல.

எங்கும் கலகலவென்ற பேச்சும், பெண்மணிகளின் கலீரென்ற நகைப்பும், அவர்களணிந்த வளையல்களின் இனிய ஒலியும் பரவி நின்றன.

* * * *

"நஸீம்!...... அதோ பார்!..." என்று தன் தோழனுக்குத் தான் கண்ட அபூர்வ வஸ்துவைச் சுட்டிக் காண்பித்தான் இளவரசன்.

"அதோ அங்கே உட்கார்ந்திருப்பது யார்?"

"அதுவா?—ஆஸப்கானின் புத்திரி மும்தாஜ்!......அவளைக்குறித்து நீ இதுவரையில் கேள்விப்பட்டதே இல்லையா?......" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் நஸீம்.

இளவரசன் ஒன்றுமே பதில் கூறவில்லை. மும்தாஜின் உருவைக் கண்கொட்டாமல் நோக்கியபடியே தன்னை மறந்து அசைவற்று நின்றுகொண்டிருந்தான்.

சற்று நேரம் சென்றது.

"ஏன்?...... மற்றக் கடைகளையும் பார்க்க வேண்டாமா?.........மும்தாஜின் கடையிலிருந்து ஏதாவது......... வேண்டுமானால் வாங்குவோமா?" என்று குறும்பாகச் சிரித்தான் நஸீம்.

இக்கேள்வி இளவரசன் விழிகளில் ஒரு மின்னலையுண்டாக்கியது.

"நஸீம்!... உனக்கு அவளைத்தெரியுமா?" என்று ஆவலுடன் வினவினன்.

"நன்ருய்த் தெரியும்"......

"ஆனுல் வா, போவோம்"......

தன் கடைக்குள் நுழைந்த இரு வாலிபர்களையும் ஊடுருவி நோக்கினள் பொற்கொடி.

குர்ராம் பொன்பூத்த பூங்கொடிபோல் நின்ற அக்கட்டழகியைப் பார்த்துப்பார்த்து அதிசயமடைந்தான்.

"என்ன வேண்டும் உங்களுக்கு?" என்று தன் இதழ்க்கடையில் அரும்பிய முறுவலுடன் வினவினள் மும்தாஜ்.

"......என்ன வேண்டும்?......நஸீம்!...... எதை......வாங்கலாம்?......"என்று அவளை நோக்கியபடியே தடுமாற்றத்துடன் கேட்டான் இளவரசன்.

எதிரே நின்ற இளமங்கைக்கு அவனுடைய தடுமாற்றம் வியப்பையளித்தது. அவன் ஏன் தன்னை அப்படிப் பார்க்கவேண்டும்?

மும்தாஜின் முகம் நாணத்திஞலும் குழப்பத்திஞலும் சிவப்பேறியது. தலை குனிந்து தரையை நோக்கினள்.

ஒருகணம் சென்றது. சட்டென்று தலை நிமிர்ந்தாள். அப்பொழுது நஸீம் அங்கில்லை. இளவரசன் மட்டும் மட்டில்லா ஆவலும் அதிசயமும் தன் விழிகளில் ஒளிவீச, அவளைப் பார்த்தபடியே பேசாப் பதுமையாய் நின்றுகொண்டிருந்தான்.

* *

அடுத்த எட்டாவது தினம். முழு மதி தேய்ந்து பிறைமதியாய்விட்டது. வானின் கருநீலத்துக்கிடையே மின்னி மினுக்கிய தாராகணங்கள் உலகை நோக்கிக் கண் சிமிட்டின. நல்ல நடுநிசி...... ஓயாது பிரவகித்த யமுனையின் ஓசையைத்தவிர, அவ்வாழ்ந்த நிசப்தத்தைக் கலக்க வேறு ஒரு விதமான சப்தமுமில்லை. இயற்கையே துயிலில் ஆழ்ந்திருந்த அவ்வேளையில் ஆக்ரா நகரில் மூன்று ஆத்மாக்கள் மட்டும் நித்திரையற்று விழித்துக்கொண்டிருந்தன. ஒன்று இளவரசன் குர்ராம், இன்னென்று மும்தாஜ், இன்னென்று குல்ருக்,... கட்டழகியின் செவிலித்தாய்.

தன் விடுதியில், தன் மடியில் தலை சாய்த்துப் படுத்திருந்த பாலிகையை அன்புடன் தடவியபடியே தழுதழுத்த குரலில் பேசிக்கொண்டிருந்தாள் அவ்வடிமைத் தாய். அவள் முகத்தில் விவரிக்கமுடியாத வேதனையின் சின்னம் பரவியிருந்தது. கலங்கிச் சிவந்திருந்த விழிக்கடைகளில் கண்ணீர் தேங்கி நின்றது.

"மும்தாஜ்! ... ... உன்னுடைய எண்ணம் அதுவானுல் எனக்கொன்றும் தடையில்லை,

யம்மா,...தந்தையிடம் நானே கூறிவிடுகிறேன்,... ... ... ஆயின் என் கண்ணே!... ... மொகலாய வம்சத்தின் இளவரசனுடன் உன் வாழ்க்கையைப் பிணைக்குமுன்னர் நீ அதைக்குறித்து ஆறஅமர ஆலோசிக்க வேண்டும்,... ... ... பிறகு நீ அதைக்குறித்து வருந்தும்படியாக நேரிடலாகாது.''

இவ்வாறு வறண்ட குரலிற் கூறினாள் குல்ருக்.

மும்தாஜ் தன் பளபளக்கும் விழிகளை மலர்த்தி அவளை ஊடுருவி நோக்கினாள். பிறகு சட்டென்று தன் இரு கரங்களாலும் அவள் கழுத்தைச் சுற்றித் தழுவிக்கொண்டு குல்ருக்கின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

''மும்தாஜ்!... ...என் கண்மணி!'' பொங்கியெழுந்த ஆர்வத்துடன் அவளைத் தழுவிக் கொண்டாள் குல்ருக்.

''குல்ருக்!... ...நான்...குர்ரமை மணந்து கொள்வதாகத் தீர்மானித்துவிட்டேன்.''

மிகமிக மெல்லிய குரலில் வெளிவந்த இவ்வார்த்தைகள் குல்ருக்கின் சரீரத்தில் ஓர் அதிர்ச்சியை யுண்டாக்கின. ஒரு கணம் தன் நெஞ்சைக் கையால் அழுத்திக்கொண்டாள். ரூப்சிங்கின் உருவம் மின்னல்போல் அவளுடைய அகக்கண்ணில் எழுந்தது. ஏதோ, பெரிய ஏமாற்றமடைந்த உணர்ச்சியொன்று அவள் மனதைக் கலக்கியது. நெடுநேரம் வரையில் அவ்வறையில் நீண்ட அமைதி நிலவியது.

அதன் முடிவில் குல்ருக்கின் மடியில் கவிழ்த்துக்கொண்டிருந்த தன் முகத்தை நிமிர்த்தி அவளை நோக்கினாள் மும்தாஜ்.

''குல்ருக்!... ...ஏன் பேசாமலிருக்கிறாய்?''

''ஒன்றுமில்லை கண்மணி,... ...என்னவோ யோசித்துக்கொண்டிருந்தேன்,... ... ...நீ... போய்ப் படுத்துறங்கு,...நெடுநேரமாய்விட்டது,,...'' என்று அவள் தலையை அன்புடன் கோதினாள் குல்ருக்.

''உனக்கு,... ... ...கோபம்... ... ... ஒன்றுமில்லையே?''

''கோபமா! ...உன் பேரிலா? ... ... எதற்காக? ... ... நீ சந்தோஷமாயிருக்கவேண்டுமென்பதுதான் என் ஆவல்.''


மேதாஸ்

# மஸ்தானு மாத்திரைகள்

**சிறந்த டானிக்**

மேல்நாட்டு வைத்திய முறை, நமது ஆயுர்வேத முறை இவைகளை ஒருங்கே சேர்த்து தயாரிக்கப்பட்டுள்ளது

**பலஹீனம், வாத வலிகள், மன ஓய்வு, தலைவலி, அஜீர்ணம், மலச்சிக்கல், காசநோய், சிற்றின்பத்தில் பலஹீனம்**

இவைகளுக்கெல்லாம் கைகண்ட ஔஷதம்

இன்றே ஆரம்பியுங்கள்

கிடைக்குமிடம்:—

**K. S. மேதா & கோ.,**

மருந்து வியாபாரிகள்,

**250, சைனா பஜார் (மாடி), சென்னை**

நீண்ட பெருமூச்சுடன் வெளிவந்தன இவ் வார்த்தைகள்.

"குல்ருக், ...நான் போகட்டுமா?"

"போய் நிம்மதியாய் உறங்கு என் செல்வமே."

குனிந்து அவள் நெற்றியில் முத்தமிட்டாள் குல்ருக்.

மும்தாஜின் மலர்ந்த முகம் ஆனந்தத்தினுல் ஒளி வீசியது.

திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே தன் விடுதியை நோக்கிச்சென்ருள் பொற்கொடி. அவள் போனவுடன் குல்ருக் அங்கு மூலையிலிருந்த பெட்டியைத் திறந்து அதற்குள்ளிருந்த ரூப்சிங்கின் பொம்மை விடுகளிரண்டையும் வெளியிலெடுத்தாள்...... இதுவரையில் அடக்கிவைத்திருந்த அவள் துயரம் இப்பொழுது கண்ணீர் வெள்ளமாகப் பொங்கி வெடித்தது. அவற்றைத் தன் மடியில் வைத்தபடியே நெஞ்சு விரியும் துயரத்துடன் அழலானுள். அவள் துக்கம் அடங்குவதற்கு நெடுநேரம் சென்றது.

— 4 —

ஜிஹாங்கீர் மன்னனின் மரணத்துக்குப் பின், இளவரசன் குர்ராம் ஷாஜஹான் என்னும் பெயருடன் மொகலாய சாம்ராஜ்யத்தின் ஏகச்சக்கராதிபதியானுன்.

கட்டழகி மும்தாஜ் அவன் இன்னுயிர்த் துணைவியானுள். காதல்மணம் கமழ்ந்த அவர்கள் வாழ்க்கையில் வருடங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

தக்ஷிணத்துக்குச் சென்றிருந்த ரூப்சிங் மும்தாஜின் திருமணத்தைப்பற்றி அறிந்தான். தன் வாழ்க்கையைக் குறித்து அவன் கட்டியிருந்த கற்பனைக் கோட்டைகளெல்லாம் இப்பொழுது இடிந்து தரைமட்டமாய் விட்டன. மனம் முறிந்தவனுய் அங்கேயே தங்கிவிட்டான். அதற்குப்பின்பு அவன் ஆக்ராவுக்கு வரவேயில்லை.

* * * *

மகமல் திண்டுகளிற் சாய்ந்தபடியே விழிகளையிறுக மூடித் துவண்டுகிடந்தாள் மும்தாஜ். கட்டழகமைந்த அவளுடைய பொன் மேனி தன்னுடைய பொலிவையிழந்து வெளிறிப்போயிருந்தது. ஸகிக்க முடியாத வேதனையினுல் அவளுடைய விழிக்கடைகளிலிருந்து கண்ணீர் உருண்டோடியது. இறுக மூடியிருந்த தனது இதழ்கள் சிறிது பிரிய ஏதேதோ முனகியபடியே தன் மஞ்சத்திற் புரண்டுகொண்டிருந்தாள். கலைந்து கிடந்த அவளுடைய கூந்தலின் இரண்டு நீண்ட பின்னல்கள் மஞ்சத்தில் இருபுறமும் தொங்கின.

அவளருகில் உட்கார்ந்து நெஞ்சம் பிளக்கும் வேதனையுடன் தன் இன்னுயிர்க் காதலியின் கரங்களைத் தடவிக்கொண்டிருந்தான் பாதுஷா.

அடிமைப் பெண்களிருவர் பேகத்திற்கு விசிறிக்கொண்டிருந்தனர். அருகே வைக்கப்பட்டிருந்த பீடமொன்றில் பலவகை ஔஷதங்களும், ஷர்பத்துக்களும் பழவகைகளும் நிரம்பிய பளிங்குப் பாத்திரங்களும் வைக்கப்பட்டிருந்தன. அவ்விடுதியில் எரிந்துகொண்டிருந்த ஒரேயொரு தீபத்தின் மங்கலான வெளிச்சம் ஷாஜஹானின் மனதில் பலவகையான கலவரங்களையும் விவரிக்க முடியாத ஒருவகையான பீதியையுமுண்டாக்க நீண்ட பெருமூச்சொன்று அவன் சிந்தனைகளினூடே வெளிவந்தது.

"மும்தாஜ்!"

அளவற்ற பிரேமையும் ஆர்வமும் அக்குரலில் த்வனித்தன.

தன் நினைவற்று, இவ்வுலகத்துச் சிந்தனையேயில்லாமல் அசைவற்றுக் கிடந்த பொற்கொடியின் ஹிருதயத்தை அப்பிரேமா த்வனி சிறிது தட்டி யெழுப்பியதுபோலும். ஒரு விநாடி சென்றது.

அவள் விழிகள் மெல்லத் திறந்தன. தன் பக்கத்திலிருந்த மன்னனைக் கண்டதும் அவற்றில் இன்பத்தின் ஓர் ஒளி. இதழ்க் கடைகளில் மிகமிக மெல்லிய ஒரு புன்னகையின் லேசான சாயலொன்று படர்ந்தது.

மெல்லமெல்லத் தன் கரத்தைத் தூக்கினுன். கரைகாணுக் காதலுடன் அக்கரத்தைப்பற்றிக்கொண்டான் மன்னன்.

"மும்தாஜ்!...... என் கண்ணே! உன் உடல் நிலையில் மிகுந்த அபிவிருத்தியேற்பட்டிருப்பதாக ஹக்கீம் சொன்னுர்"...... மெல்லத் தன் சிரத்தை அசைத்தாள் அவள். ஏக்கமும் ஏமாற்றமும் நிரம்பிய அவள் விழிகள் பாதுஷாவின் முகத்தை ஏறிட்டு நோக்கின.

"பாதுஷா!...... ஹக்கீம் கூறுவதைத்...... தாங்கள்...... நம்பு...கி...றீர்களா?"

எங்கோ திக்குத்தெரியாத பாதாளத்திலிருந்துபேசுவதுபோலிருந்தது அவள்குரல்.

பாதுஷா திடுக்கிட்டான். அக்குரலில் த்வனித்த அவநம்பிக்கை அவனைக் கரை காணாத்துயரிலாழ்த்தியது.

மும்தாஜின் விழிகள் மூடிக்கொண்டன. ஒன்றும் பேசாமல் அவளுடைய அழகிய முகத்தை நோக்கியபடியே உட்கார்ந்திருந்தான் பாதுஷா. ஜனானா முழுதும் அசாதாரணமான ஓர் அமைதி குடிகொண்டிருந்தது. அடிமைப் பெண்கள் அங்குமிங்கும் நடக்கும்பொழுதுகூடச் சிறிதும் சப்தமுண்டாகாதபடி தங்கள் அலுவல்களைக் கவனித்தனர்.

நேரம் சென்றுகொண்டேயிருந்தது. இரவும் நடுநிசியையடைந்தது.

"பாதுஷா!"

திடுக்கிட்டுச் சிந்தனை கலைந்தான் ஷாஜஹான்.

"குல்ருக்கை அழையுங்கள்!"

பாதுஷா விசிறிக்கொண்டிருந்த அடிமைகளிலொருத்தியை நோக்கினான். அவள் சட்டென்று விசிறியைக் கீழேவைத்துவிட்டு தலைவணங்கி வெளியே சென்றாள்.

* * *

வெளியே உதயத்தின் மனோகரம் லேசான சிறு வெளிச்சம் எங்கும் பரவலாயிற்று. நந்தவனத்தின் புஷ்பங்களின் நறுமணத்தையள்ளிக்கொண்டுவந்த மந்தமாருதம் சாளரத்தின் மகமல் திரைகளையசைத்து ஜனானாவுக்குள் உலவலாயிற்று.

"குல்ருக்! ... ...ரூப்சிங் கட்டிக்கொடுத்த பொம்மை வீடு! ... ... ...அது எங்கே?"

"வைத்திருக்கிறேன், கண்மணி! ... ...அது இப்பொழுது எதற்காக?"

"பாதுஷா! ... ...இங்கே அருகில் வாருங்கள்;"

"கண்மணி! ... ... ... இதோ உன்னருகிலேயே இருக்கிறேனே! ...என்ன வேண்டும் உனக்கு?"

நம்பிக்கையற்றுப்போய் வறண்ட குரலிற் பேசினான் அவன்.

வயதினால் தளர்ந்துபோன குல்ருக் மும்தாஜின் உடலைத் தழுவியபடியே தேம்பித் தேம்பி யழலானாள்.... "மும்தாஜ்!... ...மும்தாஜ்!... ...என் கண்ணே!" அவள் குரல் தழுதழுத்தது. சூழநின்றிருந்த யாவரும் அளவிலாத் துயருடன் கண்ணீர் வடித்தனர்.

"பாதுஷா! ... ...தங்கள் வாக்கை மறக்க வேண்டாம்,... ... ...ரூப்சிங்கின் பொம்மை வீடு என் ஞாபகச்சின்னம்.... ... ... ...எனக்காகத் தாங்கள் செய்யவேண்டியது அது ஒன்றே; ... ...குல்ருக்! ... ... ...பாதுஷா!... ...நான் போகிறேன்; ... ... எனக்கு வேண்டிய ஞாபகச்சின்னத்தைத் தாங்கள் ... ... ... மறக்க... ... ...வேண்... ... ...டாம்!... ... ... ரூப்!... ...ரூப்! ... ... ...இந்த வீடு... ... ... எனக்கு வேண்டாம்! ... ... ... ... ...அது தான் ...வேண்டும்; ... ... ...என் ஞாபகச் சின்னம்! ... ...குல்ருக்! ... ... ...பாதுஷா! ... ... ...ரூப்! ... ... ...ஞாபகச்சின்னம்! ... ... ... ... ... ... ...குல்ருக்! ... ...குல்ருக்!"...

அளவற்ற வேதனையனுபவித்த அச்சரீரத்திலிருந்து உயிர் பிரிந்தது. ... ...குல்ருக்கின் ஓலம் ஜனானாவின் நிசப்தத்தைப் பிளந்து சென்றது. பாதுஷா தன் முகத்தைக் கைகளால் மூடியபடியே பேகத்தின் உடல்மீது விழுந்தான்.

* * * *

பார்த்துக்கொண்டே இருக்கையில் ஆக்ரா நகரில் மும்தாஜ் பேகத்தின் சமாதியின்மீது ஓர் இந்திரஜாலம் தோன்றலாயிற்று. வெள்ளிய சலவைக்கல்லாலான நேர்த்தியான கட்டிடமொன்று எழும்பியது. லட்சக்கணக்கான சிற்பிகள் கட்டிடத்துக்காக வேலைசெய்தனர். விதம்விதமான மணிகளிழைக்கப்பட்ட உள் மண்டபங்கள். கணக்கற்ற ஸ்தூபிகள். கட்டிடத்தின் வாயிலில் பளிங்குத் தடாகமொன்று. கண்டோர் மனதையும் உள்ளத்தையும் ஒருங்கே கவர்ந்தது அவ்வழகிய கட்டிடம்.

கள்ளமறியாச் சின்னஞ்சிறு வயதில், பாலன் ரூப்சிங், ... ... மும்தாஜ், விளையாடுவதற்காகக் கட்டிக்கொடுத்த பொம்மை வீடு, பெரிய உருப்பெற்றுச் சலவைக் கல்லில் நிர்மாணிக்கப்பட்டது. ஷாஜஹான், தன் பேகத்துக்காகக் கட்டிய ஞாபகச் சின்னம் அதுவே. ... ... ... மும்தாஜ் மஹாலின் ஞாபகச் சின்னம் தாஜ்மஹால்.

# அயோடிசால் IODISAL

(ரத்த சுத்தி மருந்து)

இது தேகத்தில் உஷ்ணம் அதிகமாகி அதனுல் ஏற்படக்கூடிய வெட்டை, கிரந்தி, மொழி, முடக்கு, கண்டகூலைகள், வாதம், வாய்வு, மேக ரோகங்களேயும், தோலைப்பற்றிய துர்நீர் சம்பந்தமான படை, சொரி, சிரங்கு, தேக அரிப்பு முதலியவைகளேயும் குணப்படுத்தி, தேகத்திற்கு ஆராக்கியத்தையும் கொடுக்கும். ரத்தத்தைச் சுத்திசெய்து மலப்பிரவர்த்தியை ஒழுங்காக்கி இரத்த விருத்தியை உண்டாக்கும்.

**எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.**

* * * *

# சைபால்
## - CIBOL -

முகப் பரு, சேத்துப் புண், சொறி சிரங்கு, வேனல் கட்டி, தீப்பட்டபுண், முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து.

# பேபி-கிரைப்
## BABY - GRIPE

குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு, வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, அஜீரணம், மாந்தம், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுக்போக்கு முதலிய சகல வியாதிகளேயும் போக்கி நல்ல ஆரோக்கியத்தைத் தரும் சிறந்த திராவகம்.

தயாரிப்பவர்கள்

**தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை**

மதராஸ் சிடி, நெல்லூர், சீடட் & விசாகபட்டினம் ஜில்லாக்களுக்கு ஏஜண்டுகள்:

**ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ், கெமிஸ்ட்ஸ், பி. டி. மதராஸ்.**

குண்டூர், கிருஷ்ண, கோதாவரி ஜில்லா & நைஸாம் சமஸ்தான ஏஜண்டுகள்:

**சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா.**

மைசூர் சமஸ்தான ஏஜண்டுகள்:

**சேஷமஹால் பார்மஸி, பெங்களூர் சிடி.**

27 DEC 1945
MADR

# "ரத்ன மாலா"

எம். எஸ். கமலா

இரவு ஒன்பது மணியாகிவிட்டது. 'நிகல்ஸன்' தெருவிலிருக்கும் 'அனுராக வதி' என்ற கட்டிடத்தின்முன் ஷிவர்லெட் கார் ஒன்று வந்து நின்று ஹார்ன் அடித்தது. அதே சமயம் 'தர்வான்' கதவைத் திறந்து கொண்டு வெளியில் எட்டிப்பார்த்தான். காரிலிருந்து இறங்கிய காமினி "நிகில்பாபு! காலை ஆறுமணிக்கே தயாராகிவிடுகிறேன், வந்துவிடுங்கள். இன்று ஏனோ கொஞ்சம் கூட ஸ்பிரிட்டே இல்லை. குட் நைட்... ..." என்று காம்பௌண்டிற்குள் காலைவைத்தவள் திரும்பி ஒரு நிமிஷம் நின்று சொல்லிவிட்டு 'விர்' என்று நடந்தாள்.

"மாலா! அதை நினைத்துக்கொண்டே இரவு தூங்காமல் உடலைக் கெடுத்துக் கொள்ளாதே! நிச்சிந்தையாய்த் தூங்கு. இரண்டுநாள் ஓய்வு எடுத்துக்கொள். பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம்" என்று சொல்லிக்கொண்டே கார் கதவைத் தட்டென்று சாத்திக்கொண்டார். ட்ரைவர் காரை விர் என்று பறக்கவிட்டான். ரத்னமாலா நேராய்த் தன் அறைக்குச் சென்று உடைகளைக் கழற்றிவிட்டு, சாதாரணமாய் எப்பொழுதும் அவள் உடுக்கும் கறுப்புச் சேலையை உடுத்திக்கொண்டாள். மிகவும் அயர்வாயிருந்ததால் சயன அறைக்குச் சென்று படுத்தாள் கண்களை மூடியபடி. அவள் படுத்த சற்றுநேரத்திற்கெல்லாம் 'அம்மா!' என்றழைத்தபடி நாற்பது வயது நிரம்பிய ஒரு மாது தட்டில் சப்பாத்தியையும் சில கனி வகைகளையும் எடுத்துக்கொண்டு உள்ளே வந்தாள்.

"ஏனடி! பிரபுல்லா! எனக்கொன்றும் வேண்டாம். தொந்தரவு செய்யாமல் போ!" என்றாள் மாலா.

"அம்மா! கொஞ்சம் ஏதாகிலும் எடுத்துக் கொள்ளுங்கள், ஒன்றும் வேண்டாமென்றால் என்ன செய்வது?" என்று பிரகாசமாய் எரியும் விளக்கைப்போட்டு மாலாவின் முகத்தை உற்றுப் பார்த்தாள். மாலா ஒன்றும் பேசாமல் அவளையே சிரித்தபடி நோக்கினாள். அவள் சிரித்தாலும் அச்சிரிப்பில் அழுகைக் கிறல்தான் சுடர்விட்டுத் தென்பட்டது. "ஏன் அம்மா! முகம் ஒரு மாதிரியாயிருக்கிறது! தலையை வலிக்கிறதா? இன்று ரொம்ப கஷ்டமாயிருந்ததா?" என்று அவள் நெற்றியை அன்புடன் தொட்டுப் பார்த்தாள்.

"போடி! அசடே! எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை. நீ போய்ச் சாப்பிடு. இன்றைக்குக் கடிதங்கள் உண்டா?" என்றாள் இயற்கைச் சிரிப்புடன்.

"நாலு கடிதங்கள் வந்திருக்கின்றன. நிமாயிபாபு கொஞ்சநேரத்திற்குமுன் வந்தார். நீங்கள் வீட்டிலில்லை என்றேன், நாளைக்கு காத்தாலே ஆறுமணிக்கு வருவாராம். உங்களை எங்கும் போகாமல் இருக்கச் சொன்னார்" என்றதும் கட்டிலிலிருந்துவிசுக்கென்று எழுந்து, "எங்கே கடிதங்களைக் கொண்டு வா!" என்றாள் பரபரப்பாய்.

"கொண்டுவந்து கொடுக்கிறேன். இந்தப் பழங்களைமாத்திரம் எடுத்துக்கொண்டு கொஞ்சம் பாலைக்குடித்துவிடுங்கள்" என்று அன்பாய்க் கெஞ்சியபடி அவள் முகத்தைப் பார்த்தாள். 'மாலா'வின் மனம் நெகிழ்ந்து விட்டது.

"பிரபுல்லா! நீ என்னை அநியாயமாய் உன் அன்பில் கட்டிப்பந்தித்து விட்டாயாடி. எல்லாவற்றிலுமிருந்து விடுபட்ட நான் உன் அன்பிலிருந்து விடுபட முடியல்லேடி" என்று சொல்லியபடியே எழுந்து மேஜை முன் சென்றமர்ந்தாள்.

பிரபுல்லமுகி என்னும் அந்த மாது அவளிடம் ஏதோ கதைகளைப் பேசியபடியே நின்றிருந்தாள். மாலா தான் சாப்பிடவேண்டியதைச் சாப்பிட்டு முடித்தாள். பிரபுல்லமுகி அந்தப் பாத்திரங்களை எடுத்துக்கொண்டுபோய் வைத்துவிட்டு, மாலாவிடம் கடிதங்களைக்கொண்டுவந்து கொடுத்துச் சென்றாள்.

மாலா எடுத்துக் கட்டியிருந்த கூந்தலை அவிழ்த்துவிட்டு, கடிதங்களை ஒவ்வொன்றாய்ப்பிரித்துப்பார்த்தாள். இரண்டு கடிதங்களைப் பார்த்தாயிற்று. மூன்றாம் கடிதத்தைப் பிரித்தாள். அவளுக்கே திகைப்பேற்பட்டுவிட்டது. ஏன்? அதில் என்ன இருந்தது? இன்னும் படிக்கக்கூடவில்லை. அவள்

உடல் வியர்த்துவிட்டது. சிறிதுநேரம் கண்களை மூடிக்கொண்டாள். தன்னைத்தானே சமாளித்துக்கொண்டு மெள்ளக் கண்களைத் திறந்தாள். மேஜைமேல் கிடந்த அக்கடிதம் அவள் மனதைத் தகர்த்தது. கடிதத்தின் மேல் எழுதப்பட்டிருக்கும் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஈட்டியாய் அவள் ஹிருதயத்தைத் துளைக்கலாயின ஏககாலத்தில்.

கதை மன்னன் மனோஹர் புக்கர் வீதி
வனவிஹாரி மாதவவில்லா
கல்கத்தா.

ஸ்ரீமதி ரத்னமாலா அவர்களுக்கு,

அம்மணி! பிரணாம ஸஹஸ்ரங்கள். நான் வனவிஹாரியின் ஏகைக புத்திரன் ஸுமந்த குமார். தாயே! தாங்கள் நடிக்கும் எல்லாப் படங்களையும் நான் தவறாமல் பார்க்கிறேன். நேற்று 'அன்னையின் அனுதாபம்' என்னும் உங்கள் படத்தைப் பார்த்ததும் என் மனம் விண்டுவிட்டது.

மாதா! நான் மாதாவின் அன்பை அறியாத மைந்தன். ஆனால் குழந்தையின்மேல் தன் அன்பு முழுவதையும் செலுத்தும் அன்னை, குழந்தையைவிட்டு வேறாகிவிட்டால் அவள் உள்ளம் எப்பாடுபடும் என்பதைத் தங்கள் படத்தின் மூலம் அறிந்தேன். இதற்குமுன் வெளிவந்த 'நிர்தயை' என்ற படம் கசடனான கணவனின் கண்மூடித்தனத்தை நன்கறிவித்தது. நம் சமூகத்தில் சரிந்து விழுந்த பெண்களின் துரதிருஷ்டத்தை எடுத்துக்காட்டும் அப்படமே என்னைத் தங்கள் பால் இழுத்தது.

தாயே! உயிர்களின் உற்பத்திஸ்தானமாகிய பெண்ணினங்களை நீசமாய்ப்பார்ப்பதால்தான் நம் இந்தியநாடு இவ்வளவு சீர்கேடான நிலையிலிருக்கிறது. அன்புள்ள அம்மணீ! பெண்களைப் பூஜிப்பதைவிட்டு நிந்தித்து நாசம்செய்த நம் சமூகத்தவர்க்குத் தாங்கள் நடிக்கும் படங்கள் எல்லாம் நல்லபாடம் கற்பித்திருக்கின்றன. என் தந்தை படங்கள் என்றாலே பர்லாங்கு தூரத்திற்கப்பால்ஓடி ஒளிந்துக்கொள்பவர். 'தங்கள்' அன்னையின் அனுதாபத்தைக் கண்


# இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸெண்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்

செலுத்தப்பட்ட மூலதனம் ... ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு ... ரூ. 5,22,000
மொத்த ஆஸ்தி ... ரூ. 4 கோடிவரை

ஸிட்டி ஆபீஸ்கள்:

சைனாபஜார், மாம்பலம், மயிலாப்பூர், பேரியமேட், திருவல்லிக்கேணி

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்ஸா | காரைக்குடி | சானூர் | திருச்சிராப்பள்ளி |
| அனகாபள்ளி | கும்பகோணம் | சீயாழி | திருவாரூர் |
| சிதம்பரம் | மதுரை | தஞ்சாவூர் | வேலூர் |
| சித்தூர் (கொச்சி) | மருடேரு | தாடபள்ளிக்கூடம் | விழுப்புரம் |
| கடலூர் N. T. | பாலக்காடு | திலாறு R. S. | விருதுநகர் |
| காஞ்சீவரம் | பார்வதிபுரம் | திருநெல்வேலி டவுன் | விஜயநகரம் |
| ஈரோடு | புதுக்கோட்டை | திருநெல்வேலி ஜங்ஷன் | |

பிக்ஸட் டிபாஸிட்கள்:- ஒரு வருஷம் நூற்றுக்கு வட்டி ... ... $2\frac{3}{4}$% விதம்
இரண்டு ,, ,, ... ... 3% ,,
சேவிங்ஸ் பாங்கு கணக்கு வாரம் ரூ. 250/ வாங்கக்கூடியது ரூ. 5000/ வரை வட்டிவிதம் $2\frac{1}{2}$% ,,
கரண்ட் கணக்கு .. .. .. .. $\frac{1}{4}$% ,,

தங்கம், வெள்ளிபார், கவர்மெண்ட் பாண்டு, கடன் பத்திரங்கள், ஷேர்கள், வியாபாரச் சரக்குகள் முதலியவைகளின் பேரில் கடன்கள் கொடுக்கப்படும்.

எல்லாவிதமான பாங்கு நடவடிக்கைகளும் நடத்தப்படும்

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

டபின் வேறு மனிதராகிவிட்டார். ரகசியமாய் இரவு நேரங்களில் கண்ணீர் வடிக்கிறார். நான் கண்களை மூடிப் படுத்துக் கொண்டிருந்தால் 'ஸுமந்த்! உன்னை அன்னையின் அரவணைப்பிலிருந்து அகற்றிய பாபம் என் ஹிருதயத்தைச் சிதைக்கிறதடா!' என்று கண்ணீர் வடிக்கிறார். பதினைந்து வருஷங்களாய் மறந்த மனைவியை நிமிஷத்திற்கு நிமிஷம் நினைந்து உருகுகிறார். 'நொந்த மனம்' என்ற படத்தைக்கண்டே நொந்த அவருள்ளம் 'அன்னையின் அனுதாப'த்தில் புடம்போட்டுப் பரிசுத்தமாகி விட்டதுபோல் தோன்றுகிறது.

அம்மணி! தயவுசெய்து தங்களின் இயற்கையான புகைப் படத்தை அனுப்பித் தரும்படி வேண்டுகிறேன். உங்களைப் படங்களில் பார்க்கும்போதே 'அம்மா!' என்றழைக்க மனம் துடிக்கிறது.

இப்படிக்குத் தங்கள்
ஸ்வப்ன மைந்தன்
ஸுமந்த குமார்
வைசாக சுத்த பௌர்ணமி"

என்றிருந்த கடிதத்தை ஒருமுறை படித்தாள். இரண்டுமுறை படித்தாள், மூன்றுமுறை படித்தாள். மணி பதினொரு முறை டாண்-டாண் என்று அடித்துவிட்டு நின்றது. அதே சமயம் டெலிபோன் அலறியது. பிரபுல்லா உள்ளேவந்து எட்டிப் பார்த்தாள், சிலையைப்போல் அமர்ந்திருந்த மாலாவை. ரிஸீவரைக் கையிலெடுத்தாள்.

"ஹல்லோ! தூங்குகிறாளா? அப்படியானால் தொந்தரவு செய்யவேண்டாம், காலை ஆறுமணிக்கு நான் வரவில்லை, நன்றாய் ஓய்வு எடுத்துக்கொள்ளட்டும் ... நிகில்பாபு நாளை மாலைதான் வரமுடியும் என்றார் என்று சொல்லிவிடுங்கள்" என்று யாரோ பேசியதைக் கேட்டுவிட்டு ரிஸீவரைக் கீழே வைத்தாள் பிரபுல்லா. மாலா அவளையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள், பைத்தியக்காரியைப்போல்.

"நாளை காலை நிகில்பாபு வரவில்லையாம். நீங்கள் கவலையற்றுத் தூங்குங்கள்" என்றாள் அன்பாய் பிரபுல்லா. அதற்கும் மாலா பதில் சொல்லாமல் மேஜைமேல் வைத்திருக்கும் வெள்ளி ஸ்டேண்டில் இருக்கும் புகைப்படத்தை உற்று நோக்கினாள். அவள் புத்தி அவள் நிலையிலில்லை என்பதை அறிந்துகொண்ட பிரபுல்லா மெல்ல அவ்விடத்தைவிட்டு அகன்றாள்.

— 2 —

மாலா மெல்ல அந்த ஸ்டேண்டிலிருந்த படத்தைக் கையிலெடுத்தாள். அவள் கை நடுங்கியது. கண்ணீர் மறைத்தது. அடர்ந்து சுருண்டு மோதிரங்களைப்போல் சுருள் சுருளாய் இருக்கும் கிராப் தலை. கருத்தை அள்ளிக்கொண்டோடும் கவர்ச்சியான கண்கள், உறுதியை எடுத்துச் சொல்லும் தடித்த உதடுகள். அதில் ஒரு அழுத்தலான கம்பீரம். விரிந்த ஞானத்தை எடுத்துக்காட்டும் அகன்ற நெற்றி. துல்லியமான கதர் ஜிப்பா தரித்திருக்கும் அந்த இருபத்தைந்து வயது வாலிபனையே உற்றுப் பார்த்தாள். அவள் உள்ளம் விண்டுவிடும்போலாகிவிட்டது. மெள்ள பெருமூச்சுவிட்டாள். அவள் மார்பு உயர்ந்து தாழ்ந்தது. மேஜைக்கு எதிரில் நிற்கும் நிலைக்கண்ணாடியைப் பார்த்தாள். அதில் பழைய கால நினைவுகளெல்லாம் ஆடத் தொடங்கிவிட்டன. சடாரென்று எழுந்து இருப்புப் பெட்டியைத் திறந்தாள். அதிலிருந்து ஒரு தந்தப் பெட்டியை எடுத்தாள். அதற்குள் ஒரு அழகிய குழந்தையை ஏந்தி நிற்கும் தாயின் புகைப்படம். அதை எடுத்து வந்து முன் அமர்ந்திருந்த இடத்திலேயே அமர்ந்தாள்.

அவள் கண்முன் என்ன தென்பட்டதோ அறியோம். அறுந்த முத்துச்சரம்போல் அவள் கண்களிலிருந்து முத்துமுத்தாய்க்கன்னங்களின் வழியாய் நீர்வடிந்தது; பழைய நினைவுகளும் சேர்ந்து வடிந்தது அதில். "என்னைத் தொந்தரவு செய்யாதே ஸுனந்தா சற்று தூர விலகிப்போ!" என்றான் கழுத்தைக்கட்டிக்கொண்டு நிற்கும் காதலியிடம் கணவன்.

"பின்னே ஏன் நீங்கள்........." என்றாள் உள்ளத்துடிப்புடன் அவன் முகத்தருகில் குனிந்து.

அவன் தன் சீற்றத்தை அடக்கிக்கொண்டு "இப்படி நீ எனக்கு இடைஞ்சலாய் இருப்பாயென்று அப்பொழுதே தெரியாததால்......" என்றான் நகைத்தபடி காகிதத்தில் ஏதோ வெகு சுவாரஸ்யமாய் எழுதியபடியே!

"அதோ பாருங்கள் வானமுகட்டிலிருந்த சந்திரன்கூட நடு ஆகாயத்தில் வந்து நகைக்கிறான். நீங்கள் தினம் செய்வதைப்போல் நான் படுத்த பிறகு உட்கார்ந்து எழுதக்கூடாதா? இன்றுதான் ஸுமந்தகுமார்கூட சீக்கிரமே தூங்கிவிட்டான்......" என்றாள்.

அவள் கண்கள் காதலில் மின்னிக்கொண்டிருந்தன.

"ஆனால் ஸுமந்துக்குப் பதில் நான்...... விளையாட்டுப் பொம்மையாய்......கட்டிலில் ......உன்னுடன்...... அருகில் படுத்து விளையாடவேண்டுமா?" என்றான் நிதானமாய் அவள் முகத்தை ஏறெடுத்துப் பார்த்து. அவள் முகம் வெட்கத்தால் சிவந்து வேதனையால் வெளுத்தது. சட்டென்று தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு அவன் கழுத்தை வளைத்திருந்த கரங்களை உதறிக்கொண்டு அப்பால் சென்றாள். அவனுக்குச் சோர்ந்து செல்லும் சுனந்தாவைப் பார்த்ததும் மனம் சுரீர் என்று சுட்டது.

"சுனந்! இங்கே வா!" என்றான் அதி அன்பாய். அவள் அப்படியே நின்று நீர் நிரம்பிய கண்களை மெள்ளத் தயங்கியபடியே இவன்பால் திருப்பினாள். அவன் மேஜையிலிருந்த 'போனை' எடுத்துப் பேசத் தொடங்கிவிட்டான்.

"தாராநாத்! உடனே புறப்பட்டுவந்து சுநந்தாவை எங்காவது நல்ல படத்திற்கு அழைத்துச் செல்." பதில் கிடைத்தது போலும். முகத்தில் முறுவல் ஓட "சுனந்! என்னை இன்று தொந்தரவு செய்யாதே! இந்த நாவலின் கடைசி அத்தியாயம் இன்று எழுதிக்கொண்டிருக்கிறேன். என் புத்தியை முழுவதும் வடித்துச் சொல்லழகால் நிரம்பிய ரத்தின கவசம் திட்டப் போகிறேன். எனக்குப் பெரும் புகழும் வந்தால் உன் முகம் எவ்வளவு நன்றாய் விகஸிக்கும்" என்று சிறிதே கண்களைச் சிமிட்டி "சொல் உனக்கு சந்தோஷமில்லையா? உன்னை நான் ஏமாற்றவில்லை. தாராநாதனை வரச்சொல்லியிருக்கிறேன், சீக்கிரம் தயார் செய்துகொள், படத்திற்குச் செல்வாயாம்..." என்றான்.

கண்ணீர்த் தேக்கத்திற்குள் மின்னுமவள் கண்மணிகள் கோபத்தில் சிவந்து சீறின. "என்ன? நான் உங்களை...... உங்கள்... அரு... உங்கள் பி... எதிர்பார்த்தால்... தாராநாதை அழைத்தீர்களா? நான் எதிரிலிருந்தால்கூட உங்களுக்கு எழுத ஓடாதோ?" என்றாள் சினம்கொண்ட வேங்கையைப் போல்.

அவன் தன் பலவீனத்தை உணர்ந்தவனாய், அதை மறைக்கவும் சக்தியற்றவனாய், "இல்லை சுனந்! நீயுந்தான் ஆறுமாதமாய் 'ஸுமந்தை' எடுத்துவந்ததிலிருந்து என்... விரும்புகிறாய், நான் என்ன செய்வது. என் காதல்... என் அன்பு... என் உயிர்... இவைகளையெல்லாம் இந்த 'ராக ரத்னமாலா' விடம் சமாதி செய்துவிட்டேன். 'ரத்ன மாலா'..." என்னும்போதே தெருவில் கார் வந்து நின்று ஹாரன் அடித்தது. "அதோ தாராநாத் வந்துவிட்டான், புறப்படு" என்றான் அன்பாய்.

"நான் போகவில்லை" என்றாள் சீறிக்கொண்டே. அதே சமயம் தாராநாத் உள்ளே வந்தான். காலில் நிகு நிகு என்று மின்னும் 'Flex' Shoe. காலைக்கண்களுக்கு இன்னும் கவர்ச்சியைத்தரவோ என்னும்படி அழகிய க்ருக்ஸ் கண்ணாடி. அக்கண்ணாடிக்குள் குறும்புத்தனத்துடன் கூத்தாடும் அவன் கண்களோ காரிகைகளைக் கட்டியிழுக்கப் போதுமானது. இடது முன்கையில் மடித்த கோட்டு தொங்குகிறது, வலக்கரத்தில் 'மப்ளர்'. இத்தனையுடன் கம்பீரமாய் நகைத்துக்கொண்டே "விஹாரி! எங்கே, சகோதரி சுனந்தா ரெடியா?" என்றான்.

"இதோ புறப்பட்டுவிட்டாள்..." என்று "சுனந்! நீயும் மழைக்கோட் எடுத்துக்கொள். மப்ளரையும் எடுத்துக்கொள் 'பாப்' (பனி) அதிகமாய்ப் பெய்கிறது. ஸுமந்துக்கு நன்றாய்ப் போர்த்திவிட்டுப்போ! நிமாயி வந்ததும் பாலைக் கொடுக்கச் செய்கிறேன்" என்று மனைவியிருக்கும் அறைக்குச் சென்றான்.

அங்கு எதிரிலிருந்த கண்ணாடியில் தன் அழகைப் பார்த்துப் பெருமிதப்பட்டுக்கொண்டிருந்த தாராநாத் காதில் "என்னை ஏன் நீங்கள் இப்படித் துன்புறுத்துகிறீர்கள்? நான் உங்களிடம் இம்மாதிரி... அன்பையா... ...எதிர்பார்த்தேன்?" என்னும் சோகக் குரல் வெகு இளகிக் கேட்டது. தாராநாத்நினைத்தான், சோகத்திலும் இளகி உருகும் குரல் எவ்வளவு இனிமையாய்க் கேட்கிறது?

"சுனந்! நான் உன்னைச் சந்தோஷமாய் வைக்கத்தான் பிரயாசைப்படுகிறேன். ஆனால் என் கலைப்பித்து...கடமையின் மூறை இவ்விரண்டும் என்னைப்பின் இழுக்கின்றன. அவைகளைத் திரும்பிப் பாராமல் உன்னைப் பார்த்தால் உன் நிஷ்களங்கமான அழகிய முகம் என்னை எல்லாவற்றையும் மறக்கச் செய்து உன்பால் இழுக்கிறது. அதற்காகவே மாயை உருக்கொண்ட உன்னை மறக்கத்தான்......மறந்திருக்கத்தான் தாராநாதனுடன் அனுப்புகிறேன்.........." என்று அவள் கன்னங்களை வருடினான். அவள்

கண்களிலிருந்து பலபலவென்று நீர் வடிந்தது. விஹாரியின் மனம் உருகிவிட்டது.

"இம்மாதிரி சங்கடம் ஏற்படுமென்று அப்பொழுதே தெரிந்திருந்தால் இம்மாதிரி கஷ்டத்திற்காளாகியிருக்கமாட்டேன். என் அன்பே! சுனந்தா! என் புகழ்உன் புகழ்அல்லவா? நாளை சுனந்தாவின் கணவன் உலகப் பிரசித்திப்பெற்ற நாவலாசிரியன் என்று சொல்வதைக் கேட்டால் உன் முகம் எவ்வளவுபெருமிதத்துடன் பூக்கும்.'' என்று அவள்கன்னங்களை அழுத்தினான். அவன் கைபட்டதைகூடப் பொறுக்காது அவள் சிவப்பான ரோஜாகன்னங்கள் இன்னும் ரத்தச் சிவப்பாய்ச் சிவந்தன.. அவள் மௌனமாய் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன. அவன் அவள் கையில் ஷாலை எடுத்துக்கொடுத்து'' நீ போய்வா! 'பும்பயிகி பேட்டி' என்ற படம் வெகு அழகாய் இருக்கிறதாம். கணவனிடம் அன்புள்ள காரிகைகள் கணவன் மனம் நோகாமல் இருக்க......நடக்க வேண்டுமென்பதை மறந்தாயா?'' என்றான் அன்பாய்.அவள் மறுபேச்சுப் பேசாமல் கால்கள் பின் இழுக்க, மனம் மண்டியிட்டு மறுக்க, கணவன் கனிவாய் காரில் ஏற்றவே இயந்திரப்பொம்மையைப்போல் ஏறி அமர்ந்தாள். தாராநாத் தன் அழகைத்தானே ஒருமுறை பார்த்துக்கொண்டு காரை ஸ்டார்ட் செய்தான். காரும் அழகிய காரிகை ஏறியதாலோ, அல்லது அந்த இரவில் அழகானவர்களை ஏற்றிச் செல்லத் தான் உபயோகமானதாலோ என்னவோ ஒருகுலுக்குக்குலுக்கிக்கொண்டு பெருமையுடன் ஓடத்தொடங்கியது.

— 3 —

'வனவிஹாரி' எம். ஏ. பட்டதாரி. நல்ல கட்டழகன். பரம்பரைச்செல்வந்தன். உயர்தரப் படிப்பிற்காக மேல்நாடு செல்வதற்கு முன் ஸுனந்தாவை மணந்தான். ஸுனந்தா ஒன்பதுமாத கர்ப்பிணி. அவனுக்கு மேல்நாடு செல்லப் பாஸ்போர்ட் வந்துவிட்டது. ஸுனந்தாவுக்கு இச்சமயம் தன் கணவன் மேல்நாடுசெல்ல இஷ்டமில்லை. பைத்தியம் பிடித்தவள் போல் ஏதேதோ யோசனை செய்யத் தலைப்பட்டாள், மறுநாளே அவள் சித்தம் சாந்திபெற வெளிவந்தவன்போல் 'ஸுமந்த்குமார்' பிறந்தான். வனவிஹாரி தன் மைந்தனைப் பார்த்துவிட்டு மேல்நாடு சென்றான்.

ஒன்று, இரண்டு, மூன்று வருடங்கள் ஓடி மறைந்தன. தன் மனைவியின் உள்ளச் சாந்திக்கவே வனவிஹாரி மேல்நாட்டிலிருந்த

பிராஞ்சு:
பெரிய தெரு,
கும்பகோணம்.

படியே கீழ்நாட்டுச் சஞ்சிகைகளுக்குக்கதைகளையும், கட்டுரைகளையும் எழுதிவந்தான். அவள் அதைப்பார்த்துப் பெருமைகொண்டு தன் அபிப்பிராயத்தை நன்கு விமர்சித்து எழுதி, அவனுக்கு மேலும்மேலும் ஊக்கமளித்து வந்தாள். அவன் தன் காதலியின் கனிந்த ஊக்க மொழிகளினால் நாளுக்குநாள் இலக்கியத்துறையில் வெகுவாய் முன்னேற்றமடைந்து விட்டான். மேல்நாடுகளிலிருந்து மூன்று வருடத்திற்கப்பால் வந்த 'வனவிஹாரி' வெறும் பாரிஸ்டராய் வராமல் இலக்கிய அரசனாய் வந்திறங்கினான். எங்கே கண்டாலும் உபசரணைகள், விருந்துகள். இப்படிச்சில மாதங்கள் கடந்தன. கணவனின் வருகைக்காகக் காத்திருந்த பெண்ணுள்ளம்......பெண்மை...... அவன் வந்ததும் வாகை சூடிக்கொண்டு பறக்கத் தலைப்பட்டது. அவனோவெனில் காதலியின் ஏக்கத்தைக் காணவில்லை. கலாதேவியின் நைந்த உருவைக்கண்டான். கலையன்னையைக் கருத்துடன் அலங்கரிக்கத் தலைப்பட்டான். மேல் நாட்டிலிருந்தபோதே அவன் எழுதத் தலைப்பட்ட 'ராகரத்ன மாலா'வை இங்கு வந்ததும் முடிக்க மும்முரமானான். அவன் அகக்கண்ணில் அழகிய கலைக்கன்னி அவனை அணைக்கத்தொடங்கினாள். புறக்கண்களில் ஸுனந்தா நின்று அவனைப் பைத்தியக்காரனாக்கினாள். அவன் எழுதி முடிக்கவேண்டிய 'ராகரத்னமாலா'வுக்காகவே ஸுனந்தாவை வெளியிலனுப்ப தீர்மானித்தான். ஆனால் அவள் அவனிடம் எதிர்பார்த்தது அதுவா? அவளுக்குக் கார் சவாரியும் பிடிக்கவில்லை. 'பும்பயிகி' பேட்டியும் பிடிக்கவில்லை. விஹாரி அனுப்பினதற்காக விதியே என்று அவன் பின் சென்றாள். அவள் வீட்டுக்கு வரும்போதும் அவன் எழுத்துலகில்தான் மூழ்கிக் கிடந்தான். பூட்ஸ்கால் 'டக் டக்'கென்று ஓசைப்பட அவன் முன்வந்து நின்றான் தாராநாத். கலங்கிய கண்களுடன் அவள் "நாங்கள் வந்துவிட்டோம்" என்றாள். கையில் பிடித்த பேனாவைக்கீழே வைக்காமல் "தாரா! நான் இந்த நவீனத்தை முடிக்கும்வரையில் தினமும் சற்று வந்து ஸுனந்தாவை வெளியில் அழைத்துச் செல்வாயா?" என்றான். தாராநாதன் தலையசைத்துச் சென்றான்.

மாதம் ஒன்று ஓடியது. சிறுகச்சிறுகத் தாராநாத்தின் நன்னடத்தையில் தன்னையே மறந்து அவன் வருகைக்காக ஆவலுடன் காத்திருப்பாள். முதல்முதல் அவனுடன் செல்ல வேதனைகொண்ட அவள் உள்ளம் இன்று அவன் வருகை சற்றுத் தாமதமானால் சகியாது வேதனைகொள்ளும். விதவிதமாய் உடைகள் உடுப்பாள். விந்தையாய் அலங்கரித்துக்கொள்வாள். நன்கு சமத்காரமாய் பேசுவாள். இண்டர்வரை படித்திருக்கிறாள். ஸுனந்தாவின் அழகு எப்பேர்ப்பட்டவரையும் சற்றே மலைக்கச் செய்யும்.

தாராநாத், விஹாரியின் அத்தைபிள்ளை. நன்கு கற்றறிந்தவன். மணமாகாத வாலிபன். பணமிருந்தும் அவன் இஷ்டப்பட்ட பெண் கிடைக்காததால் மணம் செய்து கொள்ளவில்லை. சுகுணனான தாராநாதன் ஸுனந்தாவை வெளியில் அழைத்துச் செல்லவும், அவளுடன் தன் பொழுதைக் கழிக்கவும் மிகமிக விரும்பினான். அவனுக்கு ஸுனந்தாவைவிட ஸுமந்தின்மேல்தான் அதிக ஆசை. சில சமயங்களில் குழந்தை ஸுமந்தையும் அழைத்துக்கொண்டுதான் வெளியில் செல்வான். விஹாரியின் வேலை ஒருவித இடைஞ்சலுமில்லாமல் நடந்தது.

அன்று ஸுமந்த்குமார் தாதி நிமாயியிடம் விளையாடிக்கொண்டிருந்தான். ஸுனந்தா வெகு அழகுபெறத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். பட்டுப் பூச்சியைப் போல் அவள் வீட்டில் இப்புறமும அப்புறமும் ஆனந்தமாய்ச் சுற்றிக்கொண்டிருந்தாள். அவளையும் அறியாது அவள் வாய் அவ்வப்பொழுது,

*"மறைகிறதே! யௌவன சந்திரன்*
*மகிழ்வாய்ப் போற்றும் மங்கையரை*
*மாயமாய் மறைத்துக் கணகளைக்கட்டியே!*
(ம)

என்ற பாட்டு அதி அற்புதமாய் வெளிவந்து கொண்டிருந்தது. விஹாரிக்கும் அன்றைய அவள் சிருங்காரமும், பாட்டும் மகிழ்வையூட்டின. மனம் தளர்ந்தது. ஆனாலும் தன்னைத்தான் சமாளித்துக்கொண்டு, 'இன்று இரவு முடிந்துவிடும். நாளையிலிருந்து நானும் ஸுனந்தாவும் இணைபிரியாமல் வாழ்க்கைப் படகைச் செலுத்துவோம்' என்று தன்னுள் சொல்லிக் கொண்டான். அதே சமயம் தாராநாதனின் கார் தெருவில் ஹாரன் அடிப்பது கேட்டது. அவள் ஆனந்தமாய்க் குதித்துக் கொண்டுவந்து "கார் வந்துவிட்டது நான் வரட்டுமா?" என்று சொல்லிக்கொண்டே நடந்தாள். அவள் பின்புறமே எழுந்து சென்ற விஹாரி அவள் கார் ஏறியதும், "தாரா! நாளையிலிருந்து உனக்கிந்தச் சிரமத்தை அளிக்கமாட்டேன். இன்றுடன் என் வேலை முடிந்துவிடும்" என்றான் நன்றியறிதலுடன், விஹாரியின் இவ்

வார்த்தை தாராநாதனைக் கலகலக்கச் செய்தது. காரை ஓட்டினால் கைகள் அசையவில்லை. உடனே ஸுனந்த் "நீங்கள் பின்புறம் அமருங்கள்; நான் காரை ஓட்டுகிறேன்" என்று முன்புறம் வந்தாள்.

கார் கனவேகமாய்ப் பல பெரிய தெருக்களில் ஓடி, கங்கைக்கரையில்போய்நின்றது. அவள் காரைவிட்டிறங்கி, கங்கையருகில் போய் நின்றாள். அவனும் அவள் பின்புறமே நடந்தான். கரையைச் சேர்ந்தாற்போல் நின்றிருந்த படகில் அவள் ஏறினாள். அவனும் ஏறினான். இன்று படகை ஓட்டும் துடுப்புக்களை அவள் எடுத்துக்கொண்டாள். அவன் காணாததைக் கண்டவன்போல் விழித்தகண் விழித்தபடி படகில் அமர்ந்திருந்தான். சிறிய தென்றல் அவள் முகத்தைத் தழுவி முத்தமிட்டுக் கங்கையையும் தழுவியது. அவள் பின்புறக் கூந்தல் முறுவலித்துக்கொண்டே அவள் முகத்தை வருடியது. அதைப் பார்த்தோ என்னவோ சேலைத்தலைப்பும் சடசடவென்று அடித்துக்கொண்டது. அவள் லாகவமாய் நீரைப் பிளக்கக் கோல்களை வீசினாள். செவ்வானத்தின் சிவப்பு முழுதும் அவள் கன்னங்களில் பொலிந்ததோ என்னும்படி அவள் கன்னங்கள் சிரமத்தால் சிவந்தன. தாராநாதனின் மனம் கட்டில் நிற்கவில்லை. அன்பு வெறியோ, காமத்தீயோ நாமறியோம். அப்படியே அவள் இடையைக் கட்டினான். அவள் தியை மிதித்தவள்போல் 'ஐய்யோ' என்றலறினாள். இருப்பதோ நீரின்மேல் படகில். அவன் கைகளைத் தளரவிட்டு, 'சகோதரி!' என்றான் கனிவாய்.

"அதமனே!" என்று கையிலிருந்த துடுப்பால் அவன் தலையில் 'படீர் படீரெ'ன்று இரண்டு போட்டாள். அவன் சாய்ந்தான். உள்ளம் படபடக்க, உடல் ஒடுங்க, பர பர வென்று படகை நடத்தினாள். படகை நிறுத்தும்போது விஹாரி கண்களில் கனல் வீச நின்றிருந்தான். அவள் பிரமை பிடித்தவள்போல் தரையிலிறங்கினாள். படகில் பிணத்திற்கொப்பாய்த் தாராநாதன், தரையில் பிரமை பிடித்தவள்போல் நிற்கும் ஸுனந்தா-இவர்களைப் பார்த்துக்கொண்டு நிற்கும் விஹாரிக்கு ஒன்றும் தோன்றவில்லை. சிடுசிடுத்த முகத்துடன் சென்றான்.

படகுக்காரனின் சகாயத்தால் ஸுனந்தா தாராநாதனைக் காரில் ஏற்றி வைத்தியசாலையில் சேர்த்துவிட்டுச் சென்றாள். அவள் மனம் அவளை இடித்து ஏசிக்கொண்டிருந்தது. விஹாரியின் மனம் விறகுவைத்து எரிவதைப்போலிருந்தது.

— 4 —

தாராநாதனை வைத்தியசாலையில் சேர்த்து நாட்கள் மூன்றாகிவிட்டன. அவ்வப்பொழுது ஸுனந்தை சென்று பார்த்து வருவாள். அன்று பகல் பன்னிரண்டுமணி இருக்கும். தன் அறையில் அமர்ந்து ஸுனந்தா ஸுமந்தகுமாரை அலங்கரித்துக்கொண்டிருந்தாள். ஆஸ்பத்திரி ஆள் ஒருவன் வந்து தெருவில் நின்று ஸைக்கிள் மணியைக் கண கண வென்றடித்தான். நிமாயி போய் அவன் அளித்த கடிதத்தை வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தாள். அதைப் பிரித்துப் பார்த்தாள் ஸுனந்தா.

"தாராநாதனின் உயிர் துடித்துக்கொண்டிருக்கிறது. பிழைப்பது கஷ்டம். உடனே வந்து பார்க்கவும்.

டாக்டர் நிர்மல் பிரகாஷ்"

ஸுனந்தை சிறிது நேரம் யோசனை செய்தாள். வீட்டில் விஹாரியில்லை. அவள் மனம் சொல்லியது. 'உயிர் போகும் ஒரு ஜீவனை பார்ப்பதால் ஒன்றும் தவறில்லை. ஜீவன் என்றும் புனிதமானது. நல்லது கெட்டது எல்லாம் உடலைப்பொறுத்தது. கர்மாகர்மங்கள் உடலைப் பாதிக்கிறதே ஒழிய ஆத்மாவை (ஜீவனை)ப் பாதிக்கிறதில்லை. ஆகையால் உடம்பைவிட்டுச் செல்லும் ஆத்மாவைப் பார்த்துவிட்டுவா! அவன் செல்லும்போது நல்ல உணர்வுடன் செல்லட்டும்' என்று.

அவள் நிமாயியை அழைத்து, குழந்தையை அவளிடமளித்துவிட்டு, காரை எடுத்துக் கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றாள். ஸ்பெஷல் வார்டில் தாராநாதன் அமைதியாய்ப் படுத்திருந்தான். நர்ஸ் தலைப் பக்கம் நின்றிருந்தாள். ஸுனந்தை அவனருகிலமர்ந்து வீசிக்கொண்டிருந்தாள். தாராநாதன் மெள்ள மேல்மூச்சுவிட்டபடி "சகோதரீ!" என்றான். அச்சமயம் மற்றோர் உருவம் இவன் அறைக்குள் நுழையவந்தது அப்படியே வாயிலருகில் நின்றுவிட்டது.

"ஸுனந்தா! சிவனே என்றிருந்த என்னை அழைத்து விஹாரி உன்னைத் தினமும் வெளியில் அழைத்துச்செல்லச் சொன்னான். வயதும் இளமை, ருதுவும் வசந்தம். எங்கும் உன் பெண்மையை அறிந்தேன். மனமிகுந்த மலரிலிருக்கும் மதுவையறிந்த வண்டு அதைப் பருக முன்வந்தது. அது மலரின் தவறா? மதுவின் தவறா? வண்டின் தவறா? எதன் தவறாயினும் சரி, ஸுனந்தா! உன்னை விரும்பினேன், ஆனால் இந்த ஜன்மத்திலல்ல

உங்கள் சௌந்தர்யத்தைக்
காப்பாற்றிக் கொள்ளுங்கள்
KANTI
ஸ்வஸ்திக் தயாரிப்பு
காந்தி
சோப்
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ், லிமிடெட், பம்பாய். 15.

படகை நீ செலுத்தும்போதுதான் அந்தப் பாப எண்ணம் தோன்றியது. அதற்குச் சரியாய்க் காற்று. படகு சற்றே ஒருபுறம் சரிந்தது. சட்டென்று உன்னைப் பாரம் குறைந்த பக்கம் இழுக்க உன் இடையைக் கட்டினேன். உன் கையாலேயே அடிபட்டேன். நீ கிட்டாத உலகில் இருந்து ஏங்குவதைவிட மறு பிறவியில் உன்னை எதிர் நோக்குவது உத்தமம்தான். என்னை அதிக நாள் ஏக்கமுறச் செய்யாமல் உன் பொற் கரங்களாலேயே வழிகாட்டினாயே!'' என்று நற்று ஆச்வாஸப்படுத்திக் கொண்டான். நர்ஸ் ஏதோ மருந்தை எடுத்துவர வெளியில் வந்தாள்.. அங்குவந்து நின்ற உருவம் மறைந்தது.

தாராநாதன் மறுபடியும் சொல்லத் தொடங்கினான். "என் சொத்து சுதந்திரம் முழுவதும் என் தெய்வத்திற்கு எழுதி வைத்துவிட்டேன். ஸுனந்தா! இந்தஜன்மத்தில் நீ அவன் மனைவிதான். உன்னைக் களங்கம் செய்யமாட்டேன். ஆனால் என் மானஸதேவிதான் நீ. நான் வருகிறேன்'' என்னும்போதே மூச்சு நின்றுவிட்டது.

அவள் கைக்குட்டையை வாயில் அடக்கிக்கொண்டு பரபரவென்று வெளியில் வந்தாள். வீட்டிற்குச் சென்று அவன் தூய அன்பையும் நேர்மையையும் நினைத்தவாறு கண்ணீர் வடித்தாள். ஒருபுறம் அவன் மரணத்திற்கும் தான்தான் காரணமானது அவளுக்கு மிகவும் வேதனையை அளித்தது.

எதிர்பாராமல் இடி இடித்ததைப்போல் கர்ஜித்துக்கொண்டே அறைக்குள் நுழைந்தான் விஹாரி.

"நட, வீட்டைவிட்டு. பிணமே! இனி அரை நிமிஷம் இவ்வீட்டிலிருக்க உனக்கு இடமில்லை, பதிதை'' என்றான்.

அவள் அவன் காலில் விழுந்து "அப்படிச் சொல்லாதீர்கள், நான் களங்கமுற்றவளல்ல'' என்று கதறினாள்.

அவன் கேட்கவில்லை. "முன்பு நீ இங்கிருந்து போ!'' என்று காலருகில் விழுந்தவளை உதறித் தள்ளினான். அவள் கண்களில் ரத்தம் வடிந்தது. குரல் இடிந்தது, குற்றமற்ற கண்களை அகலத்திறந்தாள். "அன்று போக மறுத்த என்னை நீரே அவருடன் அனுப்பினீர். இன்று அவர் மரித்தார். என் தூய்மையை எடுத்துச் சொல்பவர் இல்லை. விரட்டுகிறீர். நீரே என்னைப் பதிதையாக நினைத்துத் துரத்துகிறீர். உண்மை உங்களுக்கு வெளியாகும்போது என் உள்ளம் எப்படித்துடித்ததோ அதுவும் வெளியாகும்'' என்று கூவியபடியே ஓடிவந்த ஸுமந்தகுமாரை எடுத்துக்கொண்டாள்.

"அவன் என் குழந்தை. விடு கீழே! அவனைத் தொடவும் உனக்கு அர்ஹதையில்லை.'' என்று "நிமாயி! சோடா பாபுவைக் கொஞ்சம் வெளியில் எடுத்துக்கொண்டு போ!'' என்று கூவினான்.

அவள், குழந்தையைக் கீழே இறக்கினாள். தன் மேலிருந்த ஆபரணங்களை யெல்லாம் கழற்றி மேஜைமேல் வைத்தாள். அவனாலேயே அதை நின்று பார்க்கமுடியவில்லை. தன் அறைக்குச் சென்றுவிட்டான். திரும்பிப் பார்த்தாள். அவன் நின்றவிடம் சூனியமாயிருந்தது. அவள் உள்ளம் சூனியமாயில்லை. பீரோவைத் திறந்தாள். இரண்டு உரையிட்ட கவர்களை எடுத்துக்கொண்டு பரபரவென்று வெளியில் நடந்தாள்.

—5—

பேசும் படங்கள் வந்த சில நாட்களுக்கெல்லாம் 'சுயோக்' ஸ்டுடியோக்காரர்கள் நல்ல படங்களைப்பிடித்துத் திரையிட்டனர். நான்கைந்து வருடங்களாய் அதன் பங்குதாரியாகிய 'ரத்னமாலா' சிலபடங்களைத்தன் சொந்தச் செலவில் எடுத்ததுமன்றி அதில் அவளே நடிக்கவும் செய்தாள். அவள் நடிப்பின் திறமையால் எடுக்கும் சமூகப் படங்கள் ஜனங்களை ஆகர்ஷித்தன. படித்தவர்கள் என்று பறைசாற்றிக்கொண்டு, சீர்திருத்தங்களென்று பத்திரிகைகளில் பத்திபத்தியாய் எழுதிக் குவிக்கும் பெரிய மனிதர்களிடையே இருக்கும் அற்பத்தனத்தையும், பலஹீனத்தையும் நன்கு படம் பிடித்து வெளியிட்டாள். அப்படி அவளால் வெளியிடப்பட்ட படங்களைப்பார்த்து, அதன்பால் தன் இளம் உள்ளத்தைப் பறிகொடுத்த ஸுமந்தகுமார் மேற்கண்டபடி அவளுக்குக் கடிதம் எழுதினான். அதில் அவன் தந்தையின் உள்ளப்போக்கையும் எழுதினான்.

ரத்னமாலா கண்கள் சுழன்றன. மார்பு படீர் படீர் என்று அடித்துக்கொண்டது. இரண்டு படங்களையும் எடுத்து முத்தமீந்தாள். தன் குறிப்புப் புஸ்தகத்தை எடுத்தாள். ஒரு கையில் புகைப்படங்கள்' சேரில் சாய்ந்தாள். அவள் தலை கனத்தது. 'தடார்' என்ற சப்தம். கடியாரத்தில் மணி ஐந்து 'டாண் டாண்' என்று அடித்தது' பிரபுல்லா எழுந்து ஓடிவந்தாள். அவள் வருவதற்கு முன்பே 'மாலா'வின் ஜீவப் பறவை அவள் உடல் கூண்டைவிட்டுப் பிரிந்தது.

தபால்காரனின் வருகைக்காக 'மாதவ வில்லா'வில் காத்திருந்த 'கதையரசன் வன விஹாரிக்கு' லாகூர் பாரிஸ்டர் பவ நாராயணஸிங்கிடமிருந்து ஒரு ரிஜிஸ்டர் கடிதம் வந்தது. அதில்,

"ஸ்ரீமதி ஸுநந்தாவிஹாரி என்னும் நடிகராணி ரத்னமாலா தன் சொத்து முழுவதையும் அவர் மகனான ஸுமந்த்குமாருக்கு எழுதிவைத்திருக்கிறார். அவர் சகோதரர் தாராநாதர் அவருக்களித்த ஒரு லக்ஷத்து ஐம்பதினாயிரம் ரூபாய்களை அவர் பெயராலேயே எளியவர்களுக்குத் தர்ம வைத்தியம் செய்ய வைத்தியசாலை கட்ட அளித்துவிட்டார். 'சுயோக்' ஸ்டுடியோவின் பங்குக்கும், அவர் சேர்த்துவைத்திருக்கும் சுமார் ஆறு லக்ஷ ரூபாய்களுக்கும் பாரிஸ்டர் வன விஹாரி, டைரெக்டர் நிகில்பாபு, ஸுமந்தின் கார்டியன்கள். இரண்டு நாட்களுக்கு முன் ஹிருதயத்துடிப்பால் இறந்த அவர் சென்ற வருடம் நோய்வாய்ப்பட்டிருந்த போதே இம்மாதிரி எழுதிவிட்டார். உடனே வந்து ஸுமந்தின் சொத்து சுதந்திரங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

பாரிஸ்டர் பவநாராயணன்"
11—11—19......

இதைப் படித்த விஹாரியின் மனதில் சோகத்துடன் அன்று அலறியபடியே சொன்ன வாக்கியங்கள் நினைவுக்குவந்தன. "நீங்களே என்னைப் பதிதையாக நினைத்துத் துரத்துகிறீர்கள். உண்மை உங்களுக்கு வெளியாகும்போது என் உள்ளம் எப்படித் துடித்ததோ அதுவும் வெளியாகும்".

அதே சமயம் "அப்பா! பிரபல சினிமா நடிக ரத்னமாலா ஹிருதயப் துடிப்பால் இறந்துவிட்டார்களாம். அதற்காக நாங்கள் எல்லாம் இன்று கலாசாலைக்குப் போகாமல் எங்கள் அனுதாபத்தை வெளியிட்டோம்" என்றான்.

விஹாரியின் காதுகளில் ஸுமந்த் சொல்வது ஒன்றும் கேட்கவில்லை. அவன் மனம் மாலாவை நாடி ஓடியது.

J. & J. DeChane - India -

ஆல்போஸாங்: இது A. B. C. D. வைடமின்கள் அடங்கிய ஒரு சிறந்த (Tonic) உணவு. சரீரத்திற்கு நல்ல போஷணை அளித்து இரத்தவிருத்தி செய்கிறது.

பொதுஜன வைத்ய உதவி (Peoples' Medical Service)
இது 8 மருந்துகள் அடங்கிய ஒளஷத நிலயம் தினசரி ஏற்படும் சகல நோய்களையும் நிவர்த்தி செய்யும்.

ஸ்போலாக்ஸ்: வழக்கமான மலபந்தத்தையும் மூல வியாதியையும் நிவர்த்தி செய்கிறது.

ரிபாண்டோ: காயங்கள், புண்கள், சொறிசிரங்கு, கடி முதலிய வியாதிகளைப் போக்கும் களிம்பு.

Head Office:- J. & J. டிசேன், ரெஸிடென்ஸி ரோட், ஹைதராபாத், (DN.)

தஞ்சை தென் ஆர்காடு டிப்போ:—
பெரியதெரு, காந்திபார்க் வடக்கு, கும்பகோணம் (S.I.Ry.)

# ஏழையின் உள்ளம்

குஸுமா

அன்று காலை ஊரில் என்றுமில்லாத ஓர் குதூகலம். தீபாவளியன்று காலை என்றால் கேட்கவேண்டுமா? ஆனால் ஒரே ஒரு வீடு மாத்திரம் பயங்கர அமைதியுடன் விளங்கியது. சங்கரய்யர் மனைவி இறந்து இன்னும் மூன்று மாதங்கள்கூட ஆகவில்லை. அவள் விட்டுச் சென்றது ஐந்து வயது நிரம்பிய ஒரு பெண் குழந்தை. மனைவியை இழந்த சங்கரய்யர் கன்னத்தில் இரு கைகளையும் வைத்துக்கொண்டு, வீட்டு வாசற்படியில் உட்கார்ந்துகொண்டிருந்தார். பக்கத்திலிருந்த குழந்தை கமலியை அடிக்கடி பார்ப்பதும் கண்ணைத் துடைத்துக்கொள்ளுவதுமாய்க் காலத்தைப் போக்கினார். இடை இடையே "அந்தப் பாவிதான் என்னைத் தனியாக விட்டுச் சென்றாளே, தெய்வமும் சோதனைபோல், என்னை உற்றார் உறவினர் ஒருவரும் இல்லாமல் வைத்துவிட்டதே" என்று ஏங்கி ஒரு பெருமூச்சு விடுவார். இருந்தாலும் தாய், தந்தை, தமக்கை ஒருவரும் இல்லாதது ஒரு காலத்தில் நல்லதாகவே இருந்தது. "இந்த எழவு மாமியார், நாத்தனார் பிடுங்கல் இல்லாத இடத்தில்தான் என் லக்ஷ்மியைக் கொடுக்கப்போகிறேன்" என்று ஒவ்வொரு வரனையும் தட்டிக் கழித்த காவேரி அம்மாளுக்கு, சங்கரையர் உற்ற மாப்பிள்ளையாகவே வாய்த்தார்.

"அப்பா! எல்லார் ஆத்திலும் சீனுவெடி சுடறாளே? எனக்கு மாத்திரம் கிடையாதாப்பா?"

இதற்கு, சங்கரையர் பதில் சொல்லு முன்னரே இன்னொரு கேள்வி.

"ஏம்ப்பா? அம்மா ஊருக்குப் போயிருக்கா, வந்துடுவான்னு சொன்னயே இன்னும் ஏம்ப்பா வரலை?"

"உனக்கும் நிறையப் பட்டாசு வாங்கித் தரச் சொல்லுகிறேன்" என்று முதல் கேள்விக்கு மாத்திரம் பதிலை சொல்லிவிட்டு எழுந்தார்.

"கேசவா! ஏய் கேசவா!" என்று உரக்கக் கூப்பிட்டார்.

"வந்துட்டேன் சாமி!"

"ஏண்டா! ராத்திரி வீட்டுக்குப் போனாயா? உன் பெண்சாதிக்கு என்னடா வாங்கிக்கொண்டு போனே?"

"எதுக்கு சாமி வீட்டுக்கு? அந்த மகாலச்சுமி போனப்பறம் எங்களுக்குத் தீவளி ஏதுங்க? தெய்வத்துக்குத்தான் கண் இல்லீங்களே" என்று மேலே பேசமாட்டாமல் விம்மினான் வேலைக்காரன்.

"அடபோடா மடையா! எங்களுக்குத்தான் அதிர்ஷ்டமில்லை என்றால் அதுக்காக நீயேண்டா உயிரை விடறே? நீபோ. உனக்குச் செலவுக்குப் பணம் கொடுத்தேனே, அதுக்கு ஏதானும் வாங்கிக்கொண்டு போ. அப்புறம் உன் பெண்சாதி உன்னைத் திட்டப் போறா?"

"ஆமாங்க திட்டக்கூட இல்லீங்க, அடிக்கக்கூட வந்துட்டா. அந்தப் பணத்தை எடுத்துக்கிட்டு அவகிட்ட 'உனக்கு என்ன வேணும்னு' கேட்டேனுங்க. அவ்வளவுதானுங்க காளியாட்டமா கோவம் வந்துடுச்சி அவளுக்கு. 'என் அம்மாவை முழுங்கிட்டு, தீவளி கொண்டாட வந்துட்டயா? உனக்கு வெக்கமில்லே! போ. எல்லா பணத்துக்கும் பெரிசா ஒரு சரிகை வேட்டி எடுத்துக் கட்டிக்க' என்று சொல்லிக்கொண்டே அடிக்க வந்துட்டாங்க. என்ன இருந்தாலும் அம்மா மாதிரி ஆவுங்களா?"

துக்கம் ஒரு பக்கம், இந்த ஏழைகள் தன் பேரில் வைத்திருக்கும் விசுவாசத்தை நினைத்துப் பெருமை ஒரு பக்கம். சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு "இந்தா, கமலி அழுகிறாள்; எங்கேயானும் எடுத்துக்கொண்டுபோ. ஏதாவது வேணும்னா வாங்கிக்கொடு" என்று சொல்லி ஐந்து ரூபாய் பணத்தையும் அவனிடம் கொடுத்தார்.

அவர் சொல்லி முடியுமுன்னரே குழந்தையை வாரி எடுத்துக்கொண்டு வெளியேறினான்.

வழிநெடுக, புது ஆடைகள் அணிந்த குழந்தைகளும், பெரியவர்களும் போய்வந்துகொண்டிருந்தனர். சில வீடுகளில் வெளிச்சம் வந்த பிறகுகூட குழந்தைகள் மத்தாப்புகளைக் கொளுத்திக்கொண்டிருந்தனர். இதையெல்லாம் பார்த்துக்கொண்டே சென்ற

கமலிக்கு ஒரே ஒரு கேள்விதான் மனதை உறுத்தியது ''நான் மட்டும் ஏன் இவைகளுக்கு விலக்கு? எனக்கு ஏன் பாவாடை, பட்டாசு கிடையாது?'' என்று அவள் மனம் புழுங்கியது.

இப்படிச் சென்று கொண்டிருக்கும் பொழுது, சிறிது தூரத்தில் ஒரு பெண்மணி, தன் குழந்தையின் கையைக் கோத்துக்கொண்டு வந்து கொண்டிருந்தாள். ஏனோ இவர்கள் இருவர் மனமும் அந்தக் காட்சியைக் கண்டதும் படபடவென்றது? அந்தப்பெண்மணி சங்கரையர் மனைவியைப் போலவே இருந்தாள். ஒரே உயரம், ஒரே முகச்சாடை, அதே கருவிழிகள். புத்தி மயக்கம் அடைந்தவனாய்க் கேசவன் அப்படியே நின்றுவிட்டான். கமலியோ அம்மா வந்துட்டா! அம்மாவந்துட்டா! என்றுகுதிக்க ஆரம்பித்துவிட்டாள். இதற்குள் அந்தப் பெண்ணும் குழந்தையும் அருகே வந்துவிடவே, 'அம்மா' என்று ஆவேசத்துடன் கத்திக்கொண்டே கமலி அந்தப் பெண்மணியின் கால்களைக் கட்டிக்கொண்டாள்.

சொல்லமுடியாத ஒரு குரூரப் பார்வையுடன் அந்தப் பெண்மணி, ''இதென்ன எழவு, பைத்தியமோ என்னவோ? ஏண்டா நாசமாப்போகிறவனே! நீயும் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிக்கறயே?'' என்ற கூரிய சொல்லம்புகளால் கேசவனைத் திட்டிவிட்டு, கமலியையும் தன் கால்களினின்றும் உதறி எறிந்துவிட்டு, விடுவிடு வென்று மேலே நடந்தாள்.

''யாரம்மா அது?'' என்றது அந்தக் குழந்தை.

''யாரோ பைத்தியம்போல் இருக்கு''

''இந்தா, சும்மா மேலேமேலே பேசாதே. மரியாதை கெட்டுடும். யாரைப் பைத்தியம்னுசொல்றே? தாயில்லாக் குழந்தை ஆசையுடன் வந்துச்சுன்னு அதை உதறி எறியறயே நீதான் ராக்ஷஸி'' என்று கேசவன் படபடத்தான்.

கீழே கிடந்த கமலியைத் தூக்கித் தோள் மேல் போட்டுக்கொண்டான். ஆனால் 'கமலியம்மா' என்று அவன் கூப்பிட்ட குரலுக்குப் பதில் கிடைக்காமல் போகவே, குழந்தையை மறுபடியும் இறக்கி மூஞ்சியைப் பார்த்தான். குழந்தைக்குப் பிரக்ஞை இல்லை. திகில்கொண்டவனாய், அருகே இருந்த குளத்திலிருந்து சிறிது ஜலத்தை எடுத்துக்கொண்டுவந்து மூஞ்சியில் தெளித்தான். கமலி கண்களைத் திறந்தாள்.

''கேசா! அம்மா ஏன் என்னைப்புடுச்சி தள்ளினா? அது யாருடா அவளோடு போச்சே அந்தக் குழந்தை? என்னைக் கண்டா பிடிக்காமேதான் வேறே குழந்தையை அழைச்சுண்டு போறா?''

''அது அம்மா இல்லை. கமலியம்மா! அது யாரோ ஒரு ராக்ஷஸி. அம்மா ஊரிலேயிருந்து வந்துடுவாங்க; வா! போகலாம்''.

''ஏண்டா! எங்கிட்டகூட பொய் சொல்றே. இப்ப எங்கிட்ட கோவிச்சுண்டது அம்மாதான்.'' என்று சாதித்தது அந்த அனாதைக் குழந்தை.

பதில் சொல்லாமலே மறுபடியும் அவளைத் தூக்கித்தோள்மேல் போட்டுக்கொண்டான். தற்செயலாய் இருவர் கன்னமும் ஒன்றையொன்று தொட்டன. திக்கென்றது கேசவன் நெஞ்சம். கமலிக்குக் கடுமையான சுரம். கிடுகிடு வென்று வீடு நோக்கி நடந்தான்.

போகும் வழி எல்லாம் சுரத்தினால் பேத்த ஆரம்பித்துவிட்டாள். திடீரென்று ''கேசா'' என்றாள்.

''ஏனம்மா?''

''அப்பாக்குத் தெரியாமே'' நான் இனிமே சமத்தாய் இருக்கேன்னு அம்மாகிட்ட சொல்லி அழைச்சுண்டு வறயா?''

கமலி அந்த ராக்ஷஸியைத் தீர்மானமாய்த் தன் தாயாகக்கொண்டுவிட்டாள் என்று கேசவனுக்குப் புரிந்துவிட்டது.

''என்னடா! மாட்டயா?'' என்றாள் மறுபடியும்.

''ஆகட்டும். அம்மா!''

வீடுவந்து சேர்ந்தான். சங்கரையர் வீட்டு வாசலில் காத்துக்கொண்டிருந்தார்.

''ஏண்டா! அதுக்குள்ளே வந்துட்டே? அழாமல் இருந்தாளா?''

''குழந்தைக்கு வாடைக்காத்து ஒத்துக்கிலேயுங்க. காயலாட்டமா இருந்துச்சு; வீட்டுக்கு கொணாந்துட்டேனுங்க'' என்றான் கேசவன்.

''காயலா?'' என்று பரபரத்தவராய், குழந்தையை வாரி அணைத்துக்கொண்டார். கடும் ஜ்வரம் அடிப்பதைக் கண்டார். பயத்தினால் நெற்றி வியர்த்தது.

''தெய்வமே! உனக்கு இந்தக் குழந்தை இருப்பதும் பொறுக்கவில்லையா?'' என்று வாய்விட்டுப் புலம்பினார்.

ஹா, எத்தனை குளிர்ச்சி!
என்ன சுகம்!
EAU DE COLOGNE
கோடை வெப்பத்தில் மலையூற்றுக்களின் குளிர்நீர் போன்று
— ஆசுவாசமளிப்பது —
வீட்டில் எப்பொழுதும் ஒரு பாட்டில் கையோடு காவலாய் வைத்திருங்கள்
டாடாஸ்
ஓ டி கொலோன
டாம்கோ விற்பனை இலாகா
19, வாணியர் வீதி, த. பெ. நெ. 31
சென்னை
A TATA PRODUCT
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

"என்னா சாமி! பேத்தறிங்க. உங்களுக்கும் உடம்பு சரியில்லையா?" என்ற கேசவனின் குரல்தான் அவரை எழுப்பியது. தான் வாய் தவறிச் சொல்லியதை மறுபடியும் நினைத்துப் பார்க்கவே உடம்பு நடுக்க மெடுத்தது. வேலைக்காரனா யிருந்தென்ன? அவனுக்கு இருக்கும் தைரியமும், மூளையும் கூட தனக்கு இல்லையே என்று வருந்தினார்.

குழந்தையை உள்ளே எடுத்துச்சென்று கட்டிலில் போட்டுவிட்டு, போர்வையால் மூடி, தானும் அருகே அமர்ந்தார்.

"ஏண்டா? போறபோதே உடம்பு சுட்டதோ?"

"இல்லீங்க, அந்த ராக்ஷஸி வந்தா. குழந்தைக்கும் சுரம் வந்திடுச்சுங்க. அவ காளியாயிலே போக. அவளை மாத்திரம் நான் இன்னொருதரம் பார்த்தா...... அம்மா முக லட்சணம் இருந்தும், அவங்க குணத்திலே ஆயிரத்திலே ஒரு பங்குகூட இல்லையே" என்று சொல்லிக்கொண்டே போனான்.

ஒன்றுமே புரியவில்லை சங்கரையருக்கு.

"யாரையடா வையறே? என்னத்தினாலே சுரம் வந்துதுங்கறே?"

ஆதியோடந்தமாய் ஒன்று விடாமல் உரைத்தான் கேசவன்.

"அது யாருடா அந்த அம்மா?" என்றார்.

"அவ எங்கே கிடந்தா நமக்கென்னங்க?" என்று அவன் அலுத்துக்கொண்டான்.

இரவு நெருங்க நெருங்க ஜ்வரமும் அதிகமாகியது. ஒரே பிதற்றல் சங்கரையரின் காதுகளைத் துளைக்க ஆரம்பித்தது.

"அம்மா! அம்மா! நான் சமத்தா இருக்கேன் வந்துடு" என்று ஒரு சமயம்.

"அம்மா! என்னை நன்னா அடிச்சுடு வேணும்னா, வரமாட்டியா? உன்னைக் கட்டிண்டு தூங்கணும்போல ஆசையாயிருக்குடி" என்று கெஞ்சிக்கொண்டே கைகளை நீட்டினாள். எதிரே இருந்த சங்கரையரை இறுகக் கட்டிக்கொண்டாள். அவள் மனக்கண்முன்னிருந்தது சிரித்த முகத்துடன் நிற்கும் அவள் தாய்.

இன்னும் சிறிது நேரத்தில் தணிந்தகுரலில் "ஏம்மா உன்னை அப்பா அடிச்சாளா? பின்னே ஏன் வரமாட்டேங்கிறே?" என்று அந்தக் கனவுத்தாயை வினவினாள்.

சங்கரையருக்கு இதைக் கேட்டதும் மன நிம்மதியேஇல்லை. நான் எப்பொழுதாவது அவளை அடித்திருக்கிறேனா? குழந்தை வாக்கு தெய்வவாக்கு என்பார்கள்?" சந்தேகம் திரவேயில்லை. இரவு பூராவும் விம்மி விம்மி அழுதார்.

இரண்டு நாட்களாயின. ஜ்வரம் தணிந்த பாடில்லை. மூன்றாம் நாள் காலை. ஏதோ ஒரு சூன்யமான உணர்ச்சி சங்கரையரைத் தாக்க ஆரம்பித்தது. இனி பிழைப்பது கஷ்டம். பிழைத்தால், உங்கள் அதிர்ஷ்டம் தான் என்று டாக்டர் சொல்லிவிட்டார். தன் அதிர்ஷ்டம் எத்தகையது என்று அறிந்த சங்கரையருக்கு, குழந்தை பிழைக்காது என்றுதான் தோன்றியது.

கமலியின் அருகில் சென்றார். குழந்தையின் முகம் அன்று காலை என்றுமில்லாப்பிரகாசத்துடன் விளங்கியது. உள்ளத்தை ஊடுருவிப் பார்ப்பதுபோல் தேஜோமயமாக அவள் கண்கள் பிரகாசித்தன. சற்று பிரமிப்புடனே, "குழந்தைக்கு உடம்பு தேவலைபோலிருக்கிறதே. என் அதிர்ஷ்டமும் லக்ஷ்மி செத்தபிறகு மாறிவிட்டது போல் இருக்கிறது" என்று ஒரு வறட்டுச் சிரிப்புச் சிரித்தார்.

"அப்பா!" என்றாள்.

"ஏண்டி! என் கண்ணே!" என்றார்.

"அம்மாவை சட்டுனு கேசாவை விட்டு அழைச்சுண்டு வரச்சொல்றயா?"

"அம்மா இன்னிக்கு வரேன்னு கடுதாசு போட்டிருக்கா. தூங்கு."

"போப்பா! என்னை ஏமாத்திண்டேயிருக்கே. அப்புறம் நானும் அம்மாவோடு போயிடுவேன்" என்றது அந்த அனாதை. அவள் சொல்லி முடியவில்லை. அதற்குள் சங்கரையருக்குப் பைத்தியம் பிடித்து விடும்போல் இருந்தது.

"எந்த ஊர்? எந்த ஊர்" என்று ஆயிரம் கேள்விகள் அவரை ஓரே சமயத்தில் தாக்கின.

"சரி சரி அழைச்சுண்டு வரச்சொல்றேன் தூங்கு." என்று சீக்கிரமாய்ப் பதிலளித்து விட்டு வெளியே சென்றார்.

"கேசவா! கேசவா!"

"ஏஞ்சாமி!"

"அப்பா! உனக்குக் குழந்தை பிழைக்கணும்னு இருந்தால் உடனே எப்படியாவது அந்த அம்மாவை அழைச்சுண்டு வரணும். போ உடனே"

"அந்த ராக்ஷஸி எங்கே இருக்காளோ. தெரியாதுங்களே."

"அதெல்லாம் எனக்கு ஒண்ணும் தெரியாது."

"சரிங்க" என்று சொல்லிவிட்டு வெளியேறினன்.

ஒவ்வொரு வீடாய்ச் சென்று "அம்மா!" என்று கூப்பிடுவான். அம்மாவும் வருவாள். ஏமாற்றமடைந்தவனய் "ஒண்ணுமில்லீங்க, ஐயா கேணி முழுவனும்னு சொன்னங்க, அதான் வந்தேன்"

"கேணியும் முழுவ் வாண்டாம்; ஒண்ணும் வாண்டாம். வெளியிலேபோ" அடுத்த வீடு.

"அம்மா!"

"அம்மா இல்லேடா. என்ன வேணும்?"

"கேணிமுழுவனும்னு சொன்னங்களே?"

"ஏண்டா ஏதானும் அடிச்சுக்கிண்டு போகலாம்னு வந்தயா? இந்த வீட்டுக்கு கிணறும் கிடையாது. எனக்கு கல்யாணமும் ஆகவில்லேயே"

இதுபோல நூறு வீடுகள் ஆய்விட்டன. இன்னும் அந்த 'ராக்ஷஸி'யைக் கண்டபாடில்லே. அவ்வளவு பெரிய ஊரில் எங்கு என்று சென்று கண்டுபிடிப்பான்?

கடைசியில் சோர்வடைந்தவனய், கால்கள் கடுக்க ஒரு வீட்டு வாசலில் உட்காந்தான். தெருக்கோடியில் இரு உருவங்கள் அவன் கண்களில் தென்பட்டன. எடுத்தான் ஓட்டம் அவைகளை நோக்கி.

அவள்தான் அது!

"அம்மா!" என்றன்.

"ஏண்டாப்பா? எங்கே வந்தே? அந்தப் பைத்தியம் ஒண்ணு உங்கூடவருமே அது எங்கே?" என்றள் ஏளனமாய்.

விஷயத்தைச் சொன்னன். "அம்மா நீங்க தயவுபண்ணி எங்கூட வரணும். குளந்தை உசிரை நீங்கதான் காப்பாத்தணும்"

"டாக்டரிடம் காண்பியப்பா. எனக்கு வைத்தியம் ஒண்ணும் தெரியாதே" என்று கேலி தொனிக்கும் குரலில் கேட்டாள்.

"அம்மா! உனக்கு புண்ணியம் உண்டு. தாயில்லாக் குழந்தை. கொஞ்சம் மனசு வை அம்மா!" என்று கெஞ்சினன்.

என்ன இருந்தாலும் ஸ்திரீயல்லவா? கொஞ்சம் மனது இரங்கிற்று. "ஒரு வேளை நிஜந்தானே என்னவோ? நம்பளாலே ஒரு குழந்தை பிழைக்கும்ன போகத்தான் போவோமே. அதுவும் தாயில்லாக் குழந்தை என்கிறன் பாவம். அன்னிக்கு அப்படி உதறி எறிஞ்சோமே" என்று அவள் மனம் கரைய ஆரம்பித்தது.

"சரி வீடு எங்கே இருக்கு"

தைரியமடைந்தவனய் அவன் "இதோத் தானம்மா இருக்கு. வாங்க போகலாம்" என்றன்.

"இரு இரு, போனப் போறது என்றல் ரொம்ப அதிகாரம் பண்றயே. வீட்டுக்குப் போய் வேறெ புடவை கட்டிண்டு மூஞ்சியை அலம்பிண்டு வறேன், வாசல்லே இரு." என்று சொல்லிவிட்டு அவள், அவன் பார்க்காத வீடு ஒன்றில் நுழைந்தாள். கால்மணி ஆயிற்று. அரைமணியாயிற்று. இன்னும் அவள் வெளியே வந்தபாடில்லே. கேசவனுக்கு ஒரு நிமிஷம் செல்லுவது ஒரு யுகமாயிருந்தது. பொறுத்துப் பார்த்தான். பிறகு "அம்மா நாழியாச்சுங்களே!" என்று கத்த ஆரம்பித்தான்.

வெளியே வந்தாள் அவள். கேசவன் ஸ்தம்பித்துவிட்டான். தன் எஜமானியம்மாளையே உரித்து வைத்தாற்போல் இருந்தாள் அவள். அந்தப் பார்வையில் அவன் கோபத்தையும் மறந்தான்.

இருவரும் கிடு கிடு வென்று நடக்க ஆரம்பித்தார்கள். வீடுவந்து சேர்ந்து வாசற்படியில் காலை வைத்தார்கள், உடனே சங்கரையரின் ஓலமிடும் குரல் அவர்கள் காதைப் பிய்த்தது.

கேசவன் வேரற்ற மரம்போல் விழுந்தான்; வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டான். அழுதான் புரண்டான். அந்த ஸ்திரீயோ அங்கேயே நின்றுவிட்டாள். "ஒருவேளை நான் வீட்டுக்குப் போகாமல் நேரே இங்கு வந்திருந்தால் குழந்தையைக் காப்பாற்றியிருக்கலாமோ என்னவோ?" என்று அவள் மனச்சாட்சி அவளை உறுத்தியது.

அவளைக்கண்ட கேசவன் துக்கம் தாங்க மாட்டாமல் "அடி ராக்ஷஸி; என் முன்னே நில்லாதே, தொலேஞ்சுபோயிடு. நீ என் குளந்தையைப் பார்த்தே, அதுக்குத் திராச் சுரம் வந்துது. என் வீட்டு வாசலிலே காலே வச்சே குளந்தையே போயிடுச்சு. இனிமே நீ போயிடு, அந்தக் கடவுளுக்குக் கண் இருந்துச்சின்ன, நீ பேசின பேச்சுக்கு. 'நீ செத்து உன் குளந்தையும் சந்தி சிரிக்கும் படியா செய்யணும் என்று மண்ணை வாரி இறைத்துச் சாபமிட்டான்.

அன்று இரவு பிள்ளையார்கோவிலில், ஒரு உருவம் மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தது.

"கடவுளே! ஏதோ தாங்காத துக்கத்திலே சாபம் இட்டுவிட்டேன் சாமி! ஒரு தாயில்லாக் குளந்தை கஷ்டப்பட்டது போதும். அந்தக்குளந்தைக்காகவாவது அந்த ராக்ஷஸி உசிரோடே இருக்கட்டும்" என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தது அவ் வுருவம்.

# கடிவாளம்

க. கணபதி

பொழுது விடிந்தால் கல்யாணம்.

மணப்பெண்ணும் அவள் தோழி ஸரளாவும் தனியாக ஓர் அறையில் உட்கார்ந்திருந்தனர். ஸரளாவின் கண்களில் லேசாக நீர் ததும்பியது. அவர்கள் வாழ்க்கைப் பாதையில் பிரியும் இடம் நெருங்கிவிட்டதல்லவா! ஸ்திரீகளுக்குக் கல்யாணம், மற்றெந்தச் சம்பவத்தையும் விட நட்பின் தன்மையை அடியோடு மாற்றிவிடுகிறது.

மணப்பெண் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். வாழ்க்கையில் அடியோடு மாறும் சம்பவத்தை எதிர்பார்த்து இருப்பவள் மனதில் என்னென்ன எண்ணங்கள் எழுந்தனவோ!

'உமா' என்றதும் நிமிர்ந்தாள்.

'இந்தக் கல்யாணத்தினால் உண்மையிலேயே நீ சந்தோஷமாக இருக்கலாம் என்று நினைக்கிறாயா?'

'பொழுது விடிந்தால் கல்யாணம்! இது என்னடி கேள்வி! உனக்குக் கல்யாணமானால் நீ சந்தோஷமாக இருக்கமாட்டாயா?' என்று சிரித்தாள்.

'அதற்குச் சொல்லவில்லை. எங்கம்மா சொல்கிறாள்: என்னதான் ஆண் பிள்ளைகளோடு பழகினாலும் அவர்களைக் கல்யாணம் செய்துகொள்ளும் வரையில் அவர்களை முழுதும் அறிந்துகொள்ளவே முடியாது—என்று.

'அதனால்தான் 'அவரை'க் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன், அவரை முழுதும் தெரிந்துகொள்ள'

அவள் பார்வை மேஜைமீதிருந்த ஒரு சின்ன போட்டோவிற்குத் தாவியது. நாளை காலை தானும் 'அவரும்'—கணவனும் மனைவியுமாக......அந்த எண்ணம் அவள் மனதில் ஒருவித பயங்கலந்த உள்ளக் கிளர்ச்சியை உண்டுபண்ணியது. படத்திலிருந்த கண்கள் அவளைப் பார்த்து நகைத்தன. அழகான கண்கள்; எந்த ஸ்திரியின் கவனத்தையும் கவரும் கண்கள்; எத்தனையோ கன்னியர் கருத்தைக் கவர்ந்துவிட்டு, பிறகு அங்கே கவலையை நிறைத்துவிட்டு வந்த கண்கள். அது சம்பந்தமான வார்த்தைகள் அவள் காதிலும் விழுந்தன. அவளுக்கும் தெரியும், அவன் 'ஒரு மாதிரி' என்று. எனினும் அவனிடம் பழகினதிலிருந்து தன் கணவனாகப் போகிறவனிடம் ஒரு ஸ்திரீ என்னென்ன விரும்புவாளோ அதையெல்லாம் அவனிடம் கண்டாள். 'காதல்' என்று நினைத்துக்கொண்டு சில 'தவறுதல்கள்' செய்திருக்கலாம். 'தவறுதல்' ஆண் பிள்ளைகளில் அநேகருக்குச் சகஜந்தானே! அவைகளுக்காக வருந்துவதாக அவளிடம் அநேக தடவை சொல்லியிருக்கிறான்.

ஸரளா: 'நீ அவரை மனப்பூர்வமாகக் காதலிக்கிறாய் என்பதை நான் அறியாமலில்லை. ஆனால் அவர் முன்பெல்லாம் 'மைனராக' இருந்தவர் என்பதை நினைத்தால் ............'' என்று இழுத்தாள்.

'கல்யாணத்தின் புதுமை மறைந்த பிறகு அவர் மறுபடியும்...........என்று பயப்படுகிறாயா? சூடுண்ட பூனை அடுப்பங்கரை சேருமா? அவர் சூடுபட்டவர் என்பது யாவருமறிந்தது. தவிர நான் அவரை மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன். திருமணம் நாளைக்கு. இந்நிலையில் இல்லாதவற்றை இருப்பதாகக் கற்பித்துக்கொண்டு நான் கலங்கப்போவதில்லை!

எதையோ நினைத்துக்கொண்டு ஸரளா பெருமூச்சு விட்டாள்.

உமா, ''நேற்றுகூட அம்மா சொன்னாள்—அம்மாவுக்குத் தான் ஒருத்திதான் இந்த உலகத்திலேயே கல்யாணமானவள் என்ற நினைப்பு—அம்மா சொன்னாள்,—புருஷனைத் தன்னிடமே வைத்துக்கொள்ள விரும்பும் ஸ்திரீ ''கடிவாளத்தைக்'' கையில் பிடித்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் ஓடிவிடுவான். தன் பார்வையிலேயே இருக்கும்படியாகக் கயிறும் குட்டையாக இருக்கவேண்டும்—என்று. நான் அப்பொழுது சிரிக்கவில்லை. அப்பாவை அம்மா அப்படித்தான் வைத்திருந்தாளா—என்ற நினைப்பு வந்ததும் எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. சரி—ஞாபகம் வைத்துக்கொள்ளுகிறேன் என்று சொன்னேன்...........'' என்றாள்.

ஸரளா ஒன்றும் சொல்லவில்லை.

''இவருக்குக் கடிவாளம் போட்டால் அதை இழுத்து இழுத்து அலுத்துப்போவார்-அல்

லது கயிறு அறுந்துபோகும்'' என்று உமா சிரித்தாள். ''நான் அவருக்கு நீண்ட கயிறு தான் கட்டப்போகிறேன்; வேண்டுமானால் என் எதிரிலிருந்து மறைந்து போகட்டும். இஷ்டம்போல் அலைந்துவிட்டுக் கடைசியில் என்னிடமே வந்துவிடுவார். ஆனால்கயிற்றை மட்டும் கையிலிருந்து விட்டுவிடமாட்டேன்''.

''கயிறு நீளமாக இருந்தால் மட்டும் அறுந்துபோகாதா என்ன? நான் கல்யாணம் செய்துகொள்வதாக இருந்தால் கடிவாளமே அவசியமில்லாத அளவிற்கு நம்பகமுள்ள ஒருவரையே மணந்துகொள்வேன். சரி, நேரமாகிவிட்டது. எப்படியிருந்தாலும் உன் மண வாழ்க்கை சந்தோஷமாகவே இருக்கவேண்டும்—என்பதே என் பிரார்த்தனை.''

* * *

ஒருமாத காலம் மிகவும் குதூகலமாகக் கழிந்தது. கடிவாளத்தைப்பற்றிய நினைவு கூட இல்லை அவளுக்கு. பிறகு...... ஒருநாள் மாலை வீட்டுக்காரியங்களைப் பார்த்துவிட்டு அலுத்து வந்தவள், வெளுத்து வந்த துணிகளை அடுக்க ஆரம்பித்தாள். துணிகள் மலை போலக் குவிந்துகிடந்தன. அறையில் நுழைந்தான்.

''நானும் இருக்கணுமா?''

திரும்பி, கணவன் முகத்தைப்பார்த்து, 'வேண்டாம்—ஏன்'?

'இல்லை......இப்படி.........கொஞ்சதூரம் சுற்றிவிட்டுவரலாம் என்று நினைத்தேன்'

அவளுக்கும் அலுப்பாகத்தானிருந்தது. தன்னையும் கூப்பிடுவான் தானும் போகலாம் என்றே நம்பினாள்.

'சீக்கிரம் வந்துவிடுகிறேன்' என்று சொல்லிக்கொண்டே நழுவிவிட்டான்.

அன்றிரவு சாப்பாடுகூட ஆறிவிட்டதே! இன்னும் காணோமே என்ற நினைவு வந்தபோதுதான்—கடிவாளத்தின் நினைவும் வந்தது.

11 மணிக்கு வந்தான். வரும்பொழுதே ரொம்பவும் வருத்தப்பட்டுக்கொண்டு—''நெடுநாளாகப் பார்க்காத நண்பர்களைப் பார்த்தேன். அவர்களுடன் கிளப்பிற்குப் போனேன். நேரம் போனதே தெரியாமல்.........''

அவளுக்குக் கோபம் வந்தது. கோபித்துக்கொள்ள மனமில்லை. 'இன்னொரு


## -எங்கள் சமீப வெளியீடுகள்-

1. கதைக்கோவை — 10-8-0
நான்காம் தொகுதி
75 எழுத்தாளர்களின் கதைகள் 75

2. உரிமையும் கடமையும் — 2-0-0
பத்து அரிய கட்டுரைகள்
M. ராதாகிருஷ்ண பிள்ளை
மாஜி மேயர்,
சென்னை கார்பொரேஷன்

3. தேவதாஸ் — 2-8-0
சரத்சந்திரர்

4. ஜான்ஸிராணி தேவி லக்ஷ்மிபாய் — 0-6-0
M. S. சுப்பிரமணிய ஐயர்

5. சக்திவேல் முதலிய கதைகள் — 2-0-0
அகிலன்

6. வாழ்க்கையே வாழ்க்கை — 2-0-0
21 வாழ்க்கைச் சித்திரங்கள்
S. V. V. எழுதியது

7. என் சரிதம்—சுருக்கம் — 3-8-0
(மஹாத்மா காந்தி)
மஹாதேவ தேசாய் எழுதியது
கா. ஸ்ரீ. ஸ்ரீ. மொழிபெயர்ப்பு

8. மீராபாய்—நாடகம் — 1-0-0
ஏ. கிருஷ்ணசாமி ஐயர்

9. கரட்டூர் ராமு — 2-0-0
பி. சீதாராமையா

10. விஜயா — விரைவில் வெளிவரும்
சரத்சந்திரர்

**அல்லயன்ஸ கம்பெனி**
**மயிலாப்பூர் - சென்னை**

*Cauveri—Dec. '45*

தடவை நேரங்கழித்து வந்தால் நானும் லேடீஸ் கிளப்பிற்கோ-நண்பர்கள் வீட்டிற்கோ போய்விட்டு நேரம் போனதே தெரியாமல்............'' என்றாள் சிரித்துக் கொண்டு.

அடுத்த மாதம் முழுதும் குறைகூறுவதற்கு ஒன்றுமே இல்லை. பிறகு இரண்டொரு தடவை; பிறகு வாரமொருமுறை; பிறகு......! பிறகு அதற்காகச் சால்ஜாப்பு சொல்லவேண்டிய அவசியங்கூட அவனுக்குத்தோன்றவில்லை. அவள் தனியாக உட்கார்ந்துகொண்டு அவனுக்கு அலுப்பு சலிப்பு ஏற்படாதா—மீண்டும் தன்னிடமே திரும்பிவிடமாட்டானா? என்று ஏங்காத நாள் இல்லை.

அவள் ஏக்கத்தை, ஒரு விதத்தில் தீர்க்க, ஒரு குழந்தை பிறந்தது. பெண் குழந்தை என்றதும் அவன் முகத்தைப்பார்க்கணுமே!

அவள் படுக்கையில் படுத்திருந்தாள், போய் குழந்தையைப் பார்த்தான். அவன் முகத்தைக் கவனித்தாள். "ஏன்! பெண் குழந்தை என்றால் கசக்கிறதோ?''

'கசக்கவுமில்லை, புளிக்கவுமில்லை! உன்னைப்போல்தானிருக்கிறாள் இந்தப் போக்கிரியும்! சீக்கிரம் உனக்குச் சுகமாகணும்—' என்று குனிந்து அவள் கன்னத்தை லேசாகத் தட்டினான், அவள் வெளுத்த முகமும் சற்று சிவந்தது, அவ்வளவுதான்! போய் விட்டான்......? கடிவாளம் அவள் கையில் தான் இருக்கிறது, அதை இழுத்துப்பிடிக்க மனமோ—மன வலுவோ அவளுக்கு இல்லை,

* * *

இருவர் இருந்த இடத்தில் மூன்றாவது நபர் வந்தால் சங்கடந்தானே! இப்பொழுது குழந்தையே வீட்டில் சர்வாதிகாரியாக இருப்பதாகவும் அதன் விருப்பத்திற்கிணங்க எல்லா விஷயத்திலும்தான் விட்டுக்கொடுக்கவேண்டியிருப்பதாகவும் அவனுடைய புகார். தாயின் உள்ளத்தில் படுமா இது! அவள் முழு நேரத்தையும், முழுக் கவனத்தையும், தன்னிஷ்டம்போல் கவர்ந்ததுபோக, அதில் ஒரு பாகமே தனக்குக் கிடைப்பதாக—இன்னொரு புகார். ஒரு பக்கம் புகார்கள் இருந்தாலும் அவன் வெளியில் போகிறதற்கும், தன்னிஷ்டம் போல் தங்கிவிட்டு வருவதற்கும் குழந்தையே ஒரு நல்ல 'சாக்காக' இருந்தது.

* * * *

ஒரு நாள் தன் பிறந்த வீட்டிற்குப் போகத் திட்டம் போட்டாள். "வேண்டுமானால் நீயும் குழந்தையும் போங்கள். என்னால் வர முடியாது''

அவளுக்கு அடங்கிக் கிடந்த ஆத்திரமெல்லாம் குமுறிக்கொண்டு வந்தது. தன்னை விட்டு அவன் எவ்வளவு தூரம் போய்விட்டான் என்பதை இப்போதுதான் உணர்ந்தாள்.

'வர வர என் விஷயம் உங்களுக்கு அலுத்து விட்டதா ?''

அவள் இதயத்தை அரித்துக்கொண்டிருக்கும் வேதனையைப்பற்றிப் பிரஸ்தாபித்தது இதுதான் முதல் தடவை.

அவன் அலக்ஷியமாகச் சிரித்துங்கொண்டு, "ஏன் உன்னுடன் ஊருக்கு வரவில்லை என்பதற்காகவா? அங்கே வந்தால் பொழுது போகாதே?''

பிறகு மௌனம்!

விவாஹ தினத்திற்கு முதல்தினம் இரவு சரளாவிடம் பேசிக்கொண்டிருந்தது அவள் நினைவிற்கு வந்தது. இப்பொழுதுங்கூட கடிவாளத்தை இழுத்துப் பிடிக்க இஷ்டமில்லை. இன்னும் கொஞ்சம் விட்டுப்பார்க்கலாம் என்பதே அவள் நினைவு.

அதோடு பிறந்தகம் போகும் திட்டமும் நின்றது. அவன்மட்டும் எங்கேயோ வெளியூருக்குப் போனான், ஆபீஸ் காரியமென்று. அன்றிரவே குழந்தைக்கு வியாதி வந்தது. தனியாகவே ஒரு வாரம் அவதிப்பட்டாள். கடைசியில் வியாதியே குழந்தையைக் கூட அழைத்துச் சென்றது. அவன் விலாசங் கூடத் தெரியாது, செய்தியை அறிவிக்க.

இரண்டுநாள் கழித்து வந்தான். அவனைப் பார்த்ததும் அவள் முகம் வெளுத்தது. கண்களில் நீர் வரவில்லை, வாயில் வார்த்தைகளும் வரவில்லை. பித்துப் பிடித்ததுபோல் நின்றாள். ஏதேதோ சொல்லித் தேற்றினான், அவன் வார்த்தைகள் அவள் செவியில் ஏறினால்தானே! குழந்தை இறந்த தினமே அவள் கையிலிருந்த கடிவாளம் கீழே விழுந்துவிட்டது. இனி குனிந்து அதை எடுப்பதென்றால்....................

குழந்தை இறந்த பிறகு மனைவியிடம் ஏற்பட்ட மாறுதலைக் கவனித்தான். ஸ்திரீகளே இப்படித்தான். சின்ன விஷயங்களைக் கூடப் பிரமாதப்படுத்துவார்கள், காலா காலத்தில்........என்று தன்னைத் திருப்தி செய்துகொண்டான், அவன் இஷ்டம்போல் போவதுமட்டும் நிற்கவில்லை, தற்போது

அவள் தனியாக இருப்பதே நல்லது என்றது அவன் சுயநலம். ஆகவே குழந்தை பிறந்தது முதல் ஆரம்பமான அவள் தனிமையும் இனிமையாக இருந்தது. இப்போது காலியாகக் கிடக்கும் தொட்டிலும் இதர சின்னஞ்சிறு வஸ்துக்களும் அதன் நிலையை ஆயிரமடங்கு வருவித்து வாட்டின அவளை.

மனக்குறையுள்ள ஸ்திரீ யாரிடமாவது அதைச் சொல்லித்தான் தன் பாரத்தைக் குறைத்துக்கொள்ளுகிறாள். நன்றாக எழுத வல்லவர்கள் தாமேஓர் உலகத்தைச் சிருஷ்டித்து, அதிலுள்ள ஆண் பெண்களின் வாயிலாகத் தமது உள்ளக்கொந்தளிப்பை உணர்ச்சிபொங்க வெளியிடுகிறார்கள். நெருங்கிய நண்பர்களின் ஆறுதல் வார்த்தைகளைவிட இது அதிக சாந்தியைத்தான் அளிக்கிறது.

இன்ப வழ்க்கைக்கு வழிகாட்டியாகத் தன் கையைப்பற்றிய கணவன் சுயநல இன்ப வேட்டையாட வெளியே ஏகியபின் காலியாகக் கிடக்கும் குழந்தைத் தொட்டியின் பக்கத்தில் உட்கார்ந்தபடி ஏதோ எழுத ஆரம்பித்தாள்.

சகிக்கமுடியாத துக்கத்தினால் பீடிக்கப்பட்டவர்கள்தான் உலகானுபவ உண்மைக் கருத்துக்களை உள்ளவாறு எழுதுகிறார்கள். அவளும் எழுதினாள், தன் புண்பட்ட இதயத்தின் இரத்தத்தாலே எழுதப்பட்டதால், அவள் முதல் வெளியீடே புத்தக உலகத்தை ஓர் ஆட்டம் ஆட்டிவிட்டது.

வாழ்க்கையில் காதலைத் தவிர வேறொன்றையும் அவள் விரும்பினதில்லை. புகழ் அவளைத்தேடி வந்தது. இனி, தனிமையும் அவளைத் துன்புறுத்தாது.

அவள்—அழகி, கவர்ச்சியான உருவமுள்ளவள், அன்பான சுபாவமுடையவள்—என்பதுதான் தன் மனைவியைப் பற்றி அவன் தெரிந்துகொண்டிருந்தது. படித்துப் பட்டமெடுத்தவள்தான் என்றாலும் புத்தகம் எழுதும் அளவிற்குப் புத்திசாலி என்று அவன் கனவுகூடக் கண்டதில்லை. உலகமே ஒன்று சேர்ந்து பாராட்டி, கௌரவப்படுத்தும் ஒருத்தியை, தான் மட்டும் லக்ஷ்யம் பண்ணாமல் உதாசீனமாக இருப்பது அவன் மனதில் உறுத்தியது. அவனும் மனிதன்தானே. ஒரு சமயம் இல்லாவிட்டால் ஒரு சமயம்—தன் கடமையினின்றும் மெதுவாக நழுவி வருவதை உணர்ந்தான். இந்த உணர்ச்சி அவனுடைய வெற்றிக்குப் பிறகு ஏற்பட்டது அவன் குற்றமல்ல, அவனுடைய துரதிருஷ்டம்.

அவர்களிடையே வெளிப்படையாகத் தகராறு ஒன்றும் ஏற்படவில்லை. கடிவாளமும் அறுந்துவிடவில்லை. இருக்கிறது, அதன் மூலமாகப் பிரதிபலித்த உயிர்த் துடிப்புத்தான் நின்றுவிட்டது. அவளாகத் தன்மேல் குறை கூறட்டும் என்று எதிர்பார்த்தான், ஆனால் அவள் புகார் பேசவேமாட்டாள் என்பதையும் அறிவான்.

"உமா, நீ புத்தகம் எழுதுவதாக என்னிடம் சொல்லவேயில்லையே ஏன்?" என்று ஆரம்பித்தான்.

"நீங்களும் கேட்கவில்லை......"

"இருந்தாலும்..............."

"வீட்டில் எப்படிப் பொழுது போக்குகிறேன் என்பதைத் தெரிந்துகொள்ளக்கூட இஷ்டப்படாதபோது......... அதைப்பற்றி நான் சொல்வதையும் விரும்பமாட்டீர்கள் என்று நினைத்தேன்."

"முன்பெல்லாம் சொல்லுவாயே—எல்லாவற்றையும்"

"முன்பெல்லாமா?" என்று பெருமூச்சு விட்டாள். பிறகு "அப்பொழுதும்உங்களுக்கு விருப்பமான விஷயங்களைத்தான் சொல்வேன்."

பிறகு மௌனம்.

ஒரே வீட்டில் இருக்கும் இருவர் சந்தோஷமின்றித் தனியாக இருந்துங்கூட அவர்களிடையே சண்டை சச்சரவோ, கடுமையான வார்த்தைகளோ - இல்லாமல் இருப்பது மிகவும் அதிசயந்தான். புருஷர்கள் கவனத்திற்குக்கூட வராத 'சின்ன' விஷயங்களினாலேயே ஸ்திரீகள் இன்பம் அடைகிறார்கள். அவைகளினாலேயேதான் அவர்கள் வாழ்க்கையில் இன்பம் சூன்யமாய் விடுகிறது என்பதைப் புருஷர்கள் அறிவதேயில்லை. இப்பொழுதுள்ள நிலைமைக்கு அவன் நாளாவட்டத்தில் நடந்துகொண்டது தானே காரணம்......ஏதோ நினைத்தவனாய் மெல்ல அவளையணுகி அவள் தோளைப் பிடித்தான்.

"உமா! நான் மிருகத்தனமாக நடந்துகொண்டேனென்று என்னிடம் சொல்லியிருக்கக் கூடாதா?"

அவன் ஸ்பரிசத்தால் அவள் தேகம் குன்றுவதை உணர்ந்து கைகளை எடுத்துவிட்டான்.

"நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லையே" என்று கூறினாள் நிதானமாக.

"உங்களைக் குறைகூறும்படி நீங்கள் என்னைக் கொடுமைப் படுத்தவில்லையே, கணவன்மேல் குற்றஞ் சாட்டிக்கொண்டேயிருக்

கும் ஸ்திரீகளைக்கூட எனக்குப் பிடிக்காது. உங்கள் இஷ்டப்படி நீங்கள் நடந்துகொண்டீர்கள், அதை நான் கேட்கவில்லை. எனக்கும் ஏதாவது வேலையிருப்பதால் புகாருக்கே இடமில்லை. முதலில் நீங்கள், பிறகு குழந்தை, இப்பொழுது எழுத்துவேலை.''

'முதலில் நீங்கள்'—என்ற வார்த்தைகள் அவன் முகத்தில் அறைவதுபோல இருந்தது.

அப்படியானால் இனிமேல் அவளுக்கு அவன் ஒன்றுமே இல்லையா? இறந்துபோன குழந்தையைப்போல அவள் வாழ்க்கையிலிருந்து அவ்வளவு விலகிவிட்டானா?

'இப்பொழுது என் எழுத்து வேலை!'—அப்படியானால்அவளிடம் அவனுக்குஇடமே இல்லையா? அவர்களுக்கிடையே தாண்ட முடியாத ஒரு பெரிய வேலியை அவள் நிர்மாணித்துவிட்டதுபோலல்லவா இருக்கிறது. அவள் அவன் காதலை விரும்பியபோது தன் சுயநல இன்பங்களுக்கு அடுத்தபடியாகவே அவளைக்கருதியிருந்தான், இப்போது அவளும் அவனைவிட முக்கியமாக வேறொன்றைக் கருத ஆரம்பித்துவிட்டாள்.

எழுத்தாளியாக இப்பொழுதுதான் அவளுக்கு முதல் வெற்றி. இனி வெற்றிமேல் வெற்றி கிடைக்கக் கிடைக்க அவர்களுக்கிடையேயுள்ள இடைவெளி இன்னும் அதிகமாகும். பிறகு அதைக் கடக்கவே முடியாது.

* * *

அவள் புகழ் மேலும் மேலும் அதிகரித்தது. எங்கே சென்றாலும் அவளைப்பற்றியே பேச்சு. அவள் எழுத்து வன்மையைப்பற்றியும், கற்பனா சக்தியைப்பற்றியுமே பாராட்டு. பொறாமைத் தீ சுட ஆரம்பித்தது அவனை. அவளுடைய வெற்றிக்காக அல்ல. உண்மையில் அவன் தன் கடமையைச் சரிவர நிறைவேற்றியிருந்தால் இந்த நிலைமையே ஏற்பட்டிருக்காது - ஆனால், அந்த வெற்றியில் தானும் பங்கிட்டுக்கொள்ள முடியவில்லையே—தன் விருப்பு வெறுப்புக்




# வின்ஸென்ட் கம்பெனி லிமிடெட், திருச்சி.

பிராஞ்சுகள்: மதுரை, திருநெல்வேலி, காரைக்குடி, கும்பகோணம், கோயம்புத்தூர், சேலம்.

வின்ஸென்ட் ஸோடா, கலர், விம்டோ, ரொட்டி, கேக்குகளை எல்லோரும் தாராளமாய் வாங்கி, குடும்பத்தில் யாவருக்கும் பந்துமித்திரர்களுக்கும் கொடுங்கள். ஏனெனில், இவைகள் கடந்த 30 வருஷமாய், பொதுஜனங்களின் நன்மதிப்பை நன்றாய் அடைந்திருக்கும் **வின்ஸென்ட் கம்பெனியாரால்** தயார் செய்யப்பட்டவை. மேலும் ஷை சரக்குகள் கல்யாணம், டீபார்ட்டி, திருவிழாக் காலங்களிலும் விருந்தினர்களுக்குச் சிற்றுண்டியாக வழங்க நேர்த்தியாய் அமைந்துள்ளன.

...காக அவள் காத்துக்கொண்டிருக்க வி...யே என்ற நினைவுகள்தான் அவனை வாதித்...

கர்வம் அவ... மீண்டும் பேசவொட்டா மல் தடுத்தது. ...லுக்கும் கர்வத்திற்கு மிடையே தத்தளித்...ன். இந்நிலையில் அவர்களுடைய இன்ப... வாழ்க்கையின் அஸ்திவாரத்தையே தகர்த்துவிடும்படியான வார்த்தையொன்று அவன் காதில் விழுந் தது. உமாவும் இன்னொருவனும்.........''

பொறுப்பற்ற தன்மையில் அக்கப்போர் பேசும் கசடர்கள் சம்பந்தப்பட்ட பேர் களின் வாழ்க்கையை அது எவ்வளவு தூரம் பாதிக்கும் என்று லவலேசமும் எண்ணு கிறார்களா? அவர்கள் காலப்போக்குக்கு அது ஒரு வெட்டிப்பேச்சு; அவ்வளவுதான்.

அந்த வார்த்தைகளே அவன் காதில் ஒலித் துக்கொண்டிருந்தன. வேகமாக வீட்டை யடைந்தான். அவள் வீட்டிலில்லை. எப் பொழுதும் வெளியில்தானா?

கதவைச் சாத்திக்கொண்டு அறைக்குள் உட்கார்ந்தான்.

'நம்பவே முடியாத விஷயம். உமா எனக்கு ஒருபொழுதும் துரோகம் செய்ய மாட்டாள். அப்படிப்பட்டவளல்ல. என் னைத்தவிர வேறு யாரையுமே அவள் காத லிக்கவில்லை. எந்த அயோக்கியனோ சொன் னதைக் காதில் வாங்கினதுகூட தவறு. அது வெறும் விஷமத்தனமான அக்கப்போர் தான். பொது வாழ்வில் ஈடுபடும் ஸ்திரீ களைப்பற்றி இப்படிப் பேசுவதுதான் சகஜ மாய்விட்டதே. அந்த வார்த்தைகளை நம்பி அவளை அவமானப்படுத்தமாட்டேன்......''

எழுந்து உலாவினான். இரவு மணி பத்து. இன்னுங்காணோமே......வெளியே போவ தாகச்சொன்னாள்...... ஆனால்...... என்னை யும் கூட வரும்படி கூப்பிட்டாளா?......... ஏன்?.........''

ஜன்னல் பக்கம்போய் வெளியே எட்டிப் பார்த்தான். வாசலில் ஒருகார் வந்து நின்றது. யாரது......? அவள்தான்......... காருக்குள் இன்னும்...........யார்? பேச்சுச் சப்தம் கேட்கிறதே. .........அவள் சங்கை யின்றிச் சிரிப்பதைப் பார்.........வெட்கங் கெட்ட.........

கோபமும் ஆத்திரமும் அவனைப்பிடித்து உலுக்கின, பழைய பயமும் அவநம்பிக் கையும் உயிர்பெற்றெழுந்தன.

உள்ளே நுழைந்தான்,

''எங்கே போயிருந்தாய்......?''

'கமலா சீனிவாசன் வீட்டிற்கு'

'கார் யாருடையது?'

'அவளுடையதுதான்'

'கூட வந்தது யார் ?'

'அவளுடைய தங்கை'

பதில்கள் தங்குதடையின்றி வந்தன. முக பாவத்திலும் ஒரு களங்கமுமில்லை. நிமிர்ந்து பார்த்தாள் ஆச்சரியத்துடன். என்றுமில் லாத குறுக்கு விசாரணை இன்று எதற்காக! அவள் கண்கள் அவன் கண்களையே உற்று நோக்கி ஊடுருவி ஆராய்ந்தன. அவன் மன திலிருந்த பொறுமைத் தீ அவிந்தது. அவள் நல்லவள்தான். அவன் கேள்விப்பட்டதெல் லாம் அபாண்டமான பச்சைப் பொய். காத லுக்காக என்ற தவறான சபலத்தினால் தமது தூய்மையையும் அததுடன் வாழ்க்கையின் நலத்தையும் இழந்துவிட்டுப் பரிதவிக்கும் ஸ்திரீகளை—எத்தனையோபேர்களை — அறிந் திருக்கிறான். அவர்கள் எங்கே—இவள் எங்கே—ஆனால்,.........

அவள் தோளைப் பிடித்து உலுக்கி-'இன்று உன்னைப்பற்றி என்ன கேள்விப்பட்டேன் தெரியுமா'

பதிலில்லை.

அவள் வெளுத்த முகம் சிவந்தது. தலை குனிந்தாள்,

பொறுமையினால் அவன் கண்களில் வீசிய ஒளி, அவனுடைய பழைய ஆர்வத்துடன் கூடிய ஒளியைப்போலவே பிரகாசித்ததைக் கண்டுதான் அவள் தலைகுனிந்தாள்—என்று அவனுக்கு எப்படித் தெரியும்? அவன் மூளை கலங்கியது. அவள் தோளைப் பிடித்திருந்த கைகளை எடுத்தான். படபடவென்று பேசி னான். என்ன ?—அவனுக்கே தெரியாது. அதைப்பற்றி அக்கறைப் படவுமில்லை. பித் துப் பிடித்ததுபோலவே இருந்தான். பிறகு ஒரே மௌனம்.

அவள் பேசவே இல்லை. ஆனால் அவன் மேல் வைத்த கண் வாங்காமல் பார்த்தாள். அந்தப் பார்வை அவன் உள்ளத்தையும் உயிர் நிலையையுமே ஊடுருவி ஆராய்வது போல இருந்தது. அதைச் சமாளிக்க முடி யாதவனைப்போல, திரும்பி முகத்தை மூடிக் கொண்டான். மீண்டும் போராட்டம். உண்மையாக இருக்கமுடியுமா? 'முடியாது' என்றது அவனுள்ளம். மற்ற ஸ்திரீகளைப் பற்றிய அக்கப்போர் தினசரி எவ்வளவோ அவன் காதில் விழுகிறது. அவைகளில் அநேகம் பச்சைப் பொய்கள் என்பதும்

அவனுக்குத் தெரியும். அதைப்போலத்தான் இதுவும்.........

தெருவில் ஒரு சிறுவன் பாடிக்கொண்டு போகிறான். அன்று கிருஷ்ண ஜயந்தியோ!

'கண்ணன் பிறந்தான்.........எங்கள் கண்ணன் பிறந்தான்.........''

அவள் இப்போது என்ன நினைத்துக் கொண்டிருந்தாள் என்பதை அவனும் அறிவான். காலியாகக் கிடக்கும் குழந்தைத் தொட்டில்......கடந்துபோன நாட்கள்...... அவள் இதயத்தை இன்பத்தால் நிறைக்க முயலாதது.................. இந்த நினைவுகளே அவனையும் உறுத்தின.

அவனும் அவளைச் சந்தோஷமாக வைத்திருக்கவே நினைத்திருந்தான். வேறெந்த மனிதனும் காதலிக்காத அளவிற்கு மனப்பூர்வமாகக் காதலிக்கவே எண்ணியிருந்தான்...... எண்ணினால் மட்டும் போதுமா? அவன் நடந்துகொண்டது.........?

இப்பொழுதுதான் என்ன?

இறந்த குழந்தையைப்பற்றிய நினைவு ஒருவாறு மறந்து தன்னிடம் இறுகியிருந்த இதயம் இளகியிருக்கும் — உளுத்துப்போன உறுதிமொழிகளை இனிமேலாவது நிறைவேற்ற இதுவே தகுந்த சந்தர்ப்பம்—என்று நினைத்தவனாய்,—

''உமா! என்னை.........மன்.........?''

அவனிடமிருந்து நகர்ந்தாள். கண்களில் நீர் தாரை தாரையாக வழிந்தது. உதடுகள் துடித்தன. மார்பு விம்மி விம்மி அழுங்கியது.

''என்னைப்பற்றிய அந்த......ஆபாச...... வார்த்தைகளை......நீங்களே......... நம்பினால், இனி நாம் ஒருவருக்கொருவர் சகஜமாக, அபிமானமாக, ஒருபொழுதும் இருக்கவே முடியாது. நெடுநாளாகவே நாம் வெகுதூரம் விலகிவிட்டோம். ஒருவரை ஒருவர் அபிமானிப்பதையும் விட்டுவிட்டோம். இனி நம்மை ஒன்றும் பாதிக்காது......''

சற்று நெருங்கினாள். அவளைத் தொடவில்லை. உடல் நடுங்கியது, உணர்ச்சியால் தொண்டை கம்மியது.

''நீ என்னை மன்னிக்காவிட்டால், அதுவும் சரிதான், நான் செய்ததற்கு. உனக்குக் கிடைத்த புகழ் உன்னை என்னிடமிருந்து பிரித்த பிறகுதான் — என் சுயநலத்தை உணர்ந்தேன். இப்பொழுது நீ என்னை விரும்பவில்லை. உன் வாழ்க்கையில் எனக்கு இடமே இல்லை. நீ என்னை விரும்பியபோது உன்னைக் கைவிட்டேன், ஆகவே இப்போது நான் அவதிப்படுவதும் நியாயந்தான். அன்றிரவு— நீ சொன்னாய், 'முதலில் நீங்கள், பிறகு குழந்தை. பிறகு எழுத்து[illegible] என்று. நீ சொல்லக்கூடிய வார்[illegible] எல்லாவற்றையும்விட அது சு[illegible]று என் மனதில் தைத்தது. நீ எவ்வளவு தனிமையாகக் காலம் கழித்தாய் என்றோ— வேறு எந்தவிதமான புகாரும் சொல்லவில்லை. நான் உன்னை விட்டுவிட்டு என் வழியே போனதுபோல இப்போது நீ என்னைக் கவனிக்காமல் உனக்கு இஷ்டமான காரியங்களையே கவனிப்பதும் நியாயந்தான்.''

அதோடு நிறுத்திக்கொண்டான். பிறகு மௌனம்.

அவன் சிந்தனை எதிர்காலத்திற்குத் தாவியது. எதிர்காலம் இருண்டு கிடந்தது.

'கடமையில் தவறியவனுக்குத் தகுந்த தண்டனைதான். அவளுக்கு நான் இனித் தேவையில்லை. என்னுடைய காலி இடத்தையும் நிரப்பிவிட்டாள். அவள் தன் கவலைகளை உலகமறிய வெளிக்குக் காட்டாமல் கண்யமாக நடந்துகொண்டது போலவே... நானும்... அவள் காதலிக்காவிட்டாலும்...'

அவளை நெருங்கி ஒரு கையை மெதுவாக அவள் தோளின்மேல் வைத்தான். முன்போல் அவள் உடல் குன்றவில்லை. அவனுடைய கைகளையும் உதறித்தள்ளவில்லை. கண்களை நிமிர்த்தி அவனைப் பார்க்கவுமில்லை. ஆனால் கண்களில் நீர் வழிந்தது, முகம் வெளுத்திருந்தது, உதடுகள் துடித்தன.

அவளையே சற்றுநேரம் பார்த்தான் மௌனமாக. பிறகு ''உமா, நீ மட்டும் இஷ்டப்பட்டால்......... நாம் பழைய நிலையை அடையமுடியாதா?............ நீ என்னைக் கொஞ்சங்கூட நேசிக்கமுடியாதா............ நீ விரும்பியதையெல்லாம் அடைந்துவிட்டாலுங்கூட.........''

தலை நிமிர்ந்தாள், அவனைப் பார்த்தாள்.

''நான் விரும்பியதெல்லாமா? நான் உங்களையும் குழந்தையையும்தவிர வேறொன்றையுமே விரும்பியதில்லையே?''

தெருவில்...''கண்ணன் பிறந்தான்......... எங்கள் கண்ணன் பிறந்தான்.........''

அதைக்கேட்டதும் தேம்பித் தேம்பி அழுதாள். பார்வையெல்லாம் காலியாகக் கிடந்த குழந்தைத் தொட்டிலின் மேல்தான். அவனும் பார்த்தான்; தன் குற்றத்தை உணர்ந்தான்.

''கண்ணன் பிறப்பான்'' என்று சொல்லிக்கொண்டே உணர்ச்சி மேலிட அவளை மார்புடன் இறுகத் தழுவிக்கொண்டு குனிந்தான்—அவனை மன்னித்ததின் அறிகுறியாக அவள் தரும் முத்தத்தை ஏற்றுக்கொள்ள.

# புத்தக விமர்சனம்

29019
000 008

## ிருக்கடவூர்த் திருப்பதிகங்கள்

*(தருமபுர ஆதீன வெளியீடு—எண் 85)*

இது, சோழநாட்டுச் சைவத்திருப்பதிகளுள் சிறந்த ஒன்ருய் விளங்கும் திருக்கடவூரிலே எழுந்தருளி விளங்கிக்கொண்டிருக்கும் சிவபெருமானைப்பற்றி ஸ்ரீ ஸம்பந்தர் ஸ்ரீ வாகீசர், ஸ்ரீ ஸுந்தரர் ஆகிய மூவரும் பாடிப்பரவிய தேவாரப் பதிகங்களையுடையது; ஓதுவார்க்கு உறுபயன் தருவது; திருக்கடவூர்த் தலச்சிறப்பும் சேர்க்கப்பெற்றுள்ளது. வனப்பு வாய்ந்த பதிப்பு. விலை குறிக்கப்பெறவில்லை.

## Sivagnana Botham—
## (சிவஞான போதம்)

*(தருமபுர ஆதீன வெளியீடு 86)*

இது சைவ சித்தாந்த சாத்திரம் பதினன்கனுள் ஒன்று. ஸ்ரீ மெய்கண்ட தேவர் இயற்றியருளியது; சூத்திரம் கருத்துரை, வார்த்திகம், சூர்ணி, சூத்திரக்கண்ணழிரைகளோடு கூடி மிளிர்வது.

ஸ்ரீ மெய்கண்டதேவர் இந்நூலிலடங்கிய ன்னிரண்டு சூத்திரங்களையும் வடமொழி ரளரவ ஆகமத்திலிருந்து மொழிபெயர்த்நளினரென்பர்.

மிகச்சிறந்த இந்நூலுக்குத் திருவாவடுறை ஆதீனத்தைச் சார்ந்த ஆசிரியர் சிவனமுனிவரென்பார் திட்ப நுட்பஞ்ந்த ஒரு பேருரை இயற்றியுள்ளார். இவ்ரை "திராவிட மாபாடியம்" என அறிஞர் ாற் கொண்டாடப்படுவது.

இந்நூல் உரை பொருள்களைத் தமிழ் மாழியில் வல்லுநரல்லாதாரும் உணரவண்டி. அறிஞர் J. M. நல்லசாமிப் பிள்ளை ங்கில மொழிபெயர்ப்பாகச்செய்து உதனர்.

ஸ்வாமி விவேகாநந்தர் இந்து மதத்திற்கும் வடமொழிக்கும் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் புகழ் பெருகச் செய்துள்ளதைப்போல அறிஞர் J. M. N. பிள்ளையவர்கள் சைவசித்தாந்தத்திற்கும் தமிழ் மொழிக்கும் புகழ் பெ[illegible]கச் செய்துள்ளார்.

[illegible] மொழிபெ[illegible]த் தருமையா[illegible]

சாரிய சுவாமிகள் அச்சிடுவித்து, தக்க காலத்திலே தக்க இடத்திலே தக்கார் முன்னிலையில் வெளியிட நியமித்தருளியது பெரிதும் பாராட்டற்குரிய செயலாகும்.

சைவத்துக்கும் தமிழுக்கும் இவ்வாதினத்தார் இக்காலத்திலே அரும் பெரும் பணி ஆற்றிவருகிருர்கள் என்பது எம் கருத்து. [விலை ரூ. 3—0—0 போஸ்டேஜ் அணு 3]

## சோமவார விரதம்

*(தருமபுர ஆதீன வெளியீடு—எண் 87)*

இந்நாலில் சைவர்கள் விரதங்களுள் ஒன்ருகிய சோமவார விரதத்தின் சிறப்பும் அதனை அனுட்டிக்கவேண்டிய முறையும் இம் முறைப்படி அனுட்டித்தவர்களும் அவர்கள் பெற்ற பேறும் திருவிளையாடற் புராணத்திற் கூறப்பட்டிருப்பவற்றைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளன. கையடக்கமான பதிப்பு, விலை குறிக்கப்பெறவில்லை.

## புது மெருகு

கி. வா. ஜகந்நாதன் எழுதியது. கலைமகள் பிரசுராலயப் பிரசுரம். விலை ரூ. 1—8—0

பழைய இலக்கியங்களிலும் உரைகளிலும் மறைந்து கிடக்கும் நிகழ்ச்சிகளையும் கருத்துக்களையும் பொறுக்கி, சுவை மிகுந்த எளிய நடையில் பண்டிதர் ஜகந்நாதன் பத்திரிகைகளில் அவ்வப்போது எழுதிவந்துள்ளார். அவைகளுள் சிலவற்றை ஒன்று திரட்டி இப்புத்தக உருவத்தில் இப்பொழுது தந்துள்ளார். இது முதற்பதிப்பு. அடுத்தடுத்து அனேகப் பதிப்புக்கள் வரும். ஆகவே அவைகளை வெளியிடும்பொழுது இப்பதிப்பில் காணப்படும் கடைசிகட்டுரையான 'கற்பூர நாயக்கர்' என்பதைச் சேர்த்துக்கொள்ளவேண்டியது அவசியம்தானு என்பதையும், கட்டுரைகளுக்கு ஆதாரமான செய்யுள் முதலியவைகளைக் கடைசியில் கொண்டுபோய் ஒதுக்கிவிடவேண்டியதுதானு என்பதையும் ஆலோசிப்பார் என்று நம்புகிருேம். இயன்றவரையில் கருத்துக்களை விளக்கும் சித்திரங்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

## அரும்பு

வி. ஸ். காண்டேகர் எழுதி, கா. ஸ்ரீ. ஸ்ரீ. [illegible]மொழிபெயர்த்து, கலைமகள் காரியாலயம் விலை ரூ. 1—4—0

21901?

சிறு கதை வேறு. உருவக்கதை வேறு. பஞ்சதந்திரக் கதைகளைப் படித்துப் பழகியவர்களுக்கு உருவக்கதைகள் புதியனவல்ல. ஆயினும் காண்டேகர் கையாளும் விதமும் விஷயமும் நமக்குப் புதியவையாகும். இந்தப் புத்தகத்தில் 82 பக்கங்களுக்குள் 24 கதைகளும் 11 பக்கங்களில் ஒரு விளக்க முன்னுரையும் காணப்படுகின்றன. முன்னுரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறபடி "இமையும்படியான குறைந்த சொற்களைக் கொண்டு சூழ்நிலையை உண்டாக்கி உண்மையான வாழ்க்கையையும் வாழ்க்கை மதிப்புக்களையும் வாசகர்களுக்குத் தீவிரமாக உணர்த்தவல்ல உருவக்கதை என்னும் இலக்கிய உருவம் காவியத்துக்குச் சமமானது" என்பது இப்புத்தகத்திலுள்ள கதைகளுக்குப் பொருத்தமானதே. பரந்த உண்மையைக் குறிப்பாகத் தெரிவிப்பதுடன் சிந்தனையையும் உணர்ச்சியையும் தூண்டும் தன்மையில் இவைகள் இணையற்றவைகளே.

## வாடா மலர்

*தி. நா. சுப்ரமணியன் எழுதியது. கலைமகள் காரியாலயப் பிரசுரம். விலை ரூ. 1-4-0*

தமிழர்களது பண்டைப் போர் முறையும் உளப்பண்பும் கடல் கடந்த வாணிபமும் விவரிக்கப்படும் இக்கற்பனைக் கதையைப் படித்து ஒவ்வொரு தமிழனும் பெருமிதம் கொள்ளவேண்டும். சாம்ராஜ்ய பித்தப் பிடித்த யவனர்களுடன் வாணிபம் செய்யச்சென்ற ஒரு தமிழ் வாலிபன் யௌவன மங்கையை மணந்து தன் நாட்டுக்குத் திரும்பி வருகிறான். ஆனால் அம்மங்கை அரசாளும் குலத்தில் உதித்த தன்னை தமிழர் நாகரிகம் ஏளனம் செய்வதாக எண்ணி ஏங்கி, தன் நாடு திரும்பவே துடிக்கிறாள். கதையும் இனிமையாக இருக்கிறது. மனநிலை வர்ணனையும் நன்றாக அமைந்திருக்கிறது.

## சீனத்தலைவர் சியாங்கே-ஷேக்

*ஆசிரியர் ப. ராமஸ்வாமி. கலைமகள் காரியாலய வெளியீடு. விலை ரூ. 3-0-0*

அழகான புத்தகம். தேச பக்தர் ஒவ்வொருவரும் வாங்கிப் படிக்கவேண்டியது. "சீனாவை நாங்கள் முதலிலேயே ஜயித்து விட்டோம். ஆனால் சீனா தன் தோல்வியை ஒப்புக்கொள்ளமாட்டேன் என்று சாதிக்கிறது" என்று யுத்த ஆரம்பத்தில் ஜப்பானிய தளகர்த்தர்கள் சொல்லிவந்தார்களாம்' சீனாவை ஜப்பான் ஜயிக்கவில்லை, ஜயிக்கவும் முடியாது: அதற்கடிப்படை காரணம் கோமின்டாங் கம்யூனிஸ்ட்டுகளின் ஐக்யமுன்னணிதான். இந்த முன்னணி இன்றும் நீடிக்கு... உலக முன்னணியில் ... நிற்கு... நீடிக்குமா என்பது தா...ன்றைய கவ...

## கதை விருந்து

*யோகி சுத்தானந்த பாரதியார் எழுதிய... அன்பு நிலையம் வெளியீடு. விலை ரூ. 1-8-...*

பழைய கதைகள் தாம். ஆயினும் ர... மாகச் சொல்லப்பட்டுள்ளன.

## வஸந்தஸேனை

*எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் எழு...யது. மங்களநூலக வெளியீடு. நுங்க...பாக்கம், சென்னை. விலை 1-4-0*

வடமொழி மிருச்சகடிக நாடகத்தின் கதை இது. கதைப்போக்கில் ஆங்காங்கு அறநெறிகளும் வலியுறுத்தப்பெற்றுள்ளன.

## நயீ ஹிந்துஸ்தானீ

*தக்ஷிணபாரத ஹிந்து பிரசார ஸபை... பிரசுரம். விலை ரூ. 0—4—0*

ஹிந்துஸ்தானியைத் தமிழ் எழுத்திலே... கற்க உபயோகப்படவேண்டும் என்று இ... புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. இ... யும் இதற்கடுத்த வெளியீட்டையும் படி... விட்டு, பரீக்ஷையும் தேறி, மஹாத்மாஜியி... கைப்படவே நற்சாக்ஷிப் பத்திரமும் பெ... லாம் என்றால் படித்துத்தான் பார்ப்போ... என்று ஒவ்வொருவருக்கும் தோன்றத்த... தோன்றும்.

## Utilisation of India's Man Pow...

by P. S. Naidu. Oriental Publicity ... Bombay. 2—0—0.

தொழிலாளியின் மனோதத்வத்தை அறி... கொள்ள முற்படாது திட்டங்கள் வகுக்... முதலாளித்வத்துக்கு இது ஓர் எச்சரிக்... 

## Studies in the Ramayana

by Sahiteevallaba Sundarachariar
P. Varadachary & Co., Madras. 2—8—...

பழைய இலக்கியத்தில் இவ்வளவு புதிய கருத்துக்களை விளக்கும் இவ்வாசிரியர் தமிழிலேயே ஏன் இப்புத்தகத்தை எழுதியிருக்கக்கூடாது? உயர்ந்த விஷயத்தோடு எளிய நடையும் சே... கொள்ளுமே.

Edited & Published by N. R. R... ...ujan & ...
at the Cauve... ...